விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 மாசி 16 வெள்ளிக்கிழமை (28.02.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 071

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## ஜெனிவா அமர்வு குறித்து எதுவுமே பேச வேண்டாம்

– உறுப்பினர்களுக்கு வாய்ப்பூட்டு போட்டார் சம்பந்தன்



(யாழ்ப்பாணம்)
ஜெனிவாவில் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கூட்டத் தொடர் பற்றி எதுவுமே பேச வேண்டாம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வாய்ப்பூட்டு போட்டார் அக்கட்சியின் தலைவர் இரா. சம்பந்தன்.

இதேவேளை கூட்டமைப்பின் தலைவரின் உத்

19 ஆம் பக்கம் பார்க்க..

## இரணைமடு-யாழ். குடிநீர்த் திட்டம் இப்போதைக்கு சாத்தியமில்லை

### சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)
இரணைமடு-யாழ். குடிநீர்த் திட்டம் அனைத்து விவசாயிகளையும் பாதிக்காத வகையில் மாற்றியமைக்கப்படவுள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

குறித்த திட்டம் தொடர்பான கூட்டம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா சம்பந்தன் தலைமையில் யாழ். பொது நூலகத்தில் நேற்றுக்காலை 9 மணி முதல் பி.ப 4.30 மணி வரை தொடர்ந்து நடைபெற்றுள்ளது.

இச்சந்திப்பின் பின்னர் செய்தியாளரிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாண முதலமைச்சர் நியமித்த நிபுணர்

20 ஆம் பக்கம் பார்க்க..

# விடுதலைப் புலிகளை தடைசெய்தது தவறு

## ஐரோப்பிய நீதிமன்ற நீதிபதிகள் கவலை

ஐரோப்பிய ஒன்றியம் கடந்த 2006 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை தடைசெய்ய பயன்படுத்திய மூல ஆதாரங்களில் முக்கிய குறைபாடுகள் இருப்பது லக்ஸம்பேர்க்கில் உள்ள ஐரோப்பிய நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட உண்மையான ஆதாரங்களின் மூலம் தெரியவந்துள்ளது.

(19ஆம் பக்கம் பார்க்க...)

## யாழ். பல்கலை மாணவி பாம்பு தீண்டி உயிரிழப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மகிழூர் 110 பி. கிராமத்தில் பாம்பு தீண்டியதாக சந்தேகிக்கப்படும் யாழ். பல்கலைக்கழகத்தின் முதலாம் வருட மாணவியான கங்காதரன் மாதுவி (வயது 22) என்பவர்

19 ஆம் பக்கம் பார்க்க..



இந்துக்களின் புனித நாளான மகா சிவராத்திரி தினத்தில் ஈழத்தின் வரலாற்று சிறப்பு மிக்க, பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான யாழ். கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தின் தேர்த் திருவிழா நேற்றுக் காலை இலட்சக்கணக்கான பக்தர்களின் அரோகரா ஆராதனை முழங்க இடம்பெற்றது.

## சாந்தன், பேரறிவாளன், முருகனின் தடை உத்தரவுடன்

## நளினி உட்பட நால்வருக்குமான விடுதலைக்கு தடை விதிப்பு!

ராஜிவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்டு சிறையில் இருக்கும் நளினி உள்ளிட்ட நான்கு ஆயுள் தண்டனைக் கைதிகளை விடுவிக்க தமிழக அரசு எடுத்த முடிவுக்கு இந்திய உச்சநீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்திருக்கிறது.

தமிழக அரசின் இந்த முடிவுக்கு மார்ச் 6-ம் தேதி வரை இடைக்கால தடை விதித்து, தமிழக அரசுக்கு உச்ச நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.



நளினி உள்ளிட்ட 4 குற்ற வாளிகளை தமிழக அரசு விடுவிப்பதை எதிர்த்து பெப்ரவரி 24ஆம் தேதி உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு தாக்கல் செய்த மனு விசாரணையில் இந்த உத்தரவு அளிக்கப்பட்டது.

கடந்த வாரம் முருகன், சாந்தன் மற்றும் பேரறிவாளன் ஆகிய மூவரின் விடுதலைக்கு உச்ச நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்திருந்தது. அந்த இடைக்கால தடை உத்தரவுடன் சேர்த்து

19 ஆம் பக்கம் பார்க்க..

## ஜனாதிபதி ஆணைக்குழுவில் நம்பகத்தன்மை இல்லை!

### தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கண்டனத் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)
காணாமல் போனோர் பற்றி விசாரணை செய்யும் ஜனாதிபதியின் ஆணைக்குழுவில் நம்பகத்தன்மை இல்லையெனவும் ஆணைக்குழுவின் செயல்பாட்டை கண்டிப்பதாகவும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

யாழ். பொது நூலகத்தில் நேற்று நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களின் கூட்டத்தின் போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இத்தீர்மானத்தை நிறை வேற்றியுள்ளது.

இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் எம் ஏ. சுமந்திரன் தெரிவிக்கையில்,

காணாமல் போனவர்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதியின் ஆணைக் குழுவின் செயற்பாடு நம்பகத் தன்மையற்றது என்று இன்றைய (நேற்றைய) தினம் கூடிய தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இந்த ஆணைக்குழு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் பகிரங்க விசாரணைக்காக வருகை தந்த போது அருகாமையில் இன்னொரு கூட்டத்தை நடத்தி ஆணைக் குழு முன்

20 ஆம் பக்கம் பார்க்க..

## புலி இயக்கங்களை தடை செய்யுங்கள்

(சென்னை)
தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரிக்கும் இயக்கங்களை இந்தியாவின் மத்திய, மாநில அரசுகள் தடை செய்ய வேண்டுமென தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் ஞான தேசிகன் வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் உள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி

20 ஆம் பக்கம் பார்க்க..

## குற்றச்செயல்களை இலங்கை தண்டிக்குமென நம்பிக்கையில்லை

– பிரித்தானியா தெரிவிப்பு

(கொழும்பு)
இலங்கை அரசு குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கும் என்பதில் நம்பிக்கை கிடையாது என பிரித்தானியா அறிவித்துள்ளது.

இது தொடர்பில் வெளியாகியுள்ள அறிக்கையில் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகள், காணாமல் போனோர் தொடர்பான விசாரணைகள் போன்றன தொடர்பில் நம்பிக்கை கொள்ள முடியாது.

சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மற்றும் மனித உரிமைச் சட்டங்கள் மீறப்பட்டமை தொடர்பில் நம்பகமானதும் சுயாதீன

20 ஆம் பக்கம் பார்க்க..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டாரவன்னியனை பார்வையிட்ட புலனாய்வு

(யாழ்ப்பாணம்)

தீவகம் தம்பாட்டி கிராமத்தில் கிராம நிகழவில் மேடை ஏற்றுவதற்காக தயார்படுத்தப் பட்டுக்கொண்டிருந்த பண்டாரவன்னியன் நாடகத்தை இடைநிறுத்தும் முயற்சியாக கடந்த 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பொலிஸார் குறித்த பகுதிக்கு சென்று குறித்த நாடகத்தை பழக வேண்டாம் என தடை விதித்துள்ளனர்.

இதன் பின்னர் நேற்று குறிப்பிட்ட மக்கள் நீதி கேட்பதற்காக பொலிஸ் நிலையம் சென்ற போது அந்நாடகத்தை தாம் பார்வையிட வேண்டும் என பொலிஸ[illegible] வற்புறுத்தியுள்ளனர். பின்னர் பொலிசாரோடு புலனாய்வுத் துறையினரும் இணைந்து சுமார் நான்கு மணி நேரமாக குறிப்பிட்ட நாடகத்தின் காணொளி காட்சிகள் மற்றும் நாடக வசனங்களை பார்வையிட்டுள்ளனர்.

இச் சம்பவம் குறித்து வட மாகாண சபையின் உறுப்பினர் கஜதீபன் கூறுகையில்,

தமிழர்களுடைய வீரம் செறிந்த வரலாற்றோடு உணர்வு பூர்வமாக கலந்துவிட்ட மாவீரன் பண்டாரவன்னியனின் வரலாற்றை மீள நினைக்கக்கூடாது என்கின்ற சிந்தனையோடு இவ்வாறான செயற்பாடுகள் இடம் பெறுகின்றன.

இது மக்களுடைய உரிமையை நேரடியாகவே மறுக்கின்ற ஒரு சம்பவமாகும்.

இவ்வாறான செயற்பாடுகள் மூலமாக தமிழர் களுடைய உணர்வுகளை கட்டுப்படுத்திவிட முடியும் என யாராவது கருதுவார்களேயானால் அது மிகப்பெரிய முட்டாள் தனமாகவே இருக்கும். இவ்வாறான செயற்பாடுகள் தமிழர்களுடையு உணர்வுகளை தொடர்ச்சி யாகவே சீண்டிப்பார்ப்பதாக அமைகின்றது என குறிப்பிட்டார். (செ-6)

# மலேசியாவில் கடத்தப்பட்ட இலங்கைப் பெண் மீட்பு

## மூவர் கைது

இலங்கை பெண் ஒருவர் கடத்தப்பட்ட சம்பவத்தில் இலங்கையை சேர்ந்த மூன்று பேர் மலேசியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கோலாலம்பூரில் உள்ள வங்கசா, மெலாவிட்டி பகுதியில் வைத்து கடத்தப்பட்ட இலங்கை பெண், பத்துமலை பகுதியில் உள்ள வீடொன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

அந்த வீட்டை முற்றுகையிட்ட பொலிஸார், பெண்ணை மீட்டதுடன் அங்கிருந்து மூன்று இலங்கை பிரஜைகளையும் கைது செய்துள்ளனர்.

20 வயதான இந்த இலங்கை பெண்ணை சந்தேக நபர்கள் மூன்று நாட்களாக அந்த வீட்டில் தடுத்து வைத்திருந்தாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் வெளிநாட்டு பெண்களை வீட்டுப் பணிப் பெண்களாக அனுப்பி வைக்கும் முகவர்களாக காட்டி அந்த பெண்ணை உள்ளூர் மருத்துவர் ஒருவர் வீட்டில் பணிப் பெண்ணாக சேர்த்திருந்ததுடன், அவர் மூன்று மாதமாக வீட்டில் உதவியாளராக பணிபுரிந்து வந்துள்ளார்.

பணிப் பெண்ணை வேலை அமர்த்துவதற்காக சந்தேக நபர்கள் சில ஆயிரம் ரிங்கிட்டுகளை மருத்துவரிடம் கோரியிருந்ததுடன் அவர் அதனை அவர்களுக்கு வழங்கியிருந்தார்.

இந்த நிலையில், வீட்டில் பணியாற்றிய பெண் திடீரென காணாமல் போன நிலையில் மருத்துவர் முறைப்பாடு செய்துள்ளார். இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்து பெண் மீட்கப்பட்டதுடன் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எவ்வாறாயினும், இலங்கை பெண் கல்வி பயிலவே மலேசியாவுக்கு சென்றிருந்தாக விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதற்காக அந்த பெண் செலுத்த வேண்டிய 8 ஆயிரத்து 500 ரிங்கிட் பணத்தை பெறுவதற்காக சந்தேக நபர்கள் அவரை கடத்திச் சென்றுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் விளக கமறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட உள்ளதாக பொலிஸார் கூறினர். (செ-6)

# 87 இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 87 பேரில் 45 பேரை மார்ச் மாதம் 11ஆம் திகதி வரையிலும், 42 பேரை மார்ச் 12ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி செல்வநாயகம் லெனின்குமார் நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

ஜனவரி 30ஆம் திகதி நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட இராமேஸ்வரம் பகுதியிலிருந்து 8 படகுகளில் வந்த 38 மீனவர்களும், பெப்ரவரி 1ஆம் திகதி காங்கேசன்துறை கடற்பரப்பில் வைத்து கைதுசெய்யப்பட்ட ஜகதாப்பட்டினத்திலிருந்து 5 ரோலர்களில் வந்த 19 மீனவர்களும், பெப்ரவரி 3ஆம் திகதி காங்கேசன்துறை கடற்பரப்பில் வைத்து கைதுசெய்யப்பட்ட இராமேஸ்வரம், இராமநாதபுரம், தஞ்சை ஆகிய பகுதிகளிருந்து 8 படகுகளில் வந்த 30 மீனவர்களும் ஏற்கெனவே ஊர்காவற்றுறை நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் மேற்படி மீனவர்களின் வழக்கினை நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதவான், மீனவர்களை சிறைச்சாலையிலிருந்து நீதிமன்றத்திற்கு கொண்டு வந்து கொண்டு செல்வதில் இருக்கும் சிரமத்தினைக் கருத்திற்கொண்டு, பெப்ரவரி 1ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட 19 மீனவர்களில், ஜனவரி 30ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட மீனவர்களின் வழக்குடன் 4பேரையும், பெப்ரவரி 3ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட 30 மீனவர்களின் வழக்குடன் 15 பேரையும் இணைத்து இரண்டு வழக்குகளாக மாற்றியதுடன் அவர்களுக்கான விளக்கமறியலை நீடிக்கவும் உத்தரவிட்டார். (செ-6)

# உயிரிழந்த கைதி கோபிதாஸின் இறுதிக்கிரியைகள் புலோலியில்



கொழும்பு மகசின் சிறைச்சாலையில் உயிரிழந்த விஸ்வலிங்கம் கோபிதாஸின் இறுதிக் கிரியைகள் அவரது சொந்த ஊரான வடமராட்சி புலோலியிலுள்ள அவரது சொந்த இல்லத்தில் நடைபெறவுள்ளது.

பிரித்தானிய குடியுரிமை பெற்ற தமிழ் அரசியல் கைதியான விஸ்வலிங்கம் கோபிதாஸ் (வயது43) கடந்த 24 ஆம் திகதி சிறைச்சாலை மலசல கூடத்திற்கு அருகில் சடலமாக மீட்கப்பட்டார்.

இந்த நிலையில், கோபிதாஸின் இறுதி கிரியைகள் நீதிமன்ற உத்தரவிற்கமைய எதிர் வரும் 02 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு வடமராட்சி புலோலி வடக்கிலுள்ள அவரது சொந்த இல்லத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த 2007 ஆம் ஆண்டின் மார்ச் மாதம இவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து, விடுதலைப் புலிகளுக்கு உதவினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டிருந்தார்.

தொடர்ந்து 4ஆம் மாடியில் விசாரணைக்குட்படுத்தப்பட்ட பின்னர் பூஸா தடுப்பு முகாமில வைக்கப்பட்டு மகசின் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டார்.

மகசின் சிறைச்சாலையில் இரண்டு தடவைகள் ஏற்பட்ட கலவரத்தில் அங்கிருந்த சக கைதிகள் இவரைக் கொலை செய்ய முயற்சிக்கப்பட்டிருந்ததாக கூறப்படுகிறது.

இதேவேள்ளை, கோபிதாஸ் குறித்து வட மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கூறுகையில்,

தமிழ் இனத்துக்காக தனது இன்னுயிரை தியாகம் செய்த கோபிதாஸ் இறுதி அஞ்சலி செலுத்த பொதுமக்கள் தமிழ் உணர்வாளர்கள் அரசியல்வாதிகள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்த வேண்டும்.

இவரது மரணத்தில் பல சந்தேகங்கள் உளளது தமிழ் அரசியல் கைதிகள் பல வருடங்களாக விசாரணைகள் எதுமின்றி சிறைச்சாலையில் பல கைதிகள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனா். இதன் எடுத்துக் காடடாக கோபிதாஸ் மரணமும் நிகழ்ந்துள்ளது. இந்த அரசாங்கம் அப்பாவி தமிழ் அரசியல் கைதிகளை பொதுமன்னிப்பு வழங்கி உடனடியாக விடுவிக்க வேண்டும் இல்லாவிட்டால் கோபிதாஸ் போன்று பல அரசியல கைதிகள் தொடர்ந்தும் மா்மமான முறையில் மரணமடைய நேரிடும் என தெரிவித்தார். (செ-24)

# யாழ்.மாநகரசபை வாகனங்களில் ஜி.பி.எஸ் டிரக்கர் கருவி பொருத்தம்

மோசடிகளைத் தவிர்க்கும் முகமாக யாழ்.மாநகர சபையிலுள்ள வாகனங்களில் "ஜி.பி.எஸ் டிரக்கர்" கருவி பொருத்துவதற்காக யாழ்.மாநகர முதல்வரினால் கொண்டு வரப்பட்ட தீர்மானம், சபை உறுப்பினர்களின் ஆதரவுடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர சபையின் மாதாந்தப் பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் புதன்கிழமை மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெற்ற போதே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பாக முதல்வர் கருத்துக் கூறுகையில்,

யாழ். மாநகர சபையின் வாகனங்களில இடம்பெறும் டீசல் திருட்டுக்கள், வாகனம் பாவிக்கப்படும் விதம், அத்துடன் வாகனங்களில் பயணம் செய்தவர்கள் யார் என கண்டு பிடிப்பதற்காக இந்தக் கருவி பொருத்தப்படவுள்ளதாக அந்த தீர்மானத்தில் தெரிவிக்கப் பட்டது.

மாநகர சபையின் ஒரு வாகனத்தில் மேற்படி கருவி பொருத்தப்பட்டு பரீட்சார்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, தொடர்ந்து 5 வாகனங்களில் முதற் கட்டமாக இந்தக் கருவி பொருத்தப்படவுள்ளன.

இந்தக் கருவிக்காக மாதாந்தம் 1300 கட்டணம் செலுத்த வேண்டும என்பதுடன், வாகனங்களில் பயணம் செய்பவர்கள் ஏதாவது பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடும் போது, அது தொடர்பான 6 மாத கால தரவுகளை இந்தக் கருவியின் மூலம் பெற முடியும் என முதல்வர் மேலும் தெரிவித்தார்.

(செ-6)


## பணியாளர் வேண்டுகை



இரணைமடுதிருவருள்மிகு கனகாம்பிகை அம்பாள் ஆலயத்திற்கு பாதுகாப்பு பணியாளர் தேவை.

தகுதி யான ஆண்கள் 2014.03.05ஆந் திகதி காலை 10 மணிக்கு ஆலயத்திற்கு நேரில் சமுகம் அளிக்கவும்.

மேலதிக விபரங்கள் தேவைப்படின் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர் 0778065315
செயலாளர் 0778691045
பொருளாளர் 0778889197

நிர்வாகசபை,
திருவருள்மிகு
கனகாம்பிகை
அம்பாள் கோவில்,
இரணைமடு – கிளிநொச்சி.

(சி-6610)

வலம்புரி விளம்பர
021 321 0815,
021 567 1532


# மாத்திரை அதிகமானதால் உயிர் பறிபோனது

உயரழுத்த நோய்க்குரிய மாத்திரைகளை அதிகளவில் உட்கொண்டு ஆபத்தான நிலையில் சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஆண்டிகம, நாகவில புத்திபெதும்கம பிரதேசத்தைச் சேர்ந்த இணைப்புச் செயலாளர் எஸ்.எம்.ரணசிங்க காமினி (வயது 52) சிகிச்சை பலனின்றி நேற்று வியாழக்கிழமை அதிகாலை உயிரிழந்ததாக சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம் மாவட்டத்தின் தென்னை அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட பிரதியமைச்சர் விக்டர் அன்டனி பெரேராவின் இணைப்புச் செயலாளராக இவர் பணியாற்றி வந்துள்ளார்.

குளியாப்பிட்டியில் "தேசத்திற்கு மகுடம்" கண்காட்சியை தனது பிள்ளைகளுடன் கடந்த செவ்வாய்க்கிழமை பார்வையிட்ட இவர், பிள்ளைகளை வீட்டுக்கு அனுப்பி விட்டு [illegible]ச்சிக்கட்டு பிரதேசத்திலுள்ள உறவினர் வீட்டில் தங்கியிருந்துள்ளார். இந்நிலையில், இவர் உயரழுத்த நோய்க்குரிய மாத்திரைகளை அதிகளவில் உட்கொண்ட நிலையில் சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இதனை அறிந்து சிலாபம் வைத்திய சாலைக்குச் சென்று பார்த்தபோது தனது கணவர் உயிரிழந்திருந்ததாக இவரின் மனைவி கங்கா சுவர்ணலதா (வயது 45) வாக்குமூலத்தில் கூறியதாகவும் பொலிஸார் கூறினர்.

தனது கணவர் உயரழுத்த நோய்க்கான மாத்திரைகளை உட்கொள்பவரென்வும் மனைவி கூறினார். இவர் 03 பிள்ளைகளின் தந்தை ஆவார்.

இது தொடர்பான விசாரணைகளை சிலாபம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (செ-11)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## பொறாமை

பொறாமை உணர்ச்சி இருக்கிறதே, அது தான் பல பிரச்சனைகளுக்கு அடிப்படை. மற்றவர்களைப் பார்த்து பொறாமைப்படுவதை விட, நாமும் அவர்களைப் போல சிறப்பாக இருக்க கடுமையாக உழைக்க வேண்டும் என்று நினைக்க வேண்டும்.

குறுக்கு வழியில் அவர்களை எப்படி தாண்டுவது என்று நினைத்தால் சிக்கல்கள்தான் வரும் . இது நம்முடைய அன்றாட வாழ்க்கையில் மட்டுமல்ல, மிகப்பெரும் மகான்களின் வாழ்க்கையிலும் அப்படித்தான் நடந்திருக்கிறது. உதாரணமாக , சமண மதத்தின் தீர்த்தங்கரராய் இருந்தவர் மகா வீரர். அவர் ஞானம் பெற்றவர் . அதனால் ஊர் ஊராகப் போய் அறத்தின் வலிமையை போதித்துக் கொண்டிருந்தார்.

மக்களெல்லாம் ஞானம் பெற வேண்டுமென்று அவர் ஆசைப்பட்டார். மர்க்கெவி மகன் கோசாலன் என்பவன் இவரிடம் சீடராக வந்து சேர்ந்தான் . ஆறாண்டுகள் அவரோடு இருந்தான் . அவனுக்கு ஞானம் வருவதற்குப் பதிலாக மகாவீரர் மீது பொறாமைதான் வந்தது.

பொறாமை உணர்ச்சி வந்தவுடன் தீர்த்தங்கரரை விட்டுவிட்டு தனியாக பிரிந்து சென்று விட்டான். ஞான நூல்களைப் படிப்பதற்குப் பதிலாக ஜோதிட நூல்களையும் நிமித்திக நூல்களையும் படித்து எல்லாவற்றுக்கும் அருள்வாக்கு சொல்ல ஆரம்பித்து விட்டான் . அதில் ஒன்றிரண்டு பலித்தது.

அது எப்படியென்றால் , ஏகப்பட்ட பிரச்சினைகளோடு இருக்கிற ஒருவருக்கு பொதுவான பிரச்சினை சம்பந்தமான விடயங்கள் சிலவற்றைச் சொன்னால் அதில் ஒன்று இரண்டு பலித்து விடத்தான் செய்யும். அதை வைத்துக் கொண்டு அவர்தான் பெரிய மகான் என்றும் அவர் சொல்வது எல்லாமே பலிக்கும் என்றும் சொல்ல முடியாது அல்லவா ? ஆனால் , இதை நம்பவும் சில சீடர்கள் இருந்தார்கள் .

அறியாமைக் கூட்டம் அப்போதும் உண்டு, இப்போதும் உண்டுதானே! அந்தக் கூட்டத்தை நம்பி , இந்த கோசாலன் என்ன செய்தான் தெரியுமா? ஆசி மதம் என்ற ஒரு மதத்தையே ஏற்படுத்தி விட்டான் . மகாவீரர் உண்மையான தீர்த்தங்கரர் அல்ல ; நான்தான் உண்மையான தீர்த்தங்கரர் என்று பிரசாரம் செய்யவும் ஆரம்பித்து விட்டான். இதையும் நம்புவதற்கு மக்கள் எல்லாம் காத்துக் கொண்டிருந்தார்கள்.

ஒரு தடவை சிரஸ்வதி எனும் ஊருக்கு ஞானத்தின் சொரூபமாக விளங்கிய "மகாவீரரும் போயிருக்கிறார், இந்த கோசாலனும் போயிருக்கிறான் . இருவருமே அங்கே தங்கியிருக்கிறார்கள் . அப்போது ஊர் மக்கள் மகாவீரர் தீர்த்தங்கரராக இருக்கிறார் . இந்த கோசாலனும் தன்னை தீர்த்தங்கரர் என்று சொல்லிக் கொள்கிறானே , அது எப்படி ஒரே நேரத்தில் இரண்டு தீர்த்தங்கரர் இருக்க முடியும்? ஏதோ குழப்பம் இருக்கிறது எதை நம்புவது என்று தெரியவில்லையே" என்று பேசிக்கொண்டார்கள்.

இது பற்றி ஒரு சிலர் மகாவீரரிடமே வந்து கேட்டிருக்கிறார்கள் . அதற்கு மகாவீரர் , "கோசாலன் என்பவன் என்னிடம் சீடனாக இருந்தான் . அவனுக்கு ஞானம் வரவேண்டும் என்பதற்காக நான் போதனை செய்தேன் . ஞானம் வருவதற்குப் பதிலாக அவனுக்குப் பொறாமை வந்துவிட்டது.

அதனால் என்னை விட்டுப் பிரிந்து போய்விட்டான் . ஆனாலும் , அவனுக்காக நான் பிரார்த்தனை செய்கிறேன் . அவனுக்கு ஞானம் வரவேண்டும் என்று மனமார விரும்புகிறேன். நிச்சயம் ஒரு காலத்தில் அவன் திருந்துவான் என்று நினைக்கிறேன்" என்று சொன்னார்.

இதைக்கேட்டவர்களில் சிலர் அப்படியே கோசாலனிடம் சென்று சொல்லிவிட்டார்கள் . அவனுக்கு கோபம் வந்துவிட்டது. நேரடியாக புறப்பட்டு வந்து , மகாவீரரைப் பார்த்து கன்னாபின்னாவென்று திட்ட ஆரம்பித்து விட்டான் . ஆனால் மகாவீரர் கோபப்படவில்லை . புன்சிரிப்போடு இருந்தார் .

"நீ ஞானம் பெற்றவனாக ஆக வேண்டுமென்று நான் விரும்புகிறேன்" என்று அமைதியாக சொன்னார். கோசாலன் அதற்கு என்ன பதில் சொன்னான் தெரியுமா? "உண்மையிலே நான் தான் தீர்த்தங்கரர். நீங்கள் இன்னும் ஆறு மாதத்தில் இறந்து போய்விடுவீர்கள் "என்று சாபம் கொடுத்தான் . அப்போதும் மகாவீரர் சிரித்துக்கொண்டே இருந்தார் . கோசாலன் போய்விட்டான் .

ஆனால் உண்மையில் என்ன நடந்தது என்றால் , அந்த சம்பவம் நடந்த ஏழாவது நாள் கோசாலன் இறந்து போனான். அடுத்தவர்களுக்கு ஜோதிடம் கூறிய அந்த கோசாலனுக்கு தன்னுடைய வாழ்க்கை முடிவை பற்றி அறிந்துகொள்ள முடியாமல் போய்விட்டது பாருங்கள். இவர்களை போன்றவர்களைத்தான் போலிகள் என்று சொல்கிறோம்.

மகான்களுக்குக்கூட இப்படி மறைமுக எதிரிகள் இருந்திருக்கிறார்கள். புத்தருக்கும் அதே நிலைமைதான். அவரைக்கூட ஏற்றுக்கொள்ளாமல் பேசுபவர்கள் உண்டு . ஆனால் அதைப்பற்றி அவர் கவலைப்பட்டதில்லை . அப்படி ஒருமுறை புத்தரை ஏசியபோது பக்கத்தில் இருந்த ஒரு சீடன் "இப்படியெல்லாம் பேசுகிறார்களே" என்று கவலைப்பட்டார் .

அவரிடம் புத்தர் சொன்னார் . "அவர்களின் பேச்சுக்கள் என்னை ஒன்றும் பாதிக்காது . அவர்கள் ஏதாவது ஒரு பொருள் கொடுத்தால் அதை வாங்கினால் தானே அது எனக்குச் சொந்தம். வாங்காத வரைக்கும் அவை எல்லாம் அவர்களுக்கு தானே சொந்தம் . அது போல, அவர்களின் பேச்சுக்கள் எதையும் நான் வாங்கிக் கொள்ளவே இல்லை. எனவே , அவை எல்லாம் அவர்கள் வசமே இருக்கின்றன" என்றார் பொறுமையாக. நம்மையும் அப்படி யாராவது பேசினால் அதை நாம் பொருட்படுத்தவில்லையென்றால் அது வலுவில்லாமல் போய்விடும்.

இளசை சுந்தரம்

# அ.தி.மு.க.வின் தேர்தல் அறிக்கை செயல்வடிவம் பெறவேண்டும்

## வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஈழத்தமிழரின் ஆழமான அரசியல் அபிலாசைகளை பிரதிபலிக்கும் அ.இ.அ.தி.மு.க மக்கள் அவை தேர்தல் அறிக்கை செயல் வடிவம் பெற வேண்டுமென்பதே உலகத் தமிழரின் எதிர்பார்ப்பாகும் என வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

ஈழத்தமிழர் தொடர்பில் வரலாற்று சிறப்பு மிக்க தீர்மானங்களை தற்போதைய தமிழக அரசு நிறைவேற்றி வருவது வரவேற்கத்தக்கது.

ஈழத்தமிழர் பால் தமிழகத் தமிழர் கொண்டுள்ள அரசியல் விருப்பினை எடுத்தியம்பும் வகையில் இவை கடந்த வருடங்களில் அமைந்துள்ளன.

அதுமட்டுமன்றி இந்திய நீதி முறையின் தீர்ப்பை பின்பற்றி சமீபத்தில் நிரபராதிகளின் விடுதலை அறிவிப்பை மேற்கொண்டு உலகத் தமிழர் அரசியலில் தன்னுடைய மையச்சூழல் நிலையை மீண்டும் ஒரு முறை முரசறைந்துள்ளது.

இந்நிலையில் மக்களவை தேர் தலை ஒட்டி வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கையை உலகத் தமிழர் ஒரு நம்பிக்கையோடு அவதானிக்கின்றனர்.

அதில் இடம்பெற்றுள்ள அம்சங்கள் ஈழத் தமிழரின் ஆழமான அரசியல் அபிலாசைகளை பிரதிபலிக்கின்றது என்பது மறுக்க முடியாத உண்மை.

இனப்படுகொலைக்கான சர்வதேச விசாரணை கோரலும் தமிழர் தம் தலைவிதியை தாமே தேர்ந்தெடுக்கும் வகையிலான ஒரு பொது வாக்கெடுப்பு வலியுறுத்தலும் இடம் பெற்றிருப்பதை வரவேற்கிறேன்.

இவை ஈழத் தமிழரின மனநிலையை அவர்களின் அரசியல்தேவையை மிகச் சரியாக பிரதிபலிக்கின்றது. ஆனால இவை எழுத்து வடிவில் மட்டும் நின்றுவிடாமல் விரைவில் செயல் வடிவம் பெறவேண்டும் என்றே உலகத் தமிழர் எதிர்பார்க்கின்றனர் என்றார்.

(அ-6-250)

# கச்சதீவு உற்சவத்திற்காக விசேட பேருந்து சேவைகள்

(யாழ்ப்பாணம்)

கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் மார்ச் மாதம் 16,17 ஆம் திகதிகளில் நடைபெறும்.

இது தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று அரசாங்க அதிபர் காரியாலயத்தில் கடந்த 25 ஆம் திகதி இடம் பெற்றது.

இதன்போது படகுச்சேவை எதிர்வரும் 16 ஆம் திகதி காலை 6 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை விசேட சேவையாக நடத்தப்படுமென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் உற்சவத்திற்கு செல்லும அடியார்களின் நலன்கருதி எதிர்வரும் 16 ஆம் திகதி அதிகாலை 5 மணி தொடக்கம் குறிகாட்டுவான் வரையான தொடர் பேருந்து சேவையினை இ.போ.ச (வட) யாழ்.சாலையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.சாலை இ.போ. ச (வட) முகாமையாளர் செ. குல பாலசெல்வம் அறிவித்துள்ளார். (அ- 2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 50 | 20 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 80 |
| பச்சைமிளகாய் | 60 | 100 | 100 |
| தக்காளி | 20 | 20 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 40 |
| கோவா | 30 | 40 | 40 |
| கரட் | 80 | 70 | 80 |
| பூசணி | 30 | 40 | 40 |
| புடோல் | 40 | 50 | 60 |
| வாழைக்காய் | 30 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 30-90 | 60 | 70 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 80 |
| பாகற்காய் | 100 | 90 | 140 |
| வெண்டிக்காய் | 80 | 40 | 120 |
| கருணைக் கிழங்கு | 20 | 40 | 50 |
| பயற்றங்காய் | 140 | 80 | 80 |
| லீக்ஸ் | 50 | 40 | 100 |
| பீற்றூட் | 30 | 35 | 40 |
| கறிமிளகாய் | 70 | 90 | 80 |
| முருங்கைக்காய் | 300-400 | 400 | - |
| போஞ்சி | 40 | 60 | 80 |
| கத்தரிதம்புள்ள | 20 | — | - |
| கீரை (1 பிடி) | 5-10 | 15 | 20 |
| தேசிக்காய் | 30-60 | 35 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 40 | 40-50 |
| இராசவள்ளி | 70 | 70 | 100 |

# இராசி பலன்

28.02.2014
(மாசி 16, வெள்ளிக்கிழமை )
சூரிய உதயம் காலை 6.24 மணிக்கு
சதுர்த்தசி பிற்பகல் 4.47 மணிவரை
அவிட்டம் முன்னிரவு 9.45 மணிவரை
இராகுகாலம் 10.58-12.28 மணிவரை
சுபநேரம் 6.28-7.58 மணிவரை
போதாயண அமாவாசை

**மேடம்** ஆனந்தமான நாள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**இடபம்** சொல்லைக் செயலாக்கிக் காட்ட முற்படுவீர்கள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத்தோன்றும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** பகை விலகி பாசம் கூடும் நாள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த அச்சுறுத்தல்கள் குறையும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

**கடகம்** இறைவழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், குடும்பத்தில் சிறு சிறு விவாதங்கள் ஏற்படலாம், எடுத்த காரியத்தை முடிப்பதில் சில தாமதங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**சிங்கம்** தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**கன்னி** உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், ஆலய வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், செய்தொழில் மேன்மையுண்டு, உற்சாகமான நாள்.

**துலாம்** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், சொத்துக்களால் ஆதாயமுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், உறவினர் வருகையுண்டு, பணத்தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், ஆரம்பத்தில் அச்சுறுத்தலாகத் தோன்றிய காரியம் முடிவில் ஆதாயத்தைக் கொடுக்கும், போசன சுகமுண்டு.

**மகரம்** இல்லத் தேவைகள் பூர்த்தியாகும், பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும், வாக்கு மேன்மையுண்டு,பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**கும்பம்** கற்பனை மிகுதியான நாள், நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரும், மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறலாம், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும்.

**மீனம்** உறவினரின் அன்புத் தொல்லைக்கு ஆளாகலாம், கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு பண்ணும் எண்ணம் உருவாகும், புதிய பொருட்கள் வாங்குவதில் பிரியப்படுவீர்கள், சயன [illegible]

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மின்சாரம் பெற்ற ஐவருக்கு விளக்கமறியல்

சட்ட விரோதமான முறையில் மின்னிணைப்பு பெற்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட ஐவரையும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி மீண்டும் மன்றில் ஆஜராகுமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.





நெல்லியடி மின்சார சபையினர் கடந்த 24,25 ஆம் திகதிகளில் நெல்லியடி, கரவெட்டி, மண்டான் ஆகிய பகுதிகளில் திடீர் பரிசோதனையை மேற்கொண்டனர்.

இதன்போது சட்ட விரோதமான முறையில் மின்னிணைப்புக்களைச் செய்து கொண்ட குற்றச்சாட்டின் கீழ் ஐவர் தைது செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் இவர்களை நெல்லியடி பொலிஸாரும் மின்சார சபையினரும் பருத் தித்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதவான் குற்றஞ் சாட்டப்பட்டவர்களை பொலிஸ் பிணையில் விடுமாறும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி மன்றில் ஆஜராகுமாறும் உத்தரவிட்டார். (அ-9-60)




## ஓய்வூதியர் சங்கத்தின் 6 ஆவது பொதுக்கூட்டம்

இலங்கை வங்கியின் வட மாகாண ஓய்வூதியர் சங்கத்தின் 6ஆவது பொதுக்கூட்டமும் ஒன்று கூடல் நிகழ்வும் எதிர்வரும் மார்ச் மாதம் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் காரியாலயத்தின் கேட்போர் கூட மண்டபத்தில் ஓய்வு பெற்ற வடமாகாண உதவிப்பொது முகாமையாளர் ந.சிவரத்தினம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அசோகா பெரேரா விசேட விருந்தினர்களாக எம்.ஜி.மென்டிஸ், எம்.ஏ.நவாஸ், சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற முன்னாள் நீதிபதி எம்.திருநாவுக்கரசு ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

ஓய்வு பெற்ற வங்கியாளர் சங்கத்தின் அங்கத்தவர்கள் அனைவரும் இவ் அறிவித்தலை அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ-2)

## அவதாரப்பெருவிழா

கிளானை -அல்வாய் மேல்மருத்தூர் ஆதி பராசக்திபீட வழிபாட்டு மன்றத்தினால் அம்மாவின் 74 ஆவது ஆண்டு அவதாரப் பெருவிழா எதிர்வரும் மார்ச் மாதம் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு சக்திக்கொடி ஏற்றி தொடர்ந்து யாக ஆரம்பப்பூசை நடைபெறும்.

மறுநாள் திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு பக்தர்கள் அன்னைக்கு பாத பூசை, அதனைத்தொடர்ந்து 10 மணிக்கு மக்கள் நலன் வேண்டி யாகமும் பூசையும் இடம்பெறும். (அ-2)

## தமிழ்த்தினவிழா

கைதடி நவபுரத்திலுள்ள எருதிடல் அ.த. க. பாடசாலையின் தமிழ்த்தின விழா எதிர்வரும் 04 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


பாடசாலை முதல்வர் நடராசா ஜெயரூபன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலயத்தின் தொழில் வழிகாட்டல் ஆலோசகர் த.ஈஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (அ-9-254)

# அகில இலங்கை சிவ தலயாத்திரை நேற்றுக்காலை ஆரம்பமானது

(மானிப்பாய்)

அகில இலங்கை சிவ தல யாத்திரை நேற்றுக் காலை ஆரம்பமாகியுள்ளது. சிவராத்திரியை முன்னிட்டு சிரேஷ்ட சைக்கிளோட்ட வீரர்கள் இருவர் இலங்கையிலுள்ள சிவத் தலங்களிற்கு சைக்கிளில் பயணமாகியுள்ளனர்.

இந்நிலையில் ஆர்.ராஜா ரட்ணசிங்கம் குணசேகர (வயது 65) தலைமையில் சுழிபுரம் மத்தியைச் சேர்ந்த வைத்திலிங்கம் கலைநாதன் (வயது 58) என்பவர் இப் பயணத்தில் ஈடுபட்டு 2 ஆயிரம் கிலோமீற்றரிலும் அதிகமான தூரம் பயணம் செய்து இலங்கை பூராகவுமுள்ள 30 இற்கும் மேற்பட்ட சிவாலயங்களை தரிசிக்கவுள்ளனர்.



இவர்களது பயணம் சிவராத்திரி தினமான நேற்றுக் காலை 6 மணியளவில் சித்தங்கேணி சிவசிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் (சித்தங்கேணி சிவன் கோவில்) ஆரம்பமாகியது. இப் பயணம் எதிர்வரும் மார்ச் மாதம் 13 ஆம் திகதி இதே கோவிலில் நிறைவடையவுள்ளது.

இவர்களில் சுழிபுரம் மத்தியைச் சேர்ந்த வைத்திலிங்கம் கலைநாதன் (வயது 58) என்பவர் இதுவரை 227 சைக்கிளோட்ட பந்தயங்களில் கலந்து கொண்டு 52 போட்டிகளில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டவர் என்பதுடன் ஆர்.ராஜா ரட்ணசிங்கம் குணசேகர (வயது 65) என்பவர் தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் நன்கு அறியப்பட்ட சைக்கிளோட்ட வீரராவார்.

இவர்கள் சித்தங்கேணி சிவசிதம்பரேஸ்வரர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ வாசுதேவக் குருக்களின் ஆசியுடன் நேற்று இப் பயணத்தை ஆரம்பிப்பதற்கு முன்பாக அங்கு யாழ் மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி எம்.ஆர்.மோகன் வாழ்த்து தெரிவித்ததுடன் வலி மேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி நா.ஐங்கரன் இருவருக்கும் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். (அ-9-23)

## தம்பாலை பகுதி வீடொன்றில் தங்க நகைகள் திருட்டுப்போயின

(யாழ்ப்பாணம்)

யாழ்.அளவெட்டி தம்பலை பகுதியிலுள்ள வீடொன்றில் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் பெறுமதியான நகை மற்றும் தொலைபேசி என்பன திருட்டுப்போயுள்ளதாக வீட்டு உரிமையாளரினால் கடந்த செவ்வாய்க்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெல்லிப்பழை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீட்டின் உரிமையாளர்கள் சம்பவதினம் நண்பகல் ஆலயமொன்றிற்கு சென்றிருந்த வேளை வீட்டின் பின்பகுதி கதவை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான தாலிக் கொடியையும் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான கைத்தொலைபேசியையும் திருடியுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ-9-23)

## பஜனை

ஆத்ம வித்தியாசாயி தியான மண்டபத்தில் சனிக்கிழமைகளில் மாலை 4.30 மணி தொடக்கம் 6 மணிவரை பஜனை நடைபெறும்.

குறித்த பஜனை நிகழ்வு இல.28 பொன்னப்பா ஒழுங்கை, வண்ணார்பண்ணைமேற்கு, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நடைபெறும்.

பஜனை நிறைவில் தொடரும் நிகழ்வுகள் பற்றிய அறிவிப்பு நடைபெறும். (அ-2)

# பாடசாலையைவிட்டு இடைவிலகிய 956 மாணவர்களை மீள இணைக்கத்திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இவ்வருடத்தில் மட்டும் வறுமை காரணமாக பாடசாலைகளை விட்டு 956 மாணவர்கள் இடைவிலகியுள்ளதாக தெரியவருகிறது.

இதேவேளை, பாடசாலைகளை விட்டு இடைவிலகிய 956 மாணவர்களையும் பாடசாலைகளில் இணைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கவும் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக யாழ்.வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசேகரம் தெரிவித்துள்ளார்.

யாழ்.வணிகர் கழகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

குடும்ப வறுமை காரணமாக பாடசாலைகளை விட்டு இடைவிலகிய மற்றும் இடைவிலகும் ஆபத்தினை எதிர்நோக்கிய சிறுவர்களுக்கு யாழ்.வணிகர் கழகத்தின் நிதி அனுசரணையில் பாடசாலை கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

14 வகையான கற்றல் உபகரணங்கள் மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் யாழ்ப்பாண வர்த்தகர்களின் நிதியுதவியுடனும் வணிகர் கழகத்தின் அனுசரணையுடனும் இந்த கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதில் வேலணை பிரதேச செயலாளர் பிரிவில் 23 மாணவர்களும் யாழ்ப்பாணத்தில் 67 மாணவர்களும் சண்டிலிப்பாயில் 26 மாணவர்களும் சங்கானையில் 50 மாணவர்களும் உடுவிலில் 50 மாணவர்களும் கோப்பாயில் 83 மாணவர்களும் சாவகச்சேரியில் 120 மாணவர்களும் கரவெட்டியில் 138 மாணவர்களும் காரைநகரில் 20 மாணவர்களும் நல்லூரில் 105 மாணவர்கவளும் தெல்லிப்பழையில் 25 மாணவர்களும் பருத்தித்துறையில் 52 மாணவர்களும் ஊர்காவற்றுறையில் 57 மாணவர்களும் நெடுந்தீவில் 75 மாணவர்களும் மருதங்கேணியில் 65 மாணவர்களுமாக மொத்தம் யாழ். மாவட்டத்தில் 956 மாணவர்களும் பாடசாலைகளில் இணைக்கப்படவுள்ளனர்.

மேலும் ஆரம்பப் பிரிவில் 298 மாணவர்களும் கீழ்ப்பிரிவில் 329 மாணவர்களும் மத்திய பிரிவில் 261 மாணவர்களும் மேற்பிரிவில் 68 மாணவர்களும் பாடசாலைகளை விட்டு இடைவிலகியிருந்தனர் எனவும் அவர்களை இணைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். இச் சந்திப்பில் யாழ்.வணிகர் கழக செயலாளர் இ.ஜனக்குமார் பங்கு கொண்டிருந்தார். (அ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஆவது திருத்தச்சட்டத்தை வடக்கு முதலமைச்சர் படிக்க வேண்டும்

## இப்படிக் கூறுகிறார் தயாசிறி

அரசியலமைப்பின் வரையறைகளை மீறி வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் வெளியிட்ட சில கருத்துக்களினால் தான் கவலையடைந்துள்ளதாகவும், அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை வாசியுங்கள் என வடமேல் மாகாண முதலமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இளைப்பாறிய உயர்நீதிமன்ற நீதிபதியும் அரசியலமைப்புசட்ட நிபுணருமான விக்னேஸ்வரன் இவ்வாறு பேசுவதை தன்னால் நம்ப முடியாது உள்ளதென ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைமை அலுவலகத்தில் செய்தியாளருடன் பேசிய போது தயாசிறி ஜயசேகர மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கும் தென் இந்தியாவிற்கும் இடையிலான நேரடி விமான சேவை வேண்டுமெனவும், வடமாகாண ஆளுநரையும் பிரதம செயலாளரையும் அகற்றி விட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்படகூடியவர்களை நியமிகக வேண்டுமெனவும் அவர் விரும்புகின்றார். ஆனால் மத்திய அரசாங்கத்தின் ஆதரவும் அங்கீகாரமும் இன்றி இவற்றில் எதையும் சாதிக்க முடியாதென்பதை புரிந்து கொள்ள வேண்டும் என தயாசிறி கூறினார்.

சகல முதலமைச்சர்களுக்கும் பிரச்சினைகள் உள்ளன. அவர்கள் ஜனாதிபதி நியமித்த ஆளுநருடன் ஒத்துழைக்க வேண்டும். முதலமைச்சர்கள் விரும்பும் உத்தியோகத்தர்களை அவர்களால் எப்போதும் பெற முடிவதில்லை என அவர் கூறினார்.

அமைச்சரவை அமைச்சர்கள் கூட தாம் விரும்பும் பிரதியமைச்சரையோ அமைச்சு செயலாளரையோ பெற முடிவதில்லை. வடமாகாண சபை அரசாங்கத்தின் உதவியை எதிர்பார்த்தால் மோதல் கொள்கையை கைவிட்டு அரசாங்கத்துடன் ஒத்துழைக்க வேணடும் என அவர் கூறினார்.

13 ஆவது திருத்தத்தை படிக்க வேண்டுமெனவும் முதலமைச்சர் ஒருவரால் செய்யக்கூடியவை எவை, அவருக்கு என்னென்ன அதிகாரங்கள் உள்ளன என்பவற்றை அறிய வேண்டுமென நான் விக்னேஸ்வரனிடம் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு புலம் பெயர்ந்தோர் மற்றும் விடுதலை புலி சார்ந்தோரின் எண்ணங்களுக்கேற்ப ஆர்ப்பரிக்காது, வடக்கு மக்கள் விரும்புவதை செய்ய வேண்டும் என அவர்

## விமான படைத்தளபதி ஓய்வு பெறுகின்றார்

இலங்கையின் விமானப்படைத் தளபதி எயார் மாசல் ஹர்ஷ அபே விக்ரம தனது சேவையிலிருந்து ஓய்வுபெறவுள்ளார். அபேவிகரம கடந்த மூன்று ஆண்டுகளாக விமானப் படைத் தளபதியாக கடமையாற்றி வருகின்றார்.

விமானப்படைத் தளபதி கடமைகளை வெற்றிகரமாக செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி பாராட்டுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அடுத்த விமானப்படைத் தளபதியாக எயார் வைஸ் மார்ஷல் கோலித குணதிலக்க கடமையாற்றவுள்ளார். (அ-2)


**Van விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள Nissan Caravan KG Model விற்பனைக்குண்டு.

தொடர்பு: இல. 60, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

T.P. 0776549303 (5702)


# விவசாய ஓய்வூதியம் பெறுவதற்கு 9 இலட்சத்து 68 ஆயிரம் பேர் தகுதி

நாட்டில் 9 இலட்சத்து 68 ஆயிரம் பேர் விவசாய ஓய்வூதியம் பெற தகுதி பெறவுள்ளனர். இவர்களில் ஒரு இலட்சத்து 28 ஆயிரம் பேர் மாதாந்த ஓய்வூதியம் பெற்று வருகின்றனர் என பிரதி பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.

மாத்தளை ஹோட்டல் பாடசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற விவசாயிகளுக்கு ஓய்வூதியம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொணடு பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

மாதாந்தம் விவசாயிகள் ஓய்வூதியத்துக்காக ஆயிரம் மில்லியன் ரூபா பெறப்படுகின்றது. இதற்கிணங்க 60 தொடக்கம் 63 வயதுக்கிடைப்பட்டோருக்கு மாதாந்தம் ஆயிரம் ரூபாவும் 64 தொடக்கம் 70 வயதுக்கிடைப்பட்டோருக்கு ஆயிரத்து 250 ரூபாவும் 71 தொடக்கம் 78 வயதுக்கிடைப்பட்டோருக்கு இரண்டாயிரம் ரூபாவும் 78 வயதுக்கு மேற்பட்டோருக்கு 5 ஆயிரம் ரூபாவும் வழங்குவதற்கு அரசு முடிபு செய்துள்ளது.

1987 ஆம் ஆண்டு ஐ.தே.க. ஆட்சியில் விவசாய அமைச்சராகவிருந்த காமினி ஜயசூரியவால் விவசாய ஓய்வூதியத் திட்டம் முதன் முதல் அறிமுகப்படுத்தப்பட்டாலும் இத்திட்டம் முறையாக்கப்படாத காரணத்தால் செயலிழந்திருந்தது.

இந்நிலையில் தற்போதைய அரசாங்கம் மேற்படி திட்டத்திற்கு புத்துயிரளித்திருப்பதால் விவசாயிகள் அரசாங்கத்துக்கு நன்றியுடையவர்களாக இருக்க வேண்டுமென்றார். (அ-2)

# க.பொ.த.சா/த பரீட்சை முடிபு ஏப்ரல் 10 இல் வெளியாகும்

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்படவுள்ளது.

இதன்பிரகாரம் 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் பெறுபேறுகள் ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி வெளி யிடப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் ஜயந்த புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

2013 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் ஆறு இலட்சம் மாணவ, மாணவியர் தோற்றினர்.

2013 ஆம் ஆண்டுக்கான செயன்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் மார்ச் மாதம் 4 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ளது.

ஆயிரத்து 163 பரீட்சை நிலையங்களில் ஒரு இலட்சத்து 57 ஆயிரத்து 551 மாணவ, மாணவியர் செயன்முறைப் பரீட்சைக்கு தோற்றவுள்ளனர். (அ-2)


**மனதார நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்**





திருநெல்வேலி பரமேஸ்வரா சந்தி ஆட்டோ தரிப்பிடம் இல்லாமையால் பல நெருக்கடிகளை சந்தித்து வந்த ஆட்டோ சாரதிகளான எங்களின் கோரிக்கையை செவிமடுத்து உடனடியாக செயற்பட்டு நடவடிக்கை எடுத்து ஒழுங்கமைத்து தந்த எமது மதிப்புக்குரிய கௌரவ பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எமது தரிப்பிடப் பிரச்சினைகளை நேரில் கதைத்து உடனடியாக செயற்பட்டு உரிய தீர்வை பெற வழி அமைத்து தந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சரின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளருமான K.V. குகேந்திரன் (ஜெகன்) தோழர் அவர்கட்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நல்லூர் பிரதேசத்தின் பிரதேச சபையின் எதிர்க்கட்சி தலைவரும் E.P.D.P பிரதேச அமைப்பாளருமான அம்பலம் ரவீந்திரதாசன் (J.P.) உடனடியாக உரிய இடத்திற்கு சென்று தீர்வை பெற்றுத் தர உதவிய நல்லூர் மைந்தனுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(5703)

**வாழ்த்துவோர்:**

**T.N.14, தரிப்பிட ஆட்டோ சாரதிகள்,**

**(பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி)**



**கல்யாண மாலை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 35<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L / பாடசாலை உதவியாளர்<br>தொ.இ: B/2864 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 4<br>கி.பா: 13.25<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L, Dip. in Home Sciences / Restaurant Manager (USA)<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்.<br>தொ.இ: G/2895 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 4<br>கி.பா: 30.5<br>தகைமை/தொழில்: CIMA / கணக்காளர்<br>தொ.இ: B/2867 | பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 3<br>கி.பா: 22.5 உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BBA / Financial Analyzer<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்.<br>தொ.இ: G/2896 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 4<br>கி.பா: 26<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L / சொந்த வியாபாரம்<br>தொ.இ: B/2869 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 1<br>கி.பா: 36 உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: MBBS<br>தொ.இ: G/2897 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 3<br>கி.பா: 22.5<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: முகாமைத்துவ பட்டதாரி / காசாளர் (UK – Not PR)<br>தொ.இ: B/2871 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 1<br>கி.பா: 54 ¼ உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L, ICT / Computer Application Assistant<br>தொ.இ: G/2900 |

**கல்யாண மாலை**

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே


தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

திறப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசேட தேவைக்குட்பட்டோர் தொடர்பில் தகவல் திரட்ட வேண்டும்-ஆனந்தன் எம்.பி.



(குருமன்காடு)

வடக்கு கிழக்கிலுள்ள விசேட தேவைக் குட்பட்டோரின் தொகை இதுவரை கணிக்கப் படவில்லை.

எனவே அவசரமாக இவர்கள் தொடர் பான தகவலகள் திரட்டப்பட வேண்டுமென சிவசக்தி ஆனந்தன் வலியுறுத்தியுள்ளார்.

விசேட தேவைக்குட்பட்டவர்களுக்கான **"இணைந்த கரங்கள"** பராமரிப்பு நிலையத் தின் புதிய நிர்வாகசபை தெரிவுக்குழுக் கூட் டம், நெடுங்கேணி நயினாமடுவில் அமைந் துள்ள இணையும் கரங்கள் பராமரிப்பு நிலையத்தில், கடந்த திங்கட்கிழமை நடை பெற்றது.

இதில் விசேட அதிதியாக கலந்து கொண்ட வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து உரையாற்றுகையில்,

வடக்கிலும் கிழக்கிலுமாக ஏறத்தாழ இருநூறுக்கும் மேற்பட்ட முள்ளந்தண்டுவடம பாதிக்கப்பட்டவர்கள் இருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

இது வெறுமனே ஒரு ஊகம் மட்டுமே. இந்த தொகை இன்னும் கூடலாம், அல்லது குறையலாம். உண்மை என்னவெனில், விசேட தேவைக்குட்பட்டோர் தொடர்பில் உறுதிப்படுத்தப்பட்ட தகவல் சேகரிப்புகள் இன்றுவரை எவரிடமும் இல்லை என்பதே யாகும்.

தகவல் திரட்டுகளை மேற்கொள்ளாமல் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது என் பது செயலுக்கு முரணான விடயமாகும். தகவல் இல்லாமல் முன்னெடுக்கப்படும் திட் டங்களால் பலனேதுமில்லை.

தகவல் இல்லாமல் திட்டங்களை செயற் படுத்த முயற்சித்தால், திட்டங்கள் எதிர்பார்த்த இலக்குகளை, நோக்கங்களை அடைய முடியாமல் போய்விடும். எனவே அவசரமா கவும், அவசியமாகவும் விசேட தேவைக் குட்பட்டோர் தொடர்பில் தகவல் திரட்டுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

வடக்கில் முள்ளந்தண்டுவடம் பாதிக் கப்பட்டவர்களில் ஏழு பேர் வறுமை, ஸ்திர மற்ற குடும்ப பொருளாதாரம், சுய தேவை களை பூர்த்தி செய்ய முடியாமை, வாழ்க் கைத் தர மேம்பாடுகளை எட்ட முடியாமை, வீட்டில் இட வசதி இன்மை, சுகாதார வசதி கள் போதாமை, குடும்ப பிணக்குகள், மன உளைச்சல்கள், அவஸ்தைகள் என்று இன் னோரன்ன பல்வேறு அகப்புறச்சூழல் கார ணிகளால் தற்கொலைக்கு முயற்சித்து காப்பாற்றப்பட்டிருக்கின்றார்கள்.

இரண்டு பெண் பிள்ளைகள் தற்கொலை செய்து இறந்திருக்கிறார்கள். இது கடந்த வருடத்தில் எனக்கு கிடைத்த தகவல்கள் மற்றும் நேரடியாக சென்று பார்த்துணர்ந்த சம்பவங்களின் கணக்காகும். இத்தகைய துயர நிகழ்வுகள் எமக்கு தெரியாமலும் நாளாந்தம் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

தமிழ் இனத்தின் விடுதலைக்காக, உய ரிய நோக்கங்களுக்காக இந்த நிலையை அடைந்த இவர்கள் விசேட கவனிப்புக்குரிய வர்கள். நம் எல்லோராலும் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள்.

இந்த இறப்புகளை குறைக்க புலம் பெயர்ந்து வாழும் தமிழ் உறவுகள் கூடிய அளவில் உதவ வேண்டும்.

விசேட தேவைக்குட்பட்டோரின் வாழ்க்கைக் காலம் முழுவதும் நீங்கள் உதவ வேண்டும் என்றில்லை. உங்கள் குடும்பத்தில் நடை பெறும் திருமண நாள், பிறந்தநாள் போன்ற சுப வைபவங்களின் போதும், வீட்டில் அனுஷ்டிக்கும் உங்கள் அன்புக்குரியவர் களின் ஆத்ம சாந்தி பிரார்த்தனைகள், நினை வேந்தல்களின் போதும், அன்றைய நிகழ் வின் நினைவாக உங்களால் முடிந்தளவு நிதியை இத்தகைய பராமரிப்பு நிலையங்க ளுக்கு வழங்கி உதவ வேண்டும் என கேட்கின்றேன்.

தாக்குப்பிடிக்க முடியாத வாழ்க்கைச் செல வுகள், தாங்கிப்பிடிக்காத மனிதாபிமானம் அற்ற மனிதர்கள் என்று பல்வேறு மோச மான நிலைமைகளுக்குள் அகப்பட்டு விசேட தேவைக்குட்பட்டோர் தனிமைப்பட்டு போய்க் கொண்டிருக்கின்றார்கள்.

புலம்பெயர் சமூகத்தின் ஆதரவுடன் வட மாகாண சபையும் விசேட தேவைக்குட்பட் டோரின் இடர்களை களைந்து மனிதாபிமான பண்புகளூடாக அனைவரையும் சமூக மயப் படுத்தி கூட்டு சமூகமாக ஒன்று பட்டு பயணிக்க வலுச் சேர்க்க வேண்டும் என்றார். (அ-9-250)




# கற்பித்தல் சுதந்திரத்தை இராணுவத்தினர் சீர்குலைப்பு

## வடக்கு கல்வி அமைச்சர் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

கிராமப்புற பாடசாலைகளில் உதவிகள் என்ற போர்வையில் இராணுவத்தினர் பாட சாலைகளுக்குள் வருவதாகவும் இது அச்சம் தரக் கூடிய விடயமென வடமாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட அக்கராயன் பிரதேச பாடசாலைகளின் கல்வி வள ஆய்வு அக்கராயன் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றுள்ளது.

இந்நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜா, பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன், மாகாணசபை உறுப்பினர்களான ப.அரியரத் தினம், சு.பசுபதிப்பிள்ளை, பிரதேசசபை உறுப் பினர் சு.தயாபரன், வலயக் கல்விப் பணிப்பாளர் முருகவேள், கோட்டக்கல்விப் பணிப்பாளர் அமிர்தலிங்கம், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இங்கு சிறப்புரையாற்றியபோதே கல்வி அமைச்சர் த.குருகுலராஜா மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து கருத்து வெளியிடுகையில், இங்குள்ள பாடசாலைகள் பெரும் வளப்பற்றாக் குறைகளோடு இயங்குகிறது. ஒரு சில பாட சாலைகள் வெளிநாட்டு அரசுகளின் உதவியோடு கட்டடங்களைக் கட்டியிருக்கிறது.

சில பாடசாலைகளில் ஆசிரிய, மற்றும் பௌதீகவளங்களைத் திட்டமிடாத வகையில் அரசியல் நோக்கங்களுக்காக தரம் உயர்த்தப் பட்டிருக்கின்றது. ஆனால் இன்று அந்தப் பாட சாலைகளிலே ஆசிரியப்பற்றாக்குறை பாரிய நெருக்கடிகளை ஏற்படுத்தியிருக்கின்றது.

அத்தோடு, போக்குவரத்துப் பிரச்சினை, ஆசிரிய விடுதிகள் இன்மை என்பன மேலும் நெருக்கடிகளை ஏற்படுத்தியிருக்கின்றது. குறிப் பாக கணித, விஞ்ஞான பிரிவுகளில் ஆசிரிய வளம் உயர்தரத்தில் மாத்திரமன்றி இடைநிலை வகுப்புக்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது.

தற்போது கிராமப்புறப் பாடசாலைகளில் இருக்கின்ற நெருக்கடிகளினால் பல பெற்றோர் கள் தமது பிள்ளைகளுடன் நகரப்பாடசாலை களை நோக்கி போய்க்கொண்டிருக்கிறார்கள்.

இதை விட இன்று சில கிராமப்புறப் பாட சாலைகளிலே உதவிகளைப் புரிகின்றோம் என்ற போர்வையில் பாடசாலைகளுக்குள் இராணுவத்தினர் வருகிறார்கள். இது அச்சம் தருவதாக இருக்கிறது.

சில பாடசாலை அதிபர்கள் அல்லது ஒரு சில பெற்றோர்கள் அவர்களை அழைப்பதாக எனக்கு முறைப்பாடுகள் கிடைக்கிறது. யாரும் கற்றல் கற்பித்தலுக்கான சூழலை குழப்ப முனையக் கூடாது. முன்பள்ளி ஆசிரியர்களைப் பொறுத்த வரை அவர்களுடைய நிர்வாக ஒழுங்குகள் குறித்து சிவில் பாதுகாப்பு படையினருடன் நான் பேசுவதற்கு இருக்கிறேன்.

தற்போது எம்முன்னே இருக்கின்ற பாரிய பிரச்சினை ஆசிரியப் பற்றாக்குறைதான். இதனை உடனடியாகத் தீர்ப்பதற்கு மாகாண சபையில் வழிகளைத் தேட முடியவில்லை என்றார். (அ-9)

### வெடிபொருட்கள் தொடர்பில் சேட் அமைப்புக்கு தெரிவிக்கலாம்

சேட் அமைப்பு கிளிநொச்சியில் கரைச்சி, பூநகரி பிரதேச செயலகப் பிரிவுகளிலும் வவுனியா மாவட்டத்திலும் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் (யுனிசெவ்) நிதியுதவியு டன் மிதிவெடி அபாயக் கல்வியினை வழங்கி வருகின்றனர்.

குஞ்சுப்பரந்தன், கிளிநொச்சியில் கடந்த 18 ஆம் திகதி மிதிவெடி அபாயக் கல்வி யினை வழங்கிய பின்னர் பொது மக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் 47 வெடிக்காத வெடிநிலையில் உள்ள வெடி பொருட்கள் அடையாளம் காணப்பட்டு அவை இருக்கும் இடங்களில் சேட் அமைப்பினரால் அபாயப்பட்டி கட்டப்பட்டுள்ளது.

இவ் ஆபத்தான பிரதேசம் குறித்து ஹலோ மிதிவெடி அகற்றப்படும் அமைப்பினருக்கு அறிவித்தமையால் மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற ஆபத்தான பொருட்கள் கரைச்சி, பூநகரி பிரதேசங்களில் இருந்தால் சேட் அமைப்பினரைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இதற்கான தொலைபேசி இலக்கங்க ளான 0716865984, 0773080384, 0242222864 ஆகியவற்றினை சுழற்றுவதன் மூலம் தகவல்களை வழங்கமுடியும். (அ-2)

# நான்குவருட அபி.திட்டங்களை தயாரிக்க நடவடிக்கை

(குருமன்காடு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப் பற்று பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கிரா மங்களை அபிவிருத்தி செய்யும் நோக்கில், ஒருங்கிணைந்த மக்கள் பங்களிப் புடனான நான்கு வருட அபிவிருத்தி திட்டங்களை தயா ரிக்கும் நடவடிக்கை அண்மையில் ஆரம் பிக்கப்பட்டுள்ளதாக கரைதுறைப் பற்று பிர தேச சபையின் செயலாளர் எஸ். ரவீந்திர நாதன் தெரிவித்தார்.

கரைதுறைப்பற்று பிரதேச சபை எல்லைக் குட்பட்ட 55 கிராமங்களில் மேற்கொள்ள வேண் டிய அபிவிருத்தி திட்டங்கள் அக் கிராமங்களி லுள்ள மக்களின் ஆலோசனைகளின் பிர காரம் குறித்த திட்டங்கள் தயாரிக்கப்படுவ தாகவும் அவர் குறிப்பிட்டார்.

குறித்த நான்குவருட திட்டம் பற்றி மேலும் கருத்து தெரிவித்த அவர், கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 46 கிராமங்க ளிலும் வெலிஓயா பிரதேச செயலகத்திற்குட் பட்ட 9 கிராமங்களிலும் முன்னெடுக்கப்பட வேண்டிய அபிவிருத்திப் பணிகள் பற்றி அக் கிராமங்களில் வாழும் மக்களிடம் ஆலோ சனை கேட்கப்பட்டு அவை அனைத்தும் நான்கு வருடத்திட்டமாக தொகுக்கப்படவுள் ளன என்றார்.

அதன் பின்னர் அத்திட்டங்கள் ஒவ்வொன் றும் விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள் ளன. எனவே குறித்த கிராமங்களில் உள்ள மக்களின் ஆலோசனைகளை கேட்டறிந்து கொள்ளும் ஆரம்ப நடவடிக்கைகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட் டுள்ளன.

குறித்த கிராமங்களில் நடைபெறும் ஆலோ சனைக் கூட்டங்களில் அந்தந்த கிராம உத்தி யோகத்தர்கள் தலைமை தாங்குவார்கள். அத்துடன் அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் உள் ளிட்ட சபையின் உத்தியோகத்தர்களும் கலந்து கொள்வார்கள் என்று அவர் மேலும் கூறி னார். (அ-2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப்புலிகளை அழித்தமை அமெரிக்காவுக்கு பிடிக்கவில்லை

## அரசாங்கம் பகிரங்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கை, இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளை பல துண்டுகளாகப் பிரித்து விடும் நோக்கிலேயே அமெரிக்கா செயற்படுகின்றது. இந்த நாடுகளை பல பிரிவுகளாக பிரித்து விட்டால், அதுவே அமெரிக்கா அடைகின்ற பாரிய அரசியல் வெற்றியாக கருதப்படுகின்றது என்று உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித் துள்ளார்.

கொழும்பில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் இந்த விடயம் குறித்து மேலும் கூறியதாவது,

தெற்காசியாவை மேற்கு நாடுகளின் சூறையாடும் பிராந்தியமாக உருவாக்குவதற்கு சில சதி முயற்சிகள் இடம்பெறுகின்றன. இதனை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தடுக்கின்றமையின் காரணமாகவே இலங்கை மீது பாரிய அழுத்தங்கள் விடுக்கப்படுகின்றன.

யுத்தத்தின் பின்னர் இலங்கையுடன் இந்தியா சிறியளவிலான கோபத்துடன் இருக்கின்றமை தெரிகின்றது. ஆனால் இது தற்காலிகமானது. விரைவில் இந்த கோபத்தை இல்லாமல் செயது விடலாம்.

யுத்தம் முடிந்த பின்னர் இலங்கை விடயத்தில் இந்தியா சற்று கோபத்துடன் இருப்பதாகவே நாங்கள் உணர்கின்றோம். தமிழ் நாட்டின் அழுத்தங்கள் மற்றும் இந்திய தேர்தல்களே இதற்கு மிகப் பிரதான காரணம் என்று அறிகின்றோம்.

ஆனால், இந்தியாவின் இந்த கோபமான நிலைமை தற்காலிகமானதாகும். தற்போதும் இலங்கையும் இந்தியாவும் சிறந்த நட்பு நாடுகள் என்பதுடன் நெருக்கமாக செயற்பட்டுவருகின்றன. எனவே விரைவில் இந்த கோப நிலைமை மாறிவிடும் என்று நம்புகின்றோம்.

இதேவேளை, ஜெனீவா மனித உரிமைப் பேரவையில் அமெரிக்கா ஏன் இலங்கைக்கு எதிரான பிரேணைய்ய கொண்டு வருகின்றது என்று நாம் பார்க்க வேண்டும். அதாவது இலங்கையில் புலிகள் அமைப்பை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் தோற்கடித்தது. இது அமெரிக்காவுக்கு பிடிக்கவில்லை.

அந்தவகையில் இலங்கை இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளை துண்டு துண்டுகளாக பிரித்து விடுவதே அமெரிக்காவின் அரசியல நோக்கமாகவுள்ளது. இந்த நாடுகளை அவ்வாறு துண்டுகளாக பிரித்து விட்டால் அது அமெரிக்கா அடைகின்ற பாரிய அரசியல் வெற்றியாக கருதப்படுகின்றது.

இதேவேளை, அரசாங்கத்துக்கு சர்வதேச அரசியலை முகாமைத்துவம் செய்ய தெரியவில்லை என்றும் அனைத்தையும் குழப்பிக் கொண்டிருப்பதாகவும் எதிர்க்கட்சிகள் கூறுகின்றன.

இதன் காரணமாக பொருளாதார தடை விதிக்கப்படலாம் என்று கூறுகின்றன. ஆனால் நாட்டில் தேர்தல் ஒன்று வந்தவுடன் அவ்வாறு ஒரு அச்சுறுத்தலும் இல்லை என்று எதிர்க்கட்சிகள் கூறுகின்றன.

ஆனால் உண்மையில் எமக்கு பாரிய சவால் உள்ளது. யுத்தகாலத்தில் பிரபாகரன் செய்த மனித உரிமை மீறல்கள் குறித்து இன்று எதிர்க்கட்சியோ சரத் பொன்சேகாவோ கூறுவதில்லை. யுத்தத்தின் இறுதிக்கட்ட த்தில் இடம்பெற்ற விடயங்கள் குறித்து பேசிக்கொண்டிருக்கின்றனர்.

ஜெனீவாவில் எமக்கு எதிராக பிரேரணையையும் கொண்டுவர முயற்சிக்கின்றனர். அதற்கு உள்நாட்டில் சில சக்திகள் ஒத்துழைப்பும் வழங்குகின்றன.

ஆனால், எமது அமைச்சர்கள் உலக நாடுகளுக்கு சென்று எமது பக்க நியாயத்தை எடுத்துரைத்து வருகின்றனர்.

தெற்காசியாவை மேற்கு நாடுகளின் சூறையாடும் பிராந்தியமாக உருவாக்குவதற்கு சில சதி முயற்சிகள் இடம்பெறுகின்றன. இதனை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தடுக்கின்றமையின் காரணமாகவே இலங்கை மீது பாரிய அழுத்தங்கள் விடுக்கப்படுகின்றன.

இலங்கையில் சுயாதீன நீதித்துறை இல்லை என்று எவராலும் கூற முடியாது. நாட்டில் சட்டத்தின் ஆட்சிப்  படுத்தல் சிறப்பாகவே உள்ளது. என்றுமில்லாதவாறு இன்று அரசியல்வாதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும் முன்னாள் பிரதம நீதியரசர் பதவி நீக்கப்பட்டமையை வைத்தே சுயாதீன நீதித்துறை குறித்து கேள்வியெழுப்புகின்றனர். ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்ட திட்டங்களுக்கு அமைவாகவே முன்னாள் பிரதம நீதியரசர் பதவி நீக்கப்பட்டார்.

நாட்டில் சுயாதீன நீதித்துறை இருக்கவேண்டும் என்பதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றார். (அ-2)

## மின்சாரம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

புதிய உயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் இணைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக மின்விநியோகம் தடைப்பட்டிருக்குமென யாழ். பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைவாக நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை ஸ்ரான்லி வீதி, மணிக்கூட்டு வீதியின் ஒரு பகுதி, கஸ்தூரியார் வீதியின் ஒரு பகுதி, மின்சார நிலைய வீதியின் ஒரு பகுதி, ஆரியகுளம் பிரதேசத்தின் ஒரு பகுதி ஆகிய இடங்களில் மின்விநியோகம் தடைப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை கம்பஸ் லேன், வைமன் வீதி, அரசடி வீதி, கோவில் வீதி, நல்லூர், இராசாவின்தோட்டம், றக்கா வீதி, ஆஸ்பத்திரி வீதி, பழைய பூங்கா, கச்சேரியடி, சுண்டுக்குளி, குருசோ வீதி, பாசையூர், ஈச்சமோட்டை, கொழும்புத்துறை, நெடுங்குளம், ஆனந்தன் வடலி வீதி, எழிலூர், மகேந்திரபுரம், உதயபுரம், மணியந்தோட்டம், புங்கங்குளம் வீதி, பருத்தித்துறை வீதி, நாவலர் வீதி, கைலாசபிள்ளையார் கோவில் சந்தி ஆகிய இடங்களில் மின்விநியோகம் தடைப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## ஆதரவு திரட்ட விரைகிறார் அமைச்சர் சரத் அமுனுகம

ஆளும் கட்சி அமைச்சர் சரத் அமுனுகம இந்தியா மற்றும் எதி யோப்பியா ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இந்நிலையில், நேற்றைய தினம் அவர் இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் விசேட பிரதிநிதியாக அவர் குறித்த நாடுகளுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

எதிர்வரும் மார்ச் மாதம் 5 ஆம் திகதி வரையில் அவரது விஜயம் தொடரும் என குறிப்பிடப்படுகிறது.

எதிர்வரும் மார்ச் மாதம் 2 ஆம் திகதி வரையில் அமுனுகம இந்தியாவில் இருப்பார்.

மார்ச் மாதம் 2 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதி வரையில் அவர் எதியோப்பியாவிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

ஜேர்மனிக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை இரத்து செய்து குறித்த நாடுகளுக்கான விஜயத்தை அமைச்சர் அமுனுகம மேற்கொள்கின்றார்.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப்பேரவை மாநாட்டில் இலங்கைக்கு ஆதரவு திரட்டும் நோக்கில் ஆளும் கட்சியின் முக்கிய அமைச்சர்கள் பலர் வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் இலங்கை அரசுக்கு படுதோல்வி

## த.தே.கூட்டமைப்பு ஊடகப் பேச்சாளர் சுரேஷ் எம்.பி

இலங்கை அரசாங்கம் இனப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பதில் தோல்விக்கு மேல் தோல்வி கண்டுள்ளது. இதனால் சர்வதேச நாடுகளின் தலையீடுகளை வலிந்து இழுத்துக்கொண்டிருக்கின்றது என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் வலம்புரிக்கு தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் தமிழக முதல்வரும் அ.இ.அ.தி. மு.கவின் தலைவியுமான செல்வி ஜெயலலிதாவினால் வெளியிடப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் இலங்கைத் தமிழ் மக்களின் இனப் பிரச்சினைத் தீர்வுக்கு ஒரு சர்வ ஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண் டும் என்று கூறப்பட்டுள்ளது. அது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டினை வெளிப்படுத்தும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தவிடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,


கடந்த 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்ட பின்னர் இலங்கை அரசாங்கம் எடுத்த நடவடிக்கைள் அனைத்தும் இனப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பதிலாக அதனை மேலும் மேலும் சிக்கலாக்குவதாக வேயுள்ளது.

இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிவடைவதற்கும் இலங்கை அரசாங்கமே காரணம். அதே போனறு யுத்தத்திற்கு பின்னர் இடம் பெயர்ந்த தமிழ் மக்களின் மீள்குடியேற்றமும் முழுமையாக இடம் பெறவில்லை. இடம்பெயர்ந்த மக்கள் அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியேற முடியாதவாறு இராணுவம் அவர்களின் காணிகளை அபகரித்து வைத்திருக்கி ன்றது.

வட்க்கில் இராணுவக் குடியேற்றங்களும் சிங்களக்குடியேற்றங்களும் இடம் பெறுகின்றன. இதனைவிட தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் உருவாக்கப்பட்ட வடக்கு மாகாண சபையின் நிர்வாகத்தை சரிவர இயங்க விடாது ஜனாதிபதியும் இந்த அரசாங்கமும் முட்டுக்கட்டை போடுகின்றது. வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரைக்கூட மாற்ற முடியாமல் இருக்கின்றது.

ஆகவே இலங்கை அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு காண்பதில் தோல்விக்கு மேல் தோல்வி கண்டுள்ளது. தன்னால் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண இயலாமையை வெளிக காட்டியிருக்கின்றது.

இதேபோன்று தான் இலங்கை அரசாங்கம் தானாக நியமித்த கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்தியே ஐ.நா மனித உரிமைகள் அமர்வில் கடந்த 2012, 2013 ஆம் ஆண்டுகளில் அமெரிக்காவினால் தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.



ஆனால் அதனைக்கூட நடைமுறைப் படுத்தாத காரணத்தால் 2014 ஆம் ஆண்டிலும் ஐ.நா அமர்வில் அரசாங்கத்திற்கு எதிராக தீர்மானம் கொண்டு வரப்படவுள்ளது. இலங்கை அரசாங்கம் அதற்கு எதிராகவும் குரல் கொடுத்துவருகின்றது.

இனப்பிரச்சினைக்கு தீரவு காண்பதிலும், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதிலும் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றுவதிலும் மாகாணசபையை சரிவர இயங்க விடுவதிலும் ஆளுமையுடன் செயற்பட்டிருந்தால் சர்வதேச நாடுகளின் தலையீட்டை தவிர்த்திருக்கலாம்.

சர்வதேச நாடுகளின் தலையீடுகளை உருவாக்கியது இலங்கை அரசாங்கம் தான். தற்போது இந்தியாவின் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டுள்ளதற்கும் இலங்கை அரசாங்கம் தான் முழுப்பொறுப்பும் கூறவேண்டும்.

இதற்காக ஜெயலலிதாவையோ அல்லது தனக்கு எதிராக குற்றஞ்சாட்டும் சர்வதேச நாடுகளையோ நொந்து கொள்வதில் எந்தப்பிரியோசனமும் இல்லை.

சர்வதேச நாடுகளின் தலையீடுகளை இலங்கை அரசாங்கம் தான் வலிந்து இழுத்துள்ளது. இதற்காக ஜெயலலிதாவை நொந்து கொள்வதை விடுத்து தன்னிடம் உள்ள தவறுகளை திருத்திக்கொள்ளவேண்டும்.

எனவே இலங்கை அரசாங்கம் தான் செய்யும் தவறுகளுக்கு மற்றவர்களை குறை கூறுவதையும் குற்றம் சாட்டுவதையும் விடுத்து பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டும்.

தவறினால் மேலும பல அழுத்தங்களுகக இலங்கை அரசாங்கம் உட்படுத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

733

## கந்தர்வலோகத்துப் பெண்...!

"...அட! பெண்ணான உனக்கு வாள் வீசத் தெரியுமா?" என்று வியப்புடன் அவன் கேட்க, "என் பெயர் நீலாஞ்சனா! எனக்கு எல்லாப் போர்க்கலைகளும் தெரியும். நான் வைசாலி மன்னரை சந்தித்து என்னைப் படையில் சேர்த்துக் கொள்ளுமாறு வேண்டுவேன்! உங்கள் பெயர் என்ன?" என்று அவள் கேட்டாள்.

'என் பெயர் பிரபாகரன்!" என்ற அந்த இளைஞன், "நீ மிகவும் அறிவாளி என்று தோன்றுகிறது. ஆனால் பெண்ணான உன்னைப் படையில் சேர்த்துக் கொள்ள மாட்டார்கள். அதனால் நீ ஆண் வேடம் தரித்துக்கொள்! நானும் படையில் சேரத்தான் செல்கிறேன். அவந்தி ராஜ்ஜிய மன்னர் நமது ராஜ்யத்தின் மீது படையெடுத்துள்ளார். அதனால் நம் மன்னர் ஏராளமான வீரர்களைத் திரட்டுகிறார். என்னுடன் வா! உன்னை அழைத்துச் செல்கிறேன்!" என்றான்.

பிறகு இருவரும் தலைநகரம் சென்று சேனாதிபதியை சந்தித்து, படையில் சேர்ந்தனர். ஒருநாள் யுத்தகளத்தில் மன்னர் சேனாதிபதியுடன் யுத்தம் நடத்தும் விதத்தைப் பற்றி ஆலோசனை செய்து கொண்டிருக்கையில், நீலாஞ் சனா அவர்கள் உரையாடிக் கொண்டிருந்த அறைக்குள் நுழைந்து, "மகாராஜா! பகைவர்களின் படை நம்முடையதை விடப் பலமடங்கு பெரியது! அவர்களை நேருக்கு நேர் மோதி வெற்றி காண முடியாது. எதிரிப்படையில் குழப்பம் உண்டாக்கினால் அவர்களைத் தோற்கடிக்க முடியும். அதற்கான திட்டம் என்னிடம் இருக்கிறது" என்று தன் திட்டத்தை மன்னருக்கு விளக்கினாள்.



அதைக் கேட்டு மன்னர் வியந்து போனார். உடனே, தன் படையில் ஒரு சிறிய பகுதியைப் பிரித்தெடுத்து, அதற்கு அவளை உபதளபதி ஆக்கினார். அவளும் தன் படையை வழிநடத்திச் சென்று, போர்க்களத்தின் இருபுறமும் இருந்த மலைகள் மீதேறிப் பதுங்கிக் கொண்டாள். மறுநாள் போர் தொடங்கியதும், பகைவர் படை மீது எங்கிருந்தோ பாம்புகளும், தேள்களும் வந்து விழுந்தன.

மற்றொரு மலையில்இருந்து, தீப்பந்தங்கள் அவர்கள் மீது விழுந்தன. இதனால் பகைவர் படையில் ஒரே குழப்பம் ஏற்பட்டது. அந்த சமயம், வைசாலி ராஜ்ய வீரர்கள் அவர்களைத் தாக்க, பகைவர்கள் சரிவர போர்புரியாமல் பின்வாங்கி ஓடிப் போயினர். அந்த வெற்றிக்கு முழுக்காரணமான புத்திசாலி இளைஞனைப் பாராட்ட மன்னர் அவனைத் தன் அரண்மனைக்கு அழைத்தார். மன்னர் தனிமையில் இருந்த போது, தன் ஆண்வேடத்தைக் கலைத்தாள் நீலாஞ்சனா.

மகாராஜா! உண்மையில் நான் ஒரு பெண்! உங்களிடம் வேலைக்கு சேர்வதற்காக ஆண் வேடம் போட்டேன். என்னை மன்னிக்கவும்" என்றாள். அவள் எதிர்பார்த்ததற்கு மாறாக, மன்னருக்கு அபார வியப்பும், மகிழ்ச்சியும் உண்டாக, வாரிசில்லாமலிருந்த அவர் நீலாஞ்சனாவைத் தன் மகளாக ஸ்வீகாரம் எடுத்துக் கொண்டு, அவளை இளவரசியாக்கி அவள் விரும்புவதை அறிந்து பிரபாகரனை திருமணமும் செய்து வைத்தார்.

இவ்வாறு, தன் புத்திக்கூர்மையினால் பூலோகத்தில் வைசாலி ராஜ்யத்தின் இளவரசியான நீலாஞ்சனாவைப் பார்த்து, கந்தர்வலோக நீலாஞ்சனா மனம் பூரித்தாள். தன் தோழிகளிடம் தன்னுடைய பிரதிநிதியைப் பற்றிக் கர்வத்துடன் கூறினாள். ஆக, தாங்கள் ஆரம்பித்த விளையாட்டு முடிவுற்றது என்று கந்தர்வலோகப் பெண்கள் கருதினர். அவளை மீண்டும் பழையபடி சிலையாக்குவதற்காக, கந்தர்வலோக நீலாஞ்சனா இளவரசியிடம் வந்தாள். அவள் யார் என்ற உண்மையை இளவரசிக்கு எடுத்துரைத்து, அவளது உயிரை எடுக்கப் போவதாகக் கூறினாள். ஆனால் அதற்கு இளவரசி மறுத்துவிட்டாள்.

"சொல்வதைக் கேள்! நாம் இருவரும் நிரந்தரமாக ஒரே சமயத்தில் வாழ முடியாது. நான் என் உயிரை தற்காலிகமாக உனக்குக் கொடுத்தேன். அதைத் திருப்பி எடுத்துக் கொள்ள என்னை அனுமதி! என்றாள் கந்தர்வ நீலாஞ்சனா. "கந்தர்வப் பெண்ணே! நீ தனிமையாக வாழ்கிறாய். ஆனால் நான் என் வாழ்வை என் கணவருடன் பிணைத்துள்ளேன். என் மீது அன்பைப் பொழியும் என் கணவர் நானின்றி உயிர் வாழ மாட்டார். நான் இப்போது வைசாலியின் இளவரசி! நான் மறைந்து போவதை குடிமக்களும் விரும்ப மாட்டார்கள்!" என்றாள் பூலோக நீலாஞ்சனா.

அவள் கடைசியாகக் கூறிய சொற்கள் கந்தர்வ நீலாஞ்சனாவின் மனதை உருக்கிவிட்டன. ஆகையால் தனது இதயத்திலிருந்து தீ உருவாக்கி, அந்தத் தீயில் எரிந்து மறைந்து போனாள்.

(முற்றும்)



## 02.2014 28 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

➢1710 - சுவீடனில் ஆக்கிரமிப்பு முயற்சியில் ஈடுபட்ட டென்மார்க் படைகள் ஹெல்சின்போர்க் என்ற இடத்தில் வைத்து சுவிடியப் படைகளால் தோற்கடிக்கப்பட்டனர்.

➢1784 - ஜோன் வெஸ்லி மெதடிஸ்த திருச்சபையை ஆரம்பித்தார்.

➢1854 - ஐக்கிய அமெரிக்காவின் குடியரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.

➢1897 - மடகஸ்காரின் கடைசி அரசியான மூன்றாம் ரனவலோனா பிரெஞ்சுப் படைகளினால் பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.

➢1922 - எகிப்தின் விடுதலையை ஐக்கிய இராச்சியம் அங்கீகரித்தது.

➢1935 - வொலஸ் கரோதேர்ஸ் என்பவரினால் நைலோன் கண்டுபிடிக்கப்பட்டது.

➢1953 - ஜேம்ஸ் வாட்சன் மற்றும் பிரான்சிஸ் கிரிக் ஆகியோர் தாம் டி என் ஏயின் வேதியியல் அமைப்பைக் கண்டுபிடித்ததாக அறிவித்தனர்.

➢1986 - சுவீடன் பிரதமர் ஓலொஃப் பால்மே ஸ்டொக்ஹோம் நகரில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

➢1991 - முதலாம் வளைகுடாப் போர் முடிவுற்றது.

➢1998 - கொசோவோவில் கொசோவோ விடுதலை இராணுவத்தின் மீது செர்பியக் காவற்துறையினர் தாக்குதலைத் தொடுத்தனர்.

➢2007 - புளூட்டோவை நோக்கி ஏவப்பட்ட நியூ ஹரைசன்ஸ் தானியங்கி விண்கலம் வியாழனை அண்மித்தது.

### பிறப்புகள்

➢1896 - பிலிப் என்ச், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ. 1965)

➢1901 - லினசு பவுலிக், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க வேதியியலாளர் (இ. 1994)

➢1915 - பீட்டர் மெடாவர், நோபல் பரிசு பெற்ற பிரேசில் அறிவியலாளர் (இ. 1987)

➢1929 - பிராங்க் கெரி, கட்டடக்கலைஞர்

➢1930 - லியோன் கூப்பர், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க இயற்பியலாளர்

➢1931 - துரை விஸ்வநாதன், ஈழத்தின் பதிப்பாளர் (இ. 1998)

➢1939 - தானியேல் சூ, நோபல் பரிசு பெற்ற சீன இயற்பியலாளர்,

➢1948 - ஸ்டீவன் சூ, நோபல் பரிசு பெற்ற அமெரிக்க இயற்பியலாளர்

➢1953 - பால் கிரக்மேன், அமெரிக்க பொருளியல் நிபுணர்

### இறப்புகள்

➢1869 - அல்போன்சு டி லாமார்ட்டின், பிரெஞ்சு வரலாற்று ஆசிரியர் (பி. 1790)


➢1936 - சார்ல்ஸ் நிக்கோல், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1866)

➢**1963 - இராசேந்திர பிரசாத், இந்தியாவின் முதலாவது குடியரசுத் தலைவர் (பி.1884)**

➢2006 - ஓவன் சேம்பர்லெய்ன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க இயற்பியலாளர் (பி. 1920)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### டாக்டர். இராஜேந்திர பிரசாத்



டாக்டர் இராஜேந்திர பிரசாத் 1884ஆம் ஆண்டு டிசம்பர் 3 ஆம் திகதி பீகாரின் சிவான் எனுமிடத்தில் பிறந்தார். இவருடைய தந்தை மகாவீர சாகி. இவரது தாயார் கமலேசுவரி தேவி ஆவார். சிறுவயதில் தன் குடும்பத்தாராலும் நண்பர்களாலும் 'ராஜன்' என அழைக்கப்பட்டார். தனது 12 ஆம் வயதில் ராஜவன்சிதேவி என்ற பெண்ணை மணந்தார்.

இவர் இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவரும் இந்திய விடுதலைப் போராட்ட வீரரும் ஆவார். காங்கிரஸ் கட்சித் தலைவர்களுள் ஒருவர். 1950 முதல் 1962 வரை இந்திய குடியரசுத் தலைவராக இருந்தார். இரு முறை குடியரசுத் தலைவர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே குடியரசுத் தலைவர்.

பல்வேறு கல்லூரிகளில் பேராசிரியராகவும் பின்னர் கல்லூரி முதல்வராகவும் செயலாற்றியுள்ளார். பேராசிரியராக பணியாற்றிக் கொண்டிருக்கும்போதே சட்டத்தில் மேற்படிப்பு படித்து தேர்வில் முதல் மாணவனாக தங்கப் பதக்கத்தை வென்றார். பின்னர் சட்டத்துறையில் முனைவர் பட்டமும் பெற்றார்.

மிகப் புகழ் பெற்ற வழக்குரைஞராக பணியாற்றி வந்த இவர், மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தால் கவரப்பட்டு தன் வேலையைத் துறந்து, அவ்வியக்கத்தில் இணைந்தார். "வெள்ளையனே வெளியேறு" என்ற போராட்டத்தில் கலந்து கொண்டதால் 1942 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு மூன்றாண்டு கால சிறைவாசத்திற்குப் பின் 1945 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ம் திகதி விடுதலையானார்.

இந்தியா சுதந்திரம் அடைந்த இரண்டரை ஆண்டுகளுக்குப்பின் புதிய அரசியலமைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து, 1950ம் ஆண்டு இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவராகப் பதவியேற்ற இராசேந்திர பிரசாத் 1962 ஆம் ஆண்டு வரை பதவியிலிருந்து, பின் ஓய்வு பெற்றார்.

இவருக்கு இந்தியாவின் உயரிய விருதான பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது. இந்திய முதல் குடியரசுத் தலைவர் இராசேந்திர பிரசாத் 1963 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28ம் திகதி காலமானார்.

# சதுரகிரி சித்தர்கள்

....யாரேனும் ஒரு சித்தர் இப்பாறையில் அமர்ந்து வந்து போகும் பக்தர்களைக் கண்காணித்த வண்ணம் இருப்பாராம். அதனால் பக்தர்கள் இதில் அமர்வது கூடாதாம்.

நாற்காலிப் பாறையில் எந்த சித்தர் அமர்ந்திருக்கிறாரோ! அதற்கும் ஒரு வணக்கம் செலுத்திவிட்டு பயணத்தைத் தொடர்ந்தோம்.

பச்சரிசி மேடு

வழியில் ஓரிடத்தில் சிறுசிறு சரளைக் கற்களும் மணலும் கலந்த அமைப்பில் மேடு ஒன்று காணப்படுகிறது. இதனை பச்சரிசி மேடு என்று அழைக்கின்றனர்.

இவ்விடத்தின் மணலை சில பெரியவர்கள் தாளில் பொட்டலமாகக் கட்டி எடுத்துச் சென்றனர். விசாரித்ததில் இந்த அரிசி மணலை வயலில் தூவினால் மகாலிங்கத்தின் அருளால் விளைச்சல் அமோகமாக இருக்குமாம். அதனால் விவசாயிகள் இந்த மணலை நடவு நடுவதற்கு முன் வயலில் தூவுவதற்கு எடுத்துச் செல்வார்களாம்.

வனதுர்க்கை

பச்சரிசி மேட்டைக் கடந்ததும் இடது பக்க இறக்கத்தில் கடை வைத்துள்ள வியாபாரி ஒருவர் வாங்கம்மா வாங்க; வனதுர்க்கைக்கு விளக்கு போடுங்கள்; எண்ணியது எல்லாம் நடக்கும். எலுமிச்சம் பழமாலை அணிவித்தால் சீக்கிரம் கல்யாணம் நடக்கும். அட, அதுக்கும் வசதியில்லைன்னா சூடமாவது வாங்கி ஏத்திட்டுப் போங்க. வனதுர்க்கை வழித்துணையாய் வருவாள் என்று கூவி வியாபாரம் செய்து கொண்டிருந்தார்.



வனதுர்க்கை

வனதுர்க்கைக்கு மாலை வாங்கி போடா விட்டாலும் ஓர் எலுமிச்சம் பழமாவது வாங்கி வைக்கலாம் என்று பழத்தின் விலை கேட்கிறேன். "பழம் பத்து ரூபாய் சார்..." வேண்டாம் நான் சூடமே வாங்கி ஏற்றிக் கொள்கிறேன்.

வனவிலங்குகளால் பக்தர்களுக்குத் துன்பம் ஏற்படாமல் காக்கும் பொருட்டு இந்தச் சுயம்பு வடிவமான துர்க்கையே வழித்துணையாய் வருவாளாம். துர்க்கையை வணங்கிவிட்டுப் பயணத்தைத் தொடருகிறோம்.

பிலாவடிக் கருப்பர்

வனதுர்க்கை அமைந்திருக்கும் பகுதியிலிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் நடந்தால் பலா மரத்தினடியில்

## ஆன்மீகம் 47

குடி கொண்டுள்ள பிலாவடிக் 'கருப்பண்ண சாமி கோயில் வருகிறது.

கோயில் என்னமோ சின்னதுதான் என்றாலும் அதனுள் பொதிந்து கிடக்கும் சித்தர் இரகசியங்களோ ஏராளம்.

சின்னதாக மண்டபம் போல் அமைந்த அந்த கருப்பர் ஆலயத்தில் முன் பக்கம் இரும்பு கிராதிக் கதவுகள் போடப்பட்டுள்ளது. அமாவாசை, பௌர்ணமி தினங்களைத் தவிர மற்ற நாட்களில் இதனை சாத்தியே வைத்திருக்கிறார்கள்.


பலா மரத்தின் கீழ் வலப்பக்கத்தில் க்ருப்பண்ணசாமி கொடுவாள் ஏந்தி காவல் தெய்வமாக நின்றுகொண்டிருக்கிறார். இவர் பிற்காலத்தில் நிறுவப்பட்ட சிலையாயிருத்தல் வேண்டும். இவருக்குக் கீழே காலாங்கிநாதரால் பிரதிட்டை செய்யப்பட்ட பழைய கருப்பரும் இருக்கிறார். பக்கத்தில் பேச்சியம்மை இவர்கள் இருவரும் வணங்கும் மகாலிங்கர் ஆகிய மூன்று தெய்வங்களும் இயற்கையாய் அமைந்த சுயம்பு வடிவங்கள்.

(தொடரும்)

டாக்டர். சி. எஸ். முருகேசன், எம்.ஏ., பி.எச்.டி




# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்



59

.....அப்போது அதன் இயக்குநர் கே.சங்கர் அவர்களும் உடன் இருந்தார். நீங்கள் எங்களுக்காகப் படம் எடுத்தீர்கள். அவை எங்களுக்கு டெக்ஸ்ட் புக். அதிலிருந்து கற்றுக் கொண்டதை மக்கள் ஏற்றுக் கொள்ளும் முறையில் எளிமையாகச் சொல்லுகிறோம் என்றார் கே.சங்கர்.

சாந்தாராம் எந்த ஒரு டெக்னிகல் விடயத்தையும் எல்லோருடனும் கலந்து பேசுவார். சாந்தாராம் திரைப்படம் ஆரம்பித்து விட்டால், பேப்பர் வாங்கிக் கட்டுபடி ஆகாது என்று அவரது மேனேஜர் சொல்லியிருக்கிறார். அந்த பெரிய ஸ்தாபனத்தில் பணியாற்றிய ஒரே ஒரு தமிழர் அவர்தான், கும்பகோணத்தை சேர்ந்தவர். பெயர் ஈஸ்வரன். ஒரு படம் எடுக்க சம்பந்தப்பட்ட எல்லோமே ஏழு காப்பியிருக்கும். கதை, வசனம், படத்துக்கு வேண்டிய பொருட்கள், லொகேஷன் விவரம், அதுமட்டுமல்ல- ஒவ்வொரு ஷாட்களுக்கும் வேண்டிய லைட்டிங் விவரம். அதற்கு உபயோகிக்கும் லென்ஸ்கள். கோணங்கள் எல்லாம் டயாகிராம் போட்டிருப்பார். சில ஷாட்களை சித்திரமாகவே வரைந்திருப்பார்.

ஏழு காப்பி எடுக்கப்பட்ட பெரிய புத்தகம் ஏழு பேர்களிடமும் கொடுக்கப்பட்டிருக்கும். ஆர்ட், மேக்கப், சவுண்ட், கேமராமேன், புரடக்ஷன் மேன், எடிட்டர் மற்றும் அவருக்கு ஒன்று. அவர் எடுக்கும் பட சம்பந்தமான விடயம் லைட் பாய்க்கும் தெரிந்திருக்கும். இதில் கட்டுபாடு என்னவென்றால், அந்த காம்பவுண்டை தாண்டி விடயங்கள் வெளியே போகாது. அவரது பணியாட்கள் எல்



இயக்குநர் சாந்தாராமிடம் ஆசிபெறும் எம்.ஜி.ஆர்.

லாம் மகாராஷ்டிரர்கள். அவர்கள் இயற்கையிலேயே கட்டுப்பாடு உள்ளவர்கள். ஒருவரின் உயர்வுக்கு விதி மட்டும் காரணமல்ல. அவர்கள் தனக்குத்தானே விதித்துக் கொண்ட கட்டுப்பாடும், கொண்ட கொள்கையும் தான்!

இன்னொன்றும் சாந்தாராம் அவர்களிடம் இருந்தது. எதைத் தீர்மானித்தாலும் அதை மற்றவரிடம் சொல்லி புரியவைப்பார். "உலகத்துலே ரொம்ப கஷ்டமானது பிறரை புரிய வைப்பது தான்" என்பார்.

நாடோடி மன்னன் படத்தில் நடந்த பல புரட்சிகளில் இன்னொன்று; அதில் நடித்தவர்களே ஒரு விழா எடுத்து செம்மலுக்கு, ஆள் உயர வெள்ளி சுழற்கோப்பை கொடுத்தது. பொதுவாகவே நடிக நடிகையர்க்கு, தொழில் விற்பன்னர்களுக்கு, தயாரிப்பாளர்தான் பரிசு கொடுப்பார். இப்படத்துக்காக விஜயா கார்டனில் ஒரு விழாவை வைத்து நம்பியார், வீரப்பா, பானுமதி, சரோஜா தேவி, ஜி.சகுந்தலா, ஜி.கே.ராமு, எஸ்.எம்.சுப்பையா நாயுடு ஆகிய ஏழு பேரும் அதைக்கொடுத்தனர். ஒரு கல அளவு நெல்கொள்ளும். அவ்வளவு பெரிது. அந்த சுழற்கோப்பை தலைவர் தோட்டத்து வரவேற்பு அறையில் வெகுநாட்களாக இருந்தது.


செம்மல் முதல்வர் ஆனதும், அந்த வீட்டு அமைப்பை மாற்ற சிலர் விரும்பினர். எம்.ஜி.ஆர். முதல்மந்திரி ஆனதும் ஊர் பணத்துலே வீட்டை ஜோடனை பண்ணிட்டாருன்னு மத்தவங்க சொல்லணும்னு நினைச்சா செய்யலாம் என்றார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு நிறுவனங்களின் கொடையிலேயே இங்கு அபிவிருத்தி பணிகள் நடைபெறுகின்றன

## அரசாங்கம் தானாக எதையும் செலவு செய்யவில்லை



(யாழ்ப்பாணம்)
நாங்களாக நினைத்து எது சரியோ எது முறையோ அதைச் செய்வது தான் ஜனநாயகம்.

அதாவது மக்கள் தமக்கு நாயகர்களாக வரும் விதத்தில், ஆட்சி பரிணாமம் பெறுவதே ஜனநாயகம்.

எமது மக்களின் ஆசைகளையும் அபிலாஷைகளையும் நாம் பூர்த்தி செய்ய முன்வரவேண்டும் அதைவிட்டுவிட்டு எமது நலன்களைப் பிரத்தியேகமாகப் பெறும் பொருட்டு மக்களை அடக்கி ஆள முற்பட்டால் அங்கு எதேச்சாதிகாரமே உருவெடுக்கும் என வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மாந்தை கிழக்குப் பிரதேச சபை நட்டாங்கண்டல் பொதுச் சந்தை திறப்புவிழா அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தனதுரையில்,

உலக வங்கியின் உதவியின் கீழ் NELSIP நிறுவனத்தால் கட்டப்பட்ட சந்தையானது உங்கள் இயற்கையோடு ஒன்றிய வாழ்க்கையில் ஒரு புதிய திருப்பத்தை உண்டாக்கியுள்ளது என்று கூறலாம்.

ஆனால் உங்கள் இயற்கையான வாழ்க்கையில் இருந்து விடுபடாது நவீன அனுசரணைகளைப் பெறுவதில்தான் உங்கள் மேம்பட்ட வாழ்க்கை மேலும் மேன்மையுறும்.

பட்டணத்தில் இருந்து வருவோர் பேசும் பேச்சுத்தான் இது. எங்கள் பிரச்சினைகள், உங்களுக்கு என்ன தெரியும்? என்று நீங்கள் கேட்கக் கூடும். இருக்கலாம். ஆனால் எமது பாரம்பரிய வாழ்க்கை முறையை மறக்காது, பறிகொடுக்காது, வெறுக்காது புதியவற்றை ஏற்றுக் கொள்வதில்தான் எமது மேன்மை அமைந்திருக்கின்றது.

இன்று எங்கள் பாரம்பரியங்கள் மறக்கப்படுகின்றன. உதாசீனப் படுத்தப்படுகின்றன. புதிய வாழ்க்கை முறைகள் உட்புகுத்தப்பட்டு வருகின்றன.

உழைத்துப் பணம் பெறவேண்டும் என்ற எண்ணமே எங்களை விட்டு ஓடிப் போய் அந்த இடத்தில் உழைக்காமல் எவ்வாறு பணம் சம்பாதிக்கலாம் என்ற எண்ணம் மேலோங்கி வருகின்றது. இது துரதிர்ஷ்டவசமானது. உழைப்பது சுமையுடையது தான். ஆனால் அந்தச் சுமையைச் சுமப்பதில் தான் எமது உழைப்பின் மதிப்பும் மரியாதையும் மகிழ்வும் தங்கி இருக்கின்றது. ஆனால் சுமைகளைக் குறைக்கப் பார்ப்பதில் பிழையேதும் இல்லை.

விவசாயிகளுக்குச் சந்தைப்படுத்தல் பாரிய சுமை. புதிய சந்தை அந்தச் சுமையை ஓரளவு குறைக்கக் கூடும் என்று எதிர்பார்க்கலாம். விவசாயத்துக்கு உகந்த பலத்தையும் இச் சந்தையின் ஊடாக நீங்கள் பெற்றுக் கொள்ளவும் விற்றுக் கொள்ளவும் வாய்ப்பு எய்தும்.

எனினும் நான் இங்கு உங்களுக்குக் கூறி வைப்பது என்னவென்றால் எமது பாரம்பரிய இயற்கையோடு ஒன்றிய வாழ்க்கை முறையைக் கைவிடாது நவீன அனுசரணைகளையும் உள்ளெடுத்து நீங்கள் முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்பதையே.

உண்பதற்கு உணவு கிராமத்திலிருந்து தான் வருகின்றது; நகரத்தில்தான் இருக்கின்றது என்று நாங்கள் எண்ணினாலும் அவர்களுக்கு உணவுக்கு வாய்ப்பில்லை என்றால் நகர மக்களால் வாழமுடியாது.

நாங்களாக நினைத்து எது சரியோ, எது முறையோ அதைச் செய்வது தான் ஜனநாயகம். அதாவது மக்கள் தமக்கு நாயகர்களாக வரும் விதத்தில் ஆட்சிப் பரிணாமம் பெறுவதே ஜனநாயகம்.எமது மக்களின் ஆசைகளையும் அபிலாசைகளையும் நாம் பூர்த்தி செய்ய முன்வர வேண்டும். அதை விட்டு விட்டு எமது நலன்களைப் பிரத்தியேகமாகப் பெறும் பொருட்டு மக்களை அடக்கி ஆள முற்பட்டால் அங்கு எதேச்சாதிகாரமே உருவெடுக்கும்.

இலங்கையில் மத்திய அரசாங்கம் இருக்கும் அதே நேரம் மாகாண சபைகளுக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கும் அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுத்திருக்கின்றது சட்டம். அவ்வாறு பகிர்ந்து கொடுத்துள்ள அளவுப் பிரமாணம் எமக்குப் போதுமானதாக இல்லாதிருப்பினும் சட்டம் எமக்குத்தந்துள்ளதைக் கூடப் பறித்தெடுக்க அல்லது தராது பறிக்க அரசாங்கம் முயன்று வருகின்றது.

நாம் எவ்வளவு பணம் செலவு செய்து தெருக்கள் போட்டோம். ரயில் வரச் செய்தோம், கட்டடங்கள் கட்டினோம். பல வேலைத்திட்டங்களில் ஈடுபட்டோம்.

நீங்கள் எமக்கு வாக்களிக்கவில்லை. ஆகவே உங்கள் மாகாண சபையை நடத்தவிட மாட்டோம் என்பது போல் சட்டம் எமக்குத் தந்த உரித்துக்களையுந் தராது எம்மை முடக்கி வருகின்றது மத்திய அர சாங்கம். இவ்வாறு முடக்குவது ஜனநாயகத்திற்குப் புறம்பான செயல்.

அத்துடன் எமக்குத் தரப்பட்ட காப்பெட் தெருக்களும் மற்றைய கட்டமைப்புக்களும் வெளிநாடுகளும் வெளிநாட்டு நிறுவனங்களும் எமக்குத் தந்துதவிய கொடையே அன்றி அரசாங்கம் தானாக எதையும் எங்களுக்குச் செலவு செய்யவில்லை.

எனவே மேலிருந்து எம்மை முடக்கப் பார்க்காமல் கீழிருந்து எம்மை நாமே ஆண்டு வருவதை மேலிருந்து பார்த்து மகிழ்வடையும் ஒரு அரசியல் சித்தாந்தமே ஜனநாயகம் என்பதை நாம் எல்லோரும் மறந்து விடக்கூடாது.

அதிகாரங்களை நாங்கள் மற்றவர்களுக்குப் பகிர்ந்தளித்துள்ளோம் என்ற எண்ணத்துடன் எமது கடமைகளை ஆற்றுவதே இன்றைய காலத்தின் தேவையாக உள்ளது.

கீழ் மட்ட மக்களின் தேவைகளை அவர்கள் தான் அறிவார்கள். அதற்கேற்பவே அபிவிருத்தி நடைபெற வேண்டும்.

அதனால் நாடு பற்றிய பாரிய காட்சித்திரையையும் மனதில் வைத்துக் கொண்டு முன்னேறுவதே நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை பயக்கும். உங்கள் பிரதேச சபை உங்கள் மக்களுக்கு ஆற்றி வரும் சேவைகளைப் பாராட்டும் அதே சமயம் எம்மால் ஆன உதவிகளை உங்களுக்குச் செய்து தரவும் நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

மாகாணசபை –உள்ளூராட்சிச் சபைகளின் உறவுகளும் அரசாங்கம்– மாகாணசபை ஆகியவற்றின் உறவுகளும் சுமுகமாக இருந்தால் தான் மக்கள் பயனடைவார்கள், சுபீட்சம் பெறுவார்கள். அதற்காக மூன்று கட்ட ஆட்சிமுறைகளும்ஒருக்கொருவர் விட்டுக் கொடுத்துத் தத்தமது ஆட்சிகளைச் சிறப்புடன் ஆற்ற முன்வர வேண்டும் என்றார். (அ-2)

# தேர்தல் பிரசாரத்தில் பாதாள உலக குழுவினர்

(கொழும்பு)
பாதாள உலகக் குழுவினர் தேர்தல் பிரசாரப் பணிகளில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பதினைந்து பாதாள உலகக் குழுக்களைச் சேர்ந்த 181 பேர் இவ்வாறு பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மேல் மற்றும் தென் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்காக இவர்கள் பிரசாரத்தில் ஈடுபடுகின்றனர்.

கடந்த கால தேர்தல்களின் போதும் இந்த பாதாள உலக குழு உறுப்பினர்கள் குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளனர்.

பாதாள உலகக் குழுவினர் செயற்பாடுகள் குறித்து அவதானமாக இருக்குமாறு பொலிஸாருக்கு பொலிஸ் தலைமையகம் பணிப்புரை விடுத்துள்ளது.

பிரசாரப் பணிகளுக்கு பாதாள உலக குழுவினரை இணைத்துக் கொள்ள வேண்டாம் என வேட்பாளர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல் வன்முறைகளில் ஈடுபடுவோருக்கு எதிராக தராதரம்பாராது நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல்களுக்குப் பொறுப் பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ன தெரிவித்துள்ளார். (அ-2)



வல்வெட்டித்துறை இராணுவப் படைப்பிரிவின் ஏற்பாட்டில் மாணவர்களுக்கு பல் மருத்துவம் இடம் பெற்றதை படத்தில் காணலாம்.

# சேதனப்பசளை உற்பத்திகளுக்கு முதற்தர சான்றிதழ் அறிமுகம்

(கொழும்பு)
எமது நாட்டுக்கே உரித்தான தாவரங்களும் உயிரினங்களும் இரசாயனப் பசளை பாவனையினால் அழியும் அபாயம் தோன்றியுள்ளது. எமக்கே உரிய புதையலை நாம் பாதுகாக்கவேண்டும். அதற்கான செயற்பாட்டை தற்போது நாம் ஆரம்பித்துள்ளோம் என தொழில் நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

சேதனப்பசளையினால் உற்பத்தி செய்யப்பட்ட நெல் மற்றும் உணவுப்பொருட்களுக்கான தரக் கட்டுப்பாட்டுச் சபையினால் வழங்கப்பட்ட SLS 1324 முதற் தரச்சான்றிதழை அறிமுகப்படுத்தும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இந் நிகழ்விலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

இரசாயன பசளையினால் உயிரினங்களுக்கு பாதிப்பேற்படுகின்றது என 1962ஆம் ஆண்டில் முதன் முதலில் ஐரோப்பிய பெண்மணி ஒருவர் முறைப்பாடு செய்திருந்தார். ஒவ்வொரு வசந்த காலத்தில் தனது தோட்டத்திற்கு வரும் ரொபின் குருவியின் வருகை முற்றாக நின்று போனமைக்கு இரசாயனப் பசளையே காரணம் என்று அவர் தெரிவித்திருந்தார்.

நாட்டில் வேகமாக சிறுநீரக பிரச்சினைத் தோன்றுவதற்கு இர சாயனப் பசளையே காரணம் என களனி பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஆய்வு செய்து தெரிவித்தனர். ஆனால்அதனை ஒருவருமே கவனத்தில் கொள்ளவில்லை. அது எமது துரதிர்ஷ்டம்.

இன்று இரசாயனப் பசளையின் பாவனை பல்கிப் பெருகி காணப்படுகிறது. இதனை ஏதோவொரு வகையல் நாம் நிறுத்தியாகவேண்டும். இரசாயனப் பசளை பாவனையற்ற விவசாயத்தை முன்னெடுப்பதற் கானசரியான நெறிமுறையொன்றை நாம் அறிமுகப்படுத்த வேண்டும். அதன் ஒரு கட்டமே இன்று நாம் அறிமுகப் படுத்தும் தரச்சான்றிதழ் ஆகும் .

நாம் எமது பாவனையாளர்களை பாதுகாக்கவேண்டும். இன்று இரசாயன கலவையற்ற உண்வு வகை என பலர் ஏமாற்றுகின்றனர். இரசாயனப் பசளையினால் பயிரிடப்பட்ட தாவரங்கள் எவை? இரசாயனப் பசளையை பயன்படுத்தி உருவாக்கிய தாவரங்கள் எவை? என எமது பாவனையாளர்கள் அறிந்து வைத்திருக்கவேண்டும். அதற்கான அறிவை பாவனையாளர்களுக்கு வழங்குவது எமது கடமை.

எமது நாட்டின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டே நாம் செயற்படுகிறோம். எமது இளந்தலைமுறையை நாம் எப்போதும் பாதுகாக்க வேண்டும். எந்தவொரு அரசியலும் செயற்பாடும் இதற்கு தடையாக இருக்கும் பட்சத்தில் அதற்கு எதிராக நாம் செயற்படுவோம்.

அறுபதுகளில் ஆரம்பிக்கப்பட்ட இரசாயனப் பாவனையினால் இன்று எமது குளங்களுக்கே உரித்தான உயிரினங்கள் இல்லை. பறக்கும் சிறு பறவைகள் காணாமல் போயுள் ளன. ஸ்ரீபாதமலையை வணங்கச் சென்ற வண்ணத்துப்பூச்சிகளை இப்போது காணவில்லை. இந்த நிலை மையை எதிர்கால சந்ததிக்கு இல்லாமல் செய்ய வேண்டும் எனத் தெரிவித்தார்.(அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர்களின் முன்னேற்றத்திற்கு சிகரத்தின் அடுத்தகட்ட நடவடிக்கை

சிகரம் நிறுவனம் ஐந்தாம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் நிகழ்வை முன்னிட்டு, வடக்கு மாகாண இளைஞர், யுவதியரின் முன்னேற்றத்திற்கு சிகரம் நிறுவனம் தற்போது முன்னெடுத்துவரும் நடவடிக்கைகள் தொடர்பிலும் எதிர்காலத்தில் முன்னெடுக்க வேண்டிய திட்டங்கள் தொடர்பிலும் இம்மாதம் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை விசேட கலந்துரையாடல் ஒன்று நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

சிகரம் நிறுவனத்தின் பணிப்பாளர் கோ.றுஷாங்கன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், ஆரம்பத்தில் 2009 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை சிகரத்தின் வளர்ச்சிக்கு கூடவே இருந்து கைகொடுத்து வழிகாட்டியவர்களுக்கும், நிறுவனங்களுக்கும் சிகரம் நிறுவத்தின் சார்பில் பணிப்பாளர் நன்றி தெரிவித்தார்.

வடக்கு மாகாண இளைஞர் யுவதியரின் முன்னேற்றத்திற்கு தாம் மேலும் பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகக் குறிப்பிட்ட அவர், தனி ஒரு நிறுவனத்தால் வடக்கு மாகாணம் முழுவதுமுள்ள இளைஞர், யுவதியரின் கல்வி-தொழில் முன்னேற்றங்களுக்காக செயற்பட முடியாதெனவும், இதற்கு சிகரம் நிறுவனத்துடன் இணைந்து செயற்பட பலரும் முன்வர வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இதனையடுத்து, தற்போதுள்ள கல்வி முறைமை, மாணவர்களுக்கான பாடத் தெரிவுகள், இளைஞர், யுவதியருக்கான உயர்கல்வி, தொழில் வாய்ப்புக்கள், சுயதொழில் ஊக்குவிப்புக்கள், முதலீட்டு வாய்ப்புக்கள்





என்பன தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டதுடன், இளைஞர், யுவதியருக்கான தொழில் மையமான கல்வி வழிகாட்டல், தொழில் வழிகாட்டல், தொழில்வாய்ப்புக்களை உருவாக்குவதற் கான முதலீடுகளை அதிகரிக்கும் வழிவகைகள் என்பன தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டன.

இந்தக் கலந்துரையாட்லில், சிகரம் நிறுவனத்தின் சிரேஷ்ட ஆலோசகர் ம.சூரியசேகரம், யாழ். பல்கலைக்கழக கணித புள்ளி விபரவியல்துறை விரிவுரையாளர் கலாநிதி செ.அறிவழகன், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி முன்னாள் அதிபர் கலாநிதி நொயேல் விமலேந்திரன், நெல்லியடி மத்திய கல்லூரி அதிபர் எஸ். சேதுராஜா, பாட்லிற் நிதி நிறுவனத்தின் முகாமைத்துவ ஆலோசகர் நிரஞ்சன், டான் தொலைக்காட்சி உரிமையாளர் எஸ்.குகநாதன், ஊடகவியலாளர் சி.கருணாகரன், தினமுரசு பத்திரிகையின் ஆசிரியர் சி.சிவகுமார், யாழ். வர்த்தக சங்க பொருளாளர் இ.ஜெயராசா, சிகரம் ஊடகக் கற்கை விரிவுரையாளர்கள், விஜயா நியூஸ் பேப்பர்ஸ் நிறுவன யாழ்.முகாமையாளர் ஜனகன், தமிழ் மிரர் ஊடகவியலாளர் கு.சுரேன், யாழ்.பல்கலைக்கழக நிதிப் பிரிவுப் பணியாளர் பே.ராஜ்குமார், கிராமிய உழைப்பாளர் அபிவிருத்தி ஒன்றியத்தைச் சேர்ந்த ச.பாலசிங்கம் மற்றும் சா.தங்கராசா, உடுவில் மகளிர் கல்லூரியின் தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் ஆசிரியர் று.சுதாஜினி என பல்துறை சார்ந்தவர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் இறுதியில், வடக்கு மாகாணம் தழுவியதாக, மாணவர்கள், இளைஞர், யுவதியருக்கான கல்வி - தொழில் முன்னேற்றங்கள், சுயதொழில் ஊக்குவிப்புக்கள், தொழில்வாய்ப்புக்கள், முதலீட்டு வாய்ப்புக்கள் தொடர்பில் வழிகாட்டல்களை வழங்குவதுடன் இதுகுறித்த செயற்பாடுகளை திட்டமிட்டு முன்னெடுப்பதற்கென விசேட குழு ஒன்று, பொறியியலாளர் ம.சூரியசேகரம் தலைமையில் உருவாக்கப்பட்டது.

# மஹிந்த அரசால் அதிகாரமின்றி இருக்க முடியாது-ஜே.வி.பி.கட்சி

ராஜபக்ஷாக்களினால் அதிகாரமின்றி இருக்க முடியாது என ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க போன்றோர் அதிகாரமின்றி இருந்துவிடுவார்கள் என ஜே.வி.பி.யின் புதிய தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

எனினும், ராஜபக்ஷ சகோதரர்களினால் அதிகாரமின்றி இருக்க முடியாது. ராஜபக்ஷாக்கள் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளனர்.

அவ்வாறு குற்றம் இழைத்த காரணத்தினால்தான் பதவியை விட்டுக் கொடுக்க அஞ்சுகின்றனர். ஏனெனில் வேறு ஒருவர் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினால் விசாரணைகள் நடத்தப்படும் என்ற அச்சத்தினால், ராஜபக்ஷாக்கள் இவ்வாறு அதிகாரத்தை துறக்க அஞ்சுகின்றனர் .

எனவே, ஏதாவது ஓர் வழியைப் பயன்படுத்தி ஆட்சி அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்வதில் அரசாங்கம் நாட்டம் காட்டும் . 17ஆம் திருத்தச் சட்டத்தை இரத்து செய்து, சுயாதீன ஆணைக்குழுக்களை வலுவிழக்கச் செய்து, 18 ஆம் திருத்தச்சட்டத்தை இதன் காரணமாகவே அரசாங்கம் அறிமுகம் செய்துள்ளது.

அரசியல் சாராத ஓர் போராட்டம் நடத்தப்பட்டால் கூட அரசாங்கம் பீதியடைந்து விடுகிறது.

ரத்துபஸ்வல, சிலாபம், கட்டுநாயக்க போன்ற பிரதேசங்களில் இடம்பெற்ற சமூகப் பொருளாதாரத்தை வலியுறுத்திய போராட்டங்களை அரசாங்கம் கட்டுப்படுத்திய விதம் இதற்கான சிறந்த உதாரணமாகும்.

ராஜபக்ஷாக்களின் பிம்பங்களை ஊடகங்கள் பூதாகரமாக்கி காண்பித்து வருவதாகவும் மெய்யாக அவ்வாறான ஓர் நிலைமை கிடையாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஊடகவியலாளர்களுக்கு இலஞ்சம் வழங்கப்படுகிறது. சிரேஷ்ட ஊடகவியலாளர் ஒருவரின் பிள்ளைகள் ஜனாதிபதியின் நிதி உதவியில் வெளிநாட்டில் கல்வி பயில்கின்றனர்.

குற்றவாளிகளை கண்டு பிடித்து தண்டிப்பதற்கு பொலிஸார் தயக்கம் காட்டினால் அந்தக் குற்றச் செயல்களுடன் அரசாங்கத் தரப்பு சம்பந்தப்பட்டிருப்பது வெளிச்சமாகின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# நட்சத்திர வடிவில் மர்மப் பொருள்

ஹற்றன் பகுதியில் நட்சத்திர வடிவிலான மர்மப்பொருளொன்று வானில் தென்பட்டதையடுத்து அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மர்மப் பொருள் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் தென்பட்டுள்ளது.

வானத்தில் காணப்பட்ட நிலவுக்கு அருகில் நட்சத்திரம் போன்ற மிகவும் பிரகாசமாக காணப்பட்ட குறித்த மர்மப் பொருள் சுமார் 20 நிமிடம் வரை தென்பட்டதாகவும் பின்னர் நிலவுக்கு பின்புறமாகச் சென்று மறைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு மர்மப்பொருள் வானத்தில் தென்பட்டதனால் அதனை பெருமளவான மக்கள் பார்வையிட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# முதல் முறையாக ஸ்கைப் தொ.நு.மூலம் சாட்சியம்

(கொழும்பு)

இலங்கை நீதவான் நீதிமன்றத்தின் வரலாற்றில் முதல் முறையாக ஸ்கைப் தொழில்நுட்பம் மூலமாக இத்தாலியில் இருந்து சாட்சியாளர் ஒருவரிடம் சாட்சியத்தை பெற கோட்டை நீதவான் திலின கமகே தீர்மானித்துள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனி பயிற்சி நிறுவனத்தின் சுயாதீன கண்காணிப்பாளர் ஒருவரின் வழிகாட்டலில் எதிர்வரும் மார்ச் 14 ஆம் திகதி ஸ்கைப் மூலம் சாட்சியத்தை பெற தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் நீதவான் ஆலோசனை வழங்கியுள்ளார்.

பிரான்சிஸ்கா தியதா என்ற இத்தாலிய பெண் 2011 ஆம் ஆண்டு இலங்கையில் ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த போது தன்னிடம் இருந்த 700 அமெரிக்க டொலர்கள் கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதனடிப்படையில் பொலிஸார் தாக்கல் செய்த வழக்கிலேயே இந்த ஸ்கைப் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படவுள்ளது.

ஹோட்டல் ஊழியரான தனஞ்ஜய பிரபாத் என்ற நபருக்கு எதிராகவே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஹோட்டலில் பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்பு கமராக்களில் பெறப்பட்ட காட்சிகளை பொலிஸார் சந்தேக நபருக்கு எதிரான சாட்சியமாக முன்வைத்துள்ளனர். (அ-2)

# பாம்பு... பாம்பு...!



கிண்ணியா பிரதேச காக்காமுனை, அரை ஏக்கர் பகுதியிலுள்ள வாவியொன்றிலிருந்து திடீரென ஏராளமான பாம்புகள் திரண்டு வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

பாம்பு போன்ற நீளமாக அண்மையில் ஆயிரக்கணக்கில் திரண்டு வந்துள்ளன. இதனைப் பார்வையிட்ட அப்பகுதி மக்கள் பரபரப்படைந்ததாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ராஜீவ் கொலை பெரிய தப்பு....!

## அற்புதம்மாளின் நேர்காணல்

"ராஜீவ் காந்தியோட அந்த சாவுதான் எங்களோட வாழ்க்கையையும் சூறையாடப்போவுதுன்னு அப்ப தெரியல்ல" என்கிறார் பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள்.

**இந்த நாட்டில் சர்வவல்லமை பொருந்திய அமைப்புக்களோடு 23 வருடங்கள் போராடி உங்கள் மகனைத் தூக்குக் கொட்டடியிலிருந்து மீட்டிருக்கிறீர்கள். இந்தப் போராட்டத்துக்கான மனோபலம் எங்கிருந்து உருவானது?**

பெரியார்க்கிட்டே இருந்துதான்பா உருவானுச்சு. நான் பொறந்தது தி.மு.க. குடும்பத்துல. எங்கப்பா டி.எ.திருவேங்கடம் கட்சியில எந்தக் கூட்டம், போராட்டம்னாலும் எங்களையும் கூடவே அழைத்துக்கிட்டுப்போயிடுவார். குரல் ஒப்பிக்கிறது. கூட்டங்கள்ல பேசுறதுன்னு வாய்ப்புக் கிடச்சப்பல்லாம் போய்க்கிட்டுத்தான் இருந்தேன். ஆனால் உண்மையான அரசியலை பெரியார்க்கிட்டேயிருந்துதான் கத்துக்கிட்டேன்.

**பெரியார் எப்போது அறிமுகமானார்?**

என்னோட கணவர் குயில்தாசன்கிட்டேயிருந்து. அவர்தான் பெரியாரையும் சுயமரியாதை வாழ்க்கையையும் அறிமுகப்படுத்தினார். மொத மொதல்ல கலந்துக்கிட்ட தி.மு.க. கூட்டத்திலேயே சின்னச்சின்ன விடயங்கள்கூட ரொம்பப் பிடிச்சுப்போச்சு. தி.மு.க. கூட்டங்களிலேயும் கலந்துக்கிட்டிருக்கேன்னாலும் கூட்த்தை அங்கே ஆண், பெண்ணுன்னு ரெண்டு வரிசையாப் பிரிச்சுருப்பாங்க.

இங்கே அந்தப் பாகுபாடு கிடையாது. எல்லோரும் சமம்ங்கிறது பதிஞ்சுது. ஒரு காலத்துல எல்லாப் பெண்களையும் போல நகை நட்டுப் போட்டுக்கிட்டு வெளியே போன நான் பெரியார் பேச்சைக் கேட்க ஆரம்பிச்சதுக்கு அப்புறம் இந்த சமூகம் பெண்களுக்கு அழகுன்னு கற்பிச்சு வச்சிருக்கிற எல்லாமே கை விலங்கெங்கிறதைப் புரிஞ்சுக்கிட்டு தாலியே வேணாம்னு முடிவெடுத்தேன். எல்லோரும் எதிர்த்து நின்னாலும் நாம சளைக்கக் கூடாதெங்கிற தைரியத்தையும் அங்கேதான் கத்துக்கிட்டேன்.

என் பிள்ளைகளுக்கும் சொல்லிக்கொடுத்தேன். கூட்டங்கள், போராட்டங்கள்ல எல்லாம் குடும்பமாகவே கலந்துக்கிட்டோம். நானே ரெண்டு தடவை சிறைக்குப் போயிருக்கேன். இயக்கத்தைத் தனியாவும் எங்க குடும்பத்தைத் தனியாவும் நாங்க பாக்கல்லை.

**ராஜீவ் கொலையை இப்போது நினைவு கூறமுடியுமா?**

எப்படிப்பா மறக்கமுடியும்? எங்க வாழ்க்கையையே புரட்டிப்போட்ட சம்பவம் இல்லையா அது? ராஜீவ் கொல்லப்பட்ட செய்தி வந்தப்போ



எல்லாக் குடும்பங்களையும்போல எங்க குடும்பமும் ஆடிப்போச்சு. அதுவும் ராஜீவோட கோரமான சாவு. அந்தப் படங்களையெல்லாம் பாத்தப்போ உடைஞ்சுபோயிட்டோம். ஆனா அப்ப தெரியலையே... அந்தச் சாவுதான் எங்களோட வாழ்க்கையையும் சூறையாடப் போவுதுன்னு.

**ஈழத்தமிழர் பிரச்சினையில் ராஜீவ் நிலைப்பாட்டையும் அவர் கொல்லப்பட்டதையும் பற்றி உங்கள் கருத்து என்ன?**

ராஜீவோட அணுகுமுறையை எப்படிப்பா சரின்னு சொல்ல முடியும்? ஈழத்தமிழர்கள் எவ்வளவு பேர் இந்திய அமைதிப்படையால கொல்லப்பட்டாங்க, எவ்வளவு தமிழ்ப்பெண்கள் சீரழிக்கப்பட்டாங்க, ராஜீவோட தவறான முடிவு தானே இதுக்கெல்லாம் காரணம்? அவரு அவங்கம்மா பாதையை பின்பற்றியிருக்கலாங்கிறது என்னோட கருத்து. ஆனா எதுக்காகவும் ஒரு உயிர் கொல்லப்படக் கூடாதுன்னு போராடுற நான் எப்படி ராஜீவ் கொல்லப்பட்டதை சரின்னு சொல்வேன்? பெரிய தப்புப்பா....

**பேரறிவாளன் இந்தக்கொலை வழக்கில் சிக்கியபோது உங்கள் வீட்டுச்சூழல் எப்படியிருந்தது? அதை நீங்கள் எப்படி உள்வாங்கினீர்கள்?**

அப்போதான் என் பெரிய பொண்ணு அன்புக்கு மாப்பிள்ளை பார்த்திருந்தோம். சின்னப் பொண்ணு அருள் படிச்சுக்கிட்டிருந்தார். அறிவுக்கு அப்போ 19 வயசு. டிப்ளோமா படிச்சிருந்தவன். வேலை செஞ்சுக்கிட்டே இன்ஜினியரிங் படிக்கிறதுக்கு ஏதுவா சென்னையில பெரியார் திடல்ல தங்கியிருக்கான்.

ஏன் அங்க தங்கியிருந்தான்னா அதுதான் அன்னைக்கு சொந்தக்கார வீடு. இந்த நெலமையில தான் மே 21 ஆம் திகதி ராஜீவ் கொல்லப்படுறார். ஜுன் 10 ஆம் திகதி ராத்திரி 12 மணிக்கு எங்க வீட்டுக்கதவு தட்டப்படுது.

உங்க மகன்கிட்டே சில விபரங்களை விசாரிக்கணும். 2 நாள்ல மல்லிகைக்கு வரச் சொல்லுங்கன்னு சொல்லிட்டுப் போனாங்க. படிப்புல ஆகட்டும், பண்புல ஆகட்டும் ரொம்ப உயர்வானவன் அறிவு. நம்ம பக்கம் எந்தத்தப்பும் இல்லையேங்கிற தைரியத்துல நாங்க தயாரானோம். மறுநாள் காலையிலேயே அனுப்பிடுறோம்னு சொல்லித்தான் அவனை அழைச்சுக்கிட்டுப்போனாங்க. ஆனா என் புள்ள இன்னும் வெளியே வரலையய்யா.......

**இந்த வழக்கில் பேரறிவாளன் சிக்கியதற்கான பொறி எது?**

அன்றைய காலச்சூழல். ஈழத் தமிழர்களுக்கு ஆதரவா ஒவ்வொரு தமிழரும் அனுதாபம் காட்டின நேரம் அது. தமிழ் உணர்வாளர்கள் பலரோட வீட்டையும் போல எங்க வீட்டுலேயும் தம்பி படம் மாட்டியிருந்துச்சு. அறிவு, அவங்க அப்பா ரெண்டுபேரும் ஈழத் தமிழர்களுக்காக குரல் கொடுத்தவங்க. கூடவே நளினியோட தம்பி பாக்கியநாதன், திமு.க. கூட்டங்கள் வாயிலா இவங்களுக்கு அறிமுகமாயிருந்தார். இது எல்லாத்தையும் சேர்த்தே அறிவைக் குற்றவாளியா ஜோடிச்சாங்க.

**ஆரம்பத்தில் உங்கள் மகன் தான் வெடிகுண்டைத் தயாரித்தவர் என்று சொன்னார்கள் இல்லையா?**

> "ராஜீவ் காந்தியோட அந்த சாவுதான் எங்களோட வாழ்க்கையையும் சூறையாடப்போவுதுன்னு அப்ப தெரியல்ல........"

அறிவு ஒரு வெடிகுண்டு நிபுணன்னே ஜோடிச்சாங்கப்பா. அந்தப் பொய்யை நம்பவைக்க முடியாததால அறிவு பற்றரி வாங்கிக் கொடுத்தான். அந்த பற்றரியைப் போட்டுத்தான் குண்டை வெடிச்சாங்கன்னு கதையை மாத்தினாங்க. உண்மை என்னன்னா ராஜீவ் கொலைக் குற்றவாளிகளை இவங்களால பிடிக்க முடியலை. அதனால பிடிச்சவங்களையெல்லாம் குற்றவாளியா மாத்தினாங்க.



அப்போ அவங்க போடுற ஆட்டத்துக்கு ஏத்த மாதிரி ஒரு சட்டம் இருந்துச்சு. தடா.

ஒருத்தரைப் பிடிச்சுக்கிட்டுப் போக எந்தக் காரணத்தையும் சொல்லவேண்டியது இல்லை. என்ன குற்றச்சாட்டை வேணும்னாலும் சுமத்தலாம். அடிச்சுத் துவச்சு மிரட்டி வாங்குற கையெழுத்துகளை வைச்சு வாக்குமூலம் தயாரிக்கலாம். மூடின அறைக்குள் யாரையும் விடாம விசாரிக்குற எல்லாத்தையும் நீதிமன்றம் ஏத்துக்கும். அப்படி ஏத்துக்கிட்டுதான் உலகத்துல எந்த நாட்டிலேயும் நடந்திராத நடக்காத கொடுமையா 26 பேருக்கு தூக்குத் தண்டனைய விதிச்சுது.


**பேரறிவாளனுக்கு நீதிமன்றங்களில் மூன்று முறை மரண தண்டனை அறிவிக்கப்பட்டது. உச்சக்கட்டமாக குடியரசுத் தலைவரே கருணை மனுவை நிராகரித்தார். அந்தச் சூழலை எல்லாம் எப்படி எதிர்கொண்டீர்கள்?**

ஒவ்வொரு முறையும் நெஞ்சு வெடிச்சுச் சிதறுற வலியைக் கடந்துதான்பா வந்தேன். அதெல்லாத்தையும் விடப்பெரிய கொடுமை கருணை மனு நிராகரிக்கப்பட்டதுக்கு அப்புறம் .......

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# WHATS APP ஐ வாங்கியது FACEBOOK நிறுவனம்



காலத்தின் நவீனமயத்துக்கு ஏற்ப இந்த பரந்த உலகின் தகவல் தொடர்பு சாதனங்கள் மிகவும் குறுகிப்போய் கைபேசியின் துணையால் உள்ளங்கையில் உலகம் என்ற அளவுக்கு சுருங்கி விட்டது.

'பேஜர்', 'செல்போன், எதிர் முனையில் இருப்பவரின் முகத்தை பார்த்தபடியே பேசும் திறன் கொண்ட '3-ஜி செல்போன்' ஆகியவற்றின் மூலம் 'இ-மெயில்', பேஸ்புக்', டுவிட்டர்' போன்ற இணையங்களின் வாயிலாக உலகின் கடைக்கோடியில் உள்ள செய்திகளையும் நாம் உடனுக்குடன் அறிந்து கொள்ள முடிகிறது.


இந்த நவீனமயத்தின் அடுத்தகட்ட பரிணாம வளர்ச்சியாக "வாட்ஸ் அப்'(WhatsApp) என்ற உபகரணம் இன்றைய இளைஞர்களுக்கு வாய்த்த வரப்பிரசாதமாக கருதப்படுகிறது.

இதன் மூலம் புகைப்படங்கள், வீடியோக்கள் போன்றவற்றை எவ்வித செலவுமின்றி, உலகின் எந்த மூலையில் உள்ள நபருக்கும் அரை நொடிக்குள் அனுப்பி விடலாம் என்பதால், இன்றைய இளைய தலைமுறையினரில் பெரும்பாலானோர் தங்களது செல்போன்களில் "வாட்ஸ் அப்' உபகரணத்தை பதிவிறக்கம் (Download) செய்து வைத்துள்ளனர்.

இன்றைய நிலவரப்படி, உலகம் முழுவதும் சுமார் 40 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் இந்த உபகரணத்தை பயன்படுத்தி பலன் அடைந்து வருகின்றனர்.

நாளுக்கு நாள் "வாட்ஸ் ஆப்'க்கு கூடி வரும் மவுசை கண்டு பலரும் வியந்து வரும் நிலையில், நட்புகளை உருவாக்கிக் கொள்ளவும், புதுப்பித்துக் கொள்ளவும் வாய்த்த புதிய தூதுவனாக கருதப்படும் பேஸ்புக்' நிறுவனம் "வாட்ஸ் அப்' நிறுவனத்தை 19 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு(ஒரு பில்லியன் என்பது 100 கோடி) வாங்க முன்வந்துள்ளது. இந்த தொகையில் 4 பில்லியன் டொலர்களை ரொக்கமாகவும், 12 பில்லியன் டொலர்களை பங்குகளாகவும் வழங்க பேஸ்புக்' நிறுவனம் ஒப்புக் கொண்டுள்ளது. இதற்கான ஒப்பந்தம் நேற்று கையொப்பமாகியுள்ளதாக தெரிகிறது.

# FITBIT கைப்பட்டி விற்பனை பாதிப்பு




உடலின் ஆரோக்கியத்தை கண்காணித்து அதனை மேம்படுத்த உதவும் நவீன இலத்திரனியல் சாதனங்களுள் ஒன்றான Fitbit விற்பனையானது அதிரடியாக நிறுத்தப்பட்டுள்ளது.

அது மட்டுமல்லாமல் அனைத்து Fitbit கைப்பட்டிகளையும் அதனை தயாரித்த நிறுவனம் மீளப்பெற்றுக்கொள்கின்றது. இதனை கையில் அணியும்போது உண்டாகும் தோல் பிரச்சினையே இதற்கு காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பிரச்சினைக்கு சரியான தீர்வு கண்டபின்னர் மீண்டும் Fitbit கைப்பட்டி விற்பனைக்கு வரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# பயர்பொக்ஸ் உலவியுடன் கைபேசி வெளியீடு




ஸ்மார்ட் கைபேசி உற்பத்தியில் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்துள்ள ZTE நிறுவனம் Firefox இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்ட தனது இரு புதிய கைபேசிகள் தொடர்பான அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

நேற்றைய தினம் பார்சிலோனாவில் ஆரம்பமான வேர்ள்ட் மொபைல் காங்கிரஸ் நிகழ்வில் இந்த அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

இதன் அடிப்படையில் ZTE Open C மற்றும் ZTE Open II ஆகிய கைபேசிகளை அறிமுகம் செய்யவுள்ளது.

தகவல் தொழில்நுட்பம்

# 4G தொழில்நுட்பத்துடன் டேப்லட் அறிமுகம்




Archos நிறுவனம்4G தொழில நுட்பத்துடன் கூடிய Archos 80 Helium எனும் டேப்லட்டினை அறிமுகம் செய்கின்றது.

8 அங்குல அளவு, 1,024 x 768 Pixel Resolution உடையதும், IPS தொழில்நுட்பத்தினைக் கொண்டதுமான தொடுதிரையினை உள்ளடக்கியுள்ள இந்த டேப்லட் 1.2 Ghz Qualcomm MSM8926 SoC Quad-Core Processor, பிரதான நினைவகமாக 1GB RAM, சேமிப்பு நினைவகமாக 8GB கொள்ளளவு ஆகியவற்றினைக் கொண்டுள்ளது.

இவற்றுடன் வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கென 2 மெகாபிக்சல்களைக் கொண்ட கமெரா, 5 மெகாபிக்சல்களைக் கொண்ட பிரதான கமெரா ஆகியனவும் தரப்பட்டுள்ளது. இதன் விலையானது 249 டொலர்கள் ஆகும்.

# புத்தக வடிவில் விக்கிபீடியா



கட்டற்ற களஞ்சியமாக திகழும் Wikipedia இணையத்தளமானது இலட்சக்கணக்கான கட்டுரைகளை தன்னகத்தே கொண்டுள்ளது.

இணையத்தளத்தில் காணப்படும் இக்கட்டுரைகளை புத்தக வடிவில் அச்சிட்டு வெளியிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் ஆயிரம் பதிப்புக்களாக வெளியிடவுள்ளது Pedia Press ஆனது இதற்கு 50 ஆயிரம் டொலர்கள் தேவைப்படும் என எதிர்பார்க்கின்றது.

இதற்கு தேவையான நிதியினை சேர்க்கும் பொருட்டு Indiegogo எனும் இணையத்தளத்தினூடாக பிரசாரத்தினை ஆரம்பித்துள்ளது.

# நவீன தொழில்நுட்ப கமெரா அறிமுகம்




சம்சுங் நிறுவனம் 16.3 மெகாபிக்சல்களைக் கொண்ட கமெராவினை அறிமுகம் செய்துள்ளது.

2014ஆம் ஆண்டிற்கான இலத்திரனியல் கண்காட்சியில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ள Galaxy Camera 2 எனும் கமெரா கூகுளின் அன்ரோயிட் 4.3 ஜெல்லிபீன் இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்டதாக காணப்படுகின்றது.

மேலும் 23mm விரிந்த கோணம் உடைய வில்லை, 21x ஒப்டிக்கல் ஸூம், என்பனவற்றுடன் 4.8 அங்குல அளவுடைய திரை, 8 GB சேமிப்பு நினவகமும் தரப்பட்டு ள்ளது.

அத்துடன் microSD கார்ட்டின் உதவியுடன் சேமிப்பு நினைவகத்தினை 64GB வரை அதிகரிக்கும் வசதியும் தரப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “நாங்கள் எல்லாம் தமிழர்கள் இல்லையா?”

## பிரதமர் ராஜீவ் காந்தி குண்டு வெடிப்பில் இறந்தவர் குடும்பங்களின் கண்ணீர்க் கதை

**“ராஜீவ் காந்தி கொலையில் பலி யான இந்தக் குடும்பங்களை ஒன்று திரட்டியவர் ஜோதி ராமலிங்கம. அவர், “ராஜீவ்காந்திநம்தமிழ் மக்களை மிகவும் நேசித்தார். 09.09.2011 அன்று மூவருக்கும் தூக்குத் தண்ட னையைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தார்கள். அதை எனனால்தாங்கிக்கொள்ளவே முடியவல்லை. அதே நாள் ராஜீவ்காந்தி படுகொலையில் பாதிக்கப்பட்ட குடும்பங்களைக் கண்டு பிடித்து ஒன்று சேர்த்து பெரிய அளவில் உணணாவிரதம் இருந்தோம். இந்தக் குடும்பங்களுக்கு நீதி வேண்டும். தமிழகத் தலை வர்கள் இதுவரை ராஜீவுடன் இறந்த தமிழ்க் குடும்ப ங்களைச் சந்தித்து ஆறுதல் சொன் னாரகளா?”**

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட அந்த நாளில் அவருடன் 15 அப்பாவி உயிர்களும் பலியாகின. “தூக்குமேடைக்குப் போனவர்களைக்காப்பாற்றத்துடிக்கும் தலைவர்கள், அந்த சமபவத்தில் இறந்துபோன தமிழர்களின் குடும பங்களுக்காகக் குரல் கொடுத்தார் களா?”எனக் கொந்தளிக்கிறார்கள் பலியானவர்களின் குடு ம்பத்தினர்.

ஸ்ரீபெரும்புதூர் பிரசாரத்தின் போது ராஜீவ் அருகில் இருந்த காங்கிரஸ் பிரமுகர் லீக் முனுசாமி, எஸ்.பி-யான முகமது இக்பால், டில்லியில் இருந்து பாதுகாப்புக் காக வந்த குப்தா, இன்ஸ்பெக்டர் ராஜகுரு, இன்ஸ்பெக்டர் எட்வர்டு ஜோசப், சப் இன்ஸ்பெக்டர் எத்திராஜு, கான்ஸ் டபிள் முருகன், கான்ஸ்டபிள் தர்மன, பெண் கான்ஸ்டபிள் சந்திரா, கமாண்டோ வீரர் ரவிச்சந்திரன், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களான லதா கண் ணன், (அவருடைய மகள்) கோகில வாணி, சந்தானி பேகம், சரோஜா தேவி, டேனியல் பீட்டர் ஆகியோர் அந்தச் சம்பவத்தில் இறந்தனர்.


ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட இடம்

உச்ச நீதிமன்றத் தீர்ப்பு, ஜெயலலிதா அறிவித்த விடுதலை போன்ற பரபரப்பான சூழலில் அவர்கள் குடும்பத்தினரைச் சந்தித்தபோது,

**காங்கிரஸைச் சேர்ந்த சந்தானி பேகத்தின் மகன் அப்பாஸ்,**

“எங்கள் அம்மா அந்த சமயத்தில காங்கி ரஸ் தென் செங்கை மாவட்ட தலைவியாக இருந்தார். காங்கிரஸ் மீதும் ராஜீவ் காந்தி மீதும் அதிகப் பற்று வைத்திருந்தார். நான்கு பையன, மூன்று பெண்கள், எங்கம்மாவுககு. நான் கடைசி பையன். எங்களுடைய அப்பா எனக்கு எட்டு வயதா



இருக்கும் போதே இறந்துவிட்டார். என க்கு 10 வயதாகஇருக்கும்போது அம்மா வும் அந்தக் குண்டு வெடிப்பில உடல் சிதறி இறநதுவிட்டார்.. அதன் பிறகு எங்கள் வாழ்க்கையே திசை மாறி போய்விட்டது. நாங்கள் பட்ட கஷ்டங்களை வார்த்தைகளால் சொல்ல முடியாது. அப்பா, அம்மா இல்லாமல் அநாதைகள் போல வளர்ந்தோம். மூன்று பேரும் இத் தனை ஆண்டுகளாக ஜெயிலில் தணடனை அனுபவித்தார்கள் என்று சொல்கிறார்கள். இத்தனை வருடங்களாக தாய், தந்தை இல்லா மல் எவ்வளவு துடித்திருப்போம். கொலைகாரர்களுக்குக் காட்டும் கருணையை எங்களுக்கு யாருமே காடடவில்லையே... எங்கள் அம்மா திரும்பவும் வரமாட்டார்கள் என்று தெரியும். ஆனால், அவர்களைக் கொன்ற படுபாவிகளுக்குக் குறைந்தபட்ச தண்டனையாவது தர வேண்டாமா? இவர்களைத் தூக்கிலே போடுங்கள் என்று சொல்லவில்லை. இவர்களை விடுதலை செய்யக் கூடாது. ராகுலுக்கும் பிரியங்காவுக்கும தான் ஏங்களது வேதனை புரியும். நாங்கள் அவர்களைச். சந்திக்கத் திட்டமிட்டு இருக்கிறோம்“ என்றார் கோபமாக.

**சரோஜா தேவியின் அக்கா சாந்தா குமாரி,**

“சரோஜா தேவி, அந்த சமயத்தில் தனியார் பாடசாலையில் ஆசிரியராக வேலை செய்து கொண்டிருந்தார். அவளு க்கு அப்பொழுது 20 வயது. நல்ல அழகு. துறுதுறு என்று இருப்பாள். நான் தமிழ் நாட்டின் மகிளா காங்கிரசில் இணை செயலாளராக இருந்தேன். காங்கிரஸ் பஞ்சாயத்து போர்ட்டிலும் உறுப்பினராக இருந்தேன். தேர்தல் பிரசாரத்துக்காக ஸ்ரீபெரும் புதூருக்கு ராஜீவ் வந்தபோது என் தங்கை சரோஜா தேவி, “நானும் உன்னுடன் வருகிறேன். ராஜீவ் காந்தியைப் பார்க்கவேண்டும் என்று ஆசையாக சொன்னார். நானும் அவளும் கூட்டம் நடக்கும் இடத்துக்குப் போனோம். என் தங்கை அவரைப் அருகில் பார்க்கவேண்டும் என்று போனார்.. திடீரென்று ஒரு பெரிய சத்தம் கேட்டது. என்ன வென்று புரியவே சிறிது நேரம் ஆகிவிட்டது. நானும் அந்த மைதானத்தில் இருந்து தூக்கி வீசப்பட்டேன். என் தங்கை இறந்துவிட்டார் என்று பின்னர்தான் தெரிந்தது. அதற்குப் பின்பு என் வாழ்க் கையே திசை மாறிவிட்டது. அந்த விபத்தால் எனக்கு திருமணமே நடக்க வில்லை. இன்னமும் அதில் இருந்து மீள முடியாத துயரத்தில்தான் நான் இருக்கிறேன். ராஜீவ் கொலையில் குற்றமசாட்டப்பட் டவர்களின் தீர்ப்பை நான் மனிதாபிமான அடிப்படையில் பார்க்கிறேன். ஆனால', அந்தக் கோர விபத்தல் என் தங்கை உட்பட 15 பேர் குடும்பத்தினரை யார் மனிதாபிமான அடிப்படையில் பார்க்கிறார்கள்?“

**முகமது இக்பாலின் மகன் ஜாவித் இக்பால்,**

“அப்பா காஞ்சிபுரம் எஸ்.பி-யாக இருந்தார். நான் பிறக்கும் போதே எங்கள் அப்பா டி.எஸ்.பி. அதற்கு முன்னாள் இராணுவத்தில் இருந்தார். அவர் இறக்கும்போது எனக்கு 17 வயது. எனக்கு ஒரு அக்காவும் இருக்கிறார்.. அப்பா இறந்ததற்குப் பின்பு சொல்ல முடியாத கஷ்டங்களை அனுபவித்தோம். அதன் பின்பு மூப்பனார் எங்களைப் பார்த்து சோனியா மேடத்திடம் சொல்லி காஸ் ஏஜென்சி வைத்துக்கொடுத்தார். அதை வைத்துத்தான் நாங்கள் வாழ்க்கை நடத்தி வருகின்றோம்.

**தியாகி லீக் முனுசாமி மகன் லீக் மோகன்,**

“தமிழ்நாடு தாழ்த்தப்பட்டோர் லீக் என்று ஒரு அமைப்பு அப் போது இருந்தது. அதில் அப்பா ஜெனரல் செகரட்டரியாக இருந்தார். அதில் இருந்து அப்பாவை “லீக்' என்று அழைக்க ஆரம்பித்தார்கள். அந்த சமயத்தில் மரகதம் சந்திரசேகர் எம்.பியாகத் தேர்தலில் நிற்க இருந்ததால், அப்பா அவருடன்தான் இருந்தார். அப்போதுதான் அந்த விபத்து நடந்து இருக்கிறது. அப்பா வும் அதில இருந்து தூக்கி வீசப்பட்டார். கை பிய்ந்து தொங்கிக்கொ ண்டிருந்தது. அப்போது கூட அப்பா “படுபாவிங்க தலைவர் ராஜீவை இப்படி பண்ணிட்டாங்களே' என்று வேதனையில் அழுதார். ஒரு கதிரையில் வந்து உட்கார்ந்தார். அங்கு அப்படியே இறந்துவிட்டார். இப்படி ஒரு தீர்ப்பு வந்தது எங்களால் ஜீரணித்துக் கொள்ளவே முடியாதது. ஒரு தவறான முன் உதாரணத்தை உச்ச நீதிமன்றம் வழுங்கி இருக்கிறது. ‘எதிர்காலத்தில் நம் நாட்டில் பிரதமரையும் கொலை செய்யலாம், முதல் வரையும் கொலை செய்யலாம். 20 ஆண்டுகள் தண்டனை வழங்கி விட்டு விட்டுவிடுவார்கள்' என்ற எண்ணம் தீவிரவாதிகளு க்கு ஏற்பட்டுவிடும்.

**பொலிஸ் எஸ்.ஐ யான எட்வார்ட் ஜோசப்பின் தம்பி ஜோன் ஜோசப,**

“எங்கள் அண்ணன் புத்திசாலித் தன்மானவர். எம்.ஜி.ஆரின் லைப் டில் பாதுகாப்பு அதிகாரியாக நீண்ட நாள் இருந்தார். தமிழகத்தில் வரும் வி.ஐ.பிக்கு எல்லாம் பாதுகாப்பு அதிகாரியாக இருந்தவர். அந்தச் சம்பவத்தன்று வேலைக்கு போய் விட்டு அப்பொழுதுதான் வீட்டுக்கு வந்தார். உடனே அண்ணனைக் கூப்பிட்டார்கள். “ராஜீவ் காந்தி விமான நிலையம் வருகிறார். உடனே அங்கு செல்ல வேண்டும் என்று உத்தரவு. உடனே புல்லட்டை எடுத்துக்கொண்டு போனார். அப்பொழுதான் நாங்கள் அவரைக் கடைசியாக பார்த்தோம். அன்று இரவு 12.30 மணிக்கு சிலபேர்வீட்டுக்கு வந்து, “சின்ன விபத்து வாருங்கள் என்று சொன்னார்கள். அப்பகூட ராஜீவ் காந்தி இறந்தது தெரியாது. அண்ணன் உடல் சிதறிக் கிடந்தார். அப்பொழுது நான் கதறியது இன்னும் நினைவில அப்படியே இருககிறது.

எங்கள் குடும்பமே ஆடிபோய் விட்டது அவருக்கு இரண்டு பெண்கள். அப்பொழுது ஒரு பெண்ணுக்கு ஒன்பது வயது. இன்னொரு பெணணுக்கு ஆறு வயது. பாடசாலை வரைக்கும் அவர்களுக்குப் பணம் கட்டினார்கள்.

அதன் பின்னர் நாங் கள தான் பணம் கட்டிப் படிக்க வைத் தோம. உச்ச நீதிமன்றத் தீர்பபை யாரும்விமர் சிக்கக் கூடாது. ஆனால், அவர்கள் திட்டமிட்டுப் படுகொலை நடத்தி இருக்கிறார்கள்.

இவாகள் இங்கு தப்பிடலாம். ஆனால், அனைத்தை யும் கடவுள் பார்த்து கொண்டுதான் இருக்கிறார். அவரது நீதிமனறில் கண்டிப்பாக இவரகளுக்குத் தண் டனை உண்டு“

**வலியில் அனுசுயா**

ராஜீவ் காந்தி ஸ்ரீபெரும்புதூர் வந்தபோது பாதுகாப்புப் பணியில் இருந்தவர் எஸ்.ஐ யான அனுசுயா. “ஸ்ரீபெரும்புதூர் கூட்டம் நடக்கும். இடத்தின் பெண்கள் பகுதியில் பாதுகாப்பு பணியில் இருந்தார் அனுசுயா. ராஜீவுக்கு அருகில் பெண்களை வரவிடாமல் தடுக்க வேண்டும் என்ற பணி கொடுக்கப்பட்டு இருந்தது. ராஜீவ் காரில் இருந்து இறங்கி மேடையை நோககி வரும்போது மாலை போடுபவர்கள் வரிசையில் இருந்த பெண்கள் முண்டியடித்துக்கொண்டு அவரை சூழ்ந்தபோது, அனுசுயா முழு பலம்கொண்டு ராஜீவின் பக்கத்தில் யாரையும் நெருங்கவிடாமல் பின்னுக்குத் தள்ளினார்.

அப்போது ராஜீவ், அனுசுயாவின் இடது தோளில் விரல்களால் தட்டி, புன்சிரிப்புடன் “பி ரிலாக்ஸ்ட்' என்று சொன்னார். அப்போது, பெணகள் ராஜீவைச் சூழ்ந்து கொண்டு மாலை அணிவிக்க முயற்சித்தார்கள். அந்த சமயத்தில் தான் பயங்கரமான வெடி சத்தம் கேட்டது.

ஒரு பெரிய தீப்பிழம்பு அந்த இடத்தில் சூழ்ந்தது. அங்கு ஒருவரும் உயிருடன் இருப்பதற்கான அறிகுறியே இல்லை. பல சிதைநத உடல்கள் குற்றுயிரும் குலை உயிருமாக உயிருக்குப் போராடிக் கொண்டு இருந்தன. அப்போது அனுசுயாவும் தாக்கப்பட்டார்.

உடல் முழுவதும் தீக்காயமும் சிறு இரும்பு குண்டுகளால் துளைக்கப்பட்ட இரத்த காயமும் அவரது உடலில் இருந்தது. சிதைந்தகைகள் தொங்கிக் கொண்டிருந்தன.

இன்னும் அவரது உடம்பில் அந்தக் குண்டுகளின் துகள்கள் வெளியில் எடுக்கமுடியாமல் அப்படி யேதான் இருக்கிறது. அவருக்கு இபபோது மூன்று விரல்கள் இல்லை. வலது தோள் முழுவதிலும் இன் றும் தாங்கமுடியாத வ்லி தொடர்கி றது“ என்று சொல்கிறார்கள்.

ஜூனியர் விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவிப்பிள்ளையின் குற்றச்சாட்டுக்களுக்கான பின்புலத்தை மனோ ஏற்படுத்துகிறார்

### அரசாங்கம் குற்றச்சாட்டு

ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசனினால் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என அரசாங்கம் அறிவித்துள்ளது.

வெலிக்கடைச் சிறைச்சாலை யில் அண்மையில் கொல்லப்பட்ட விஸ்வலிங்கம் கோபிநாத் மரணம், ஓர் அரசியல் படுகொலை என மனோ கணேசன் குறிப்பிட்டிருந்தார்.

எனினும் இந்தக் குற்றச்சாட்டை நிராகரிப்பதாக அரசாங்கம் அறி வித்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு தொலைதொடர்பு சாதனங்களை வழங்கியதாக கோபிநாத் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையினால், சுமத்தப்பட்டு வரும் குற்றச்சாட்டுகளுக்கு தேவையான பின் புலத்தை மனோ கணேசன் ஏற்படுத்திக் கொடுப்பதாக அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. (அ-2)

## புலிகள் மீதான தடையை நீக்குக ஐரோப்பிய மன்றில் மனுத்தாக்கல்

கடந்த 2011ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் மீதான தடை நீக்கப்பட வேண்டும் என நெதர்லாந்து சட்டத்தரணி விக்டர் கோப் ஐரோப்பிய நீதி மன்றில் மனு வொன்றை தாக்கல் செய்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவில் உள்ளவர்கள், கேட்டுக் கொண்டதற்கு அமைவாகவே தாம் புலிகளின் சார்பில் வாதாட வந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

ஆனால் பல காரணங்களை காட்டி, அந்த வழக்கை நடத்த, அப்போது நீதி மன்றம் அதை ஏற்கவில்லை. நாட்களை இழுத் தடித்த வண்ணம் இருந்தது. (அ-2)


## பிரிவுத்துயர் பகிர்வு



### பிலிப்ஸ் கிறிஸ்டோபர்

புலோலியைச் சேர்ந்த பிலிப்ஸ் கிறிஸ்டோபர் கடந்த 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கனத்தை பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.



### அருளானந்தம் சற்குணசபேசன்

வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருளானந்தம் சற்குணசபேசன் கடந்த 26 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்றுமுன் தினம் புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றது.



### திருமதி கருணரட்னம் மகேஸ்வரி அம்மா

ஆனைக்கோட்டையை பிறப்பிட மாகவும் டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட கருணரட்னம் மகேஸ்வரிஅம்மா கடந்த25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு Vestre Kirkegard ,Nord ,Kapel Store Sal, Vestre Kirkegards Alle 15 , 2450 Kobenhavn Sv, Denmark என்னும் முகவரியில் நடைபெறும்.

# வடகடலில் சீன தேசத்து மீனவர்கள் அத்துமீறல்

## வட பகுதி மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்பு

இலங்கையின் வடகடலில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய தொழில் முறையினால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளில் இருந்து மீள்வதற்கு முடியாதுள்ள நிலையில், சீன தேசத்து மீனவர்களும் தமது கடற்பரப்பில் வந்து தொழில் செய்வதாக வடபகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதாரம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

இது குறித்து உரிய அதிகாரிகளடம் முறையிட்டிருக்கின்ற போதிலும் நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் அந்த மீனவர்கள் கூறுகின்றனர்.

இந்தப் புதிய தொல்லை யாழ். குடாநாட்டின் வடமராட்சி கடற்பகுதியிலேயே ஏற்பட்டிருப்பதாக யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அந்தோனிப்பிள்ளை எமிலியான்பிள்ளை கூறுகின்றார்.

முப்பது வருடகால யுத்தத்தின் முடிவில் கடற்பரப்பில் தொழில் செய்ய செல்லும் எமது மீனவர்கள் இந்திய மீனவர்கள் மற்றும் சீன மீனவர்களின் அத்துமீறல் காரணமாகப் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

வடமராட்சி கடற்பரப்பின் ஆழ்கடற் பிரதேசத்திலேயே சீன மீனவர்களின் பெரிய கப்பல் மீன்பிடி தொழிலில் ஈடுபடுகின்றது.

இதனால் கடற்கரையை அண்டிய பகுதிக்குள் மீன்கள் வருவதில்லை. எமது மீனவர்களுக்குத் தொழில் பாதிப்பு ஏற்படுகின்றது.

சீனதேசத்து மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி பிரவேசித்து தொழில் செய்வது குறித்து நீர்கொழும்பில் இருந்து செயற்படுகின்ற தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கமும் கூட முறையிட்டிருக்கின்றது.

சீன தேசத்து மீனவர்களை இலங்கைக் கடற்பரப்பினுள் அனுமதிக்கக் கூடாது என்று தாங்கள் அரசாங்கத்திடம் கோரியிருப்பதாக அந்த அமைப்பின் தேசிய இணைப்பாளர் அன்ரனி ஜேசுதாசன் கூறுகிறார்.

இது குறித்து, கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நிமால் ஹெட்டியாராச்சியுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, அவ்வாறு சீன தேசத்து மீனவர்கள் இங்கு வந்து தொழில் புரியவில்லை என்று மறுத்துரைத்தார்.

இலங்கையின் கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்கென, எமது கடற்றொழில் திணைக்களத்தில் எந்தவொரு சீன கம்பனியும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு எவருக்கும் அனுமதி வழங்கப்படவுமில்லை.

ஆனால், கடலுணவு பதனிடுகின்ற சீன கம்பனி ஒன்று சர்வதேச கடற்பரப்பில் தொழில் செய்வதற்காக அனுமதிக்கப்பட்டிருக்கின்றது.

எமது தேசிய கடற்பரப்பில் இந்தக் கம்பனிக்கு எந்தவிதமான அனுமதியும் வழங்கப்படவில்லை. சர்வதேச கடற்பரப்பிலேயே தொழில் செய்ய வேண்டும் என்று அவர்களுக்குத் தெளிவாக அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது என்றார். (அ-2)

## விண்ணப்பங்கள் கோரல்

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தினால் ஒப்பந்த அடிப்படையிலான பாடவிதான இணைப்பாளர்/செயற்றிட்ட உதவியாளருக்கான பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என யாழ். பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

விண்ணப்பதாரிகள் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் முகாமைத்துவ பட்டதாரியாக இருப்பதுடன், முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு மேல்தர சித்தியையும் பெற்றிருத்தல் அவசியம்.

விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் சுயமாக தயாரிக்கப்பட்ட சுயவிபரக் கோவையினை எதிர்வரும் மார்ச் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் உதவிப்பணிப்பாளர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம், பிறவுண் வீதி, கொக்குவில் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ அனுப்பி வைக்கும் படி அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (அ-2)

## தங்கம் கடத்த முயன்றவர்கள் கைது

ஆணுறைகளினுள் தங்கத்தை இட்டு அதனை விழுங்கி வயிற்றி னுள் வைத்து கொண்டு செல்ல முயன்ற இருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவுக்கு செல்ல முயற்சித்த கொழும்பைச் சேர்ந்த 36 வயதுடைய நபர் ஒருவரும், மீகொட பகுதியை சேர்ந்த 44 வயதுடைய நபர் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட நபர்களிடமிருந்து தங்க உருண்டைகள் இடப்பட்ட 12 ஆணுறைகள் மீட்கப்பட்டுள்ளதோடு கைப்பற்றப்பட்ட தங்கத்தின் பெறுமதி 37 இலட்சத்து 60 ஆயிரம்ரூபா என சுங்கத்திணைக் கள அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (அ-2)

## அமெரிக்க பிரேரணையால் இலங்கை உறவில் விரிசல்

ஜெனீவாவில் சமர்ப்பிக்கப்படவுள்ள பிரேரணை தொடர்பில் இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் பதற்றம் அதிகரித்து வருகிறது என சர்வதேச செய்தித்தாள் ஒன்று இதனைக் குறிப்பிட்டுள்ளது

இலங்கையில் இறுதிப்போரின் போது இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் அமெரிக்கா மூன்றாவது முறையாக இலங்கைக்கு எதிராக ஜெனீவாவில் யோசனை ஒன்றை நிறைவேற்றத் தயாராகி வருகிறது.

எனினும் போர்க்குற்றம் இடம் பெறவில்லை என்று இலங்கை அரசாங்கம் தமது நிராகரிப்பை தொடர்ந்தும் வெளியிட்டு வருகிறது.

அமெரிக்காவை பொறுத்தவரை இலங்கை மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உரிய விசாரணைகள் சர்வதேச தரத்தில் நடைபெற வேண்டும் என்று எதிர்பார்க்கிறது.

இந்தநிலையில் அமெரிக்காவின் யோசனைக்கு கனடா, பிரித்தானியா மற்றும் இந்தியா போன்ற நாடுகள் ஆதரவை வெளியிட்டுள்ளன.

எனினும் சீனா, ரஷ்யா மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக செயற்பட தயாராகியுள்ளன.

இதற்கிடையில் அமெரிக்க காங்கிரசும் இலங்கைக்கு எதிரான யோசனை தொடர்பில் தற்போது விவாதங்களை நடத்தி வருகிறது.

இது இவ்வாறிருக்க சீனா இலங்கையில் செலுத்தி வரும் ஆதிக்கமும் அமெரிக்காவின் இந்த முனைப்புக்களுக்கான கா[illegible] என்று செய்தித்தாள்கள் [illegible] வெளியிட்டுள்ளன. (அ-2)

## பா.ஜ.கட்சி ஆட்சிக்கு வந்தால் அராஜகத்துக்கு முடிபு கட்டும்

பா.ஜ.க. மத்தியில் ஆட்சிக்கு வந்தால், இலங்கையின் ராஜபக்ஷ அராஜகத்துக்கு முடிவு கட்டுவோம் என்று தமிழக பா.ஜ.க. தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன் கூறினார்.

திருச்செந்தூருக்கு சுவாமி தரிசனத்துக்கு வந்திருந்த அவர் செய்தியாளர்களிடம் பேசியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி, காங்கிரஸ் கட்சித் தலைவர்களின் வாரிசுகளுக்கு வரும் தேர்தலில் ஆசனம் தருவதை தாம் ஆதரிக்கவில்லை என்று கூறுவது வேடிக்கையாக உள்ளது. அவர், தன்னு டைய பின்புலம் தெரியாமல் பேசு வது கேலியாக உள்ளது என்றார்.

பா.ஜ.க., மதவாதக் கட்சி என்பதால் கூட்டணி இல்லை என்று அ.தி.மு.கவும், தி.மு.கவும் கூறுகின்றனவே என்று [illegible] கேட்டபோது, தி.மு.க[illegible] ஏற்கனவே பா.ஜ.கவுடன் கூட் டணி வைத்தவை தான் பதவி சுகம் அனுபவித்தவை தான் என்றார்.

ஈழத்தமிழர் இனப் படுகொலைக்கு காரணமான காங்கிரஸ் அரசை வேரறுக்க வேண்டும். பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால், ராஜபக்ஷ அராஜகத்துக்கு முடிவு கட்டுவோம் என்று கூறினார். (அ-2)

## சிவசேனை என்னும் திரைப்படம் லண்டனில் திரையிடப்படுகிறது



புலம்பெயர்ந்து வாழ்ந்து வரும் ஈழத்தமிழ் இளைஞர்களின் படைப்புக்கள் அதிகளவில் ஐரோப்பிய நாடுகளில் வெளிவரத் தொடங்கியுள்ளன.

அந்தவகையில் ஈழத்தமிழர்களின் அடுத்த முயற்சியில் வெளிவந்த சிவசேனை என்ற திரைப்படம் லண்டனில் உள்ள திரையரங்குகளில் இன்று வெள்ளிக்கிழமை திரையிடப்படவுள்ளது.


லண்டனில் படமாக்கப்பட்ட இத்திரைப்படத்தில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் சந்திக்கும் பிரச்சினையினை வெளிக்காட்டியிருக்கின்றனர் ஈழத்தமிழ் இளைஞர்கள்.

அண்மைக் காலங்களாக மேற்கத்தைய நாடுகளின் கவனத்தை புலம் பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களின் படைப்புக்கள் திரும்பிப் பார்க்க வைத்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவநகர் அரசின் தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் அண்மையில் நடைபெற்றது. இதில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் பாடசாலை அதிபர் பாடசாலைக் கொடியை ஏற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள் :- சிவநகர் செய்தியாளர்)



கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தின் (தேசிய பாடசாலை) வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும வெற்றியீட்டிய மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படுவதையும் விநோத உடை நிகழ்வில் பங்கு கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள் :- சிவநகர் செய்தியாளர்)

# உக்ரைன் மீது போர் தொடுக்க புதிய திட்டம் வகுக்கும் ரஷ்யா

(மொஸ்கோ)

**உக்ரைனில் ஏற்பட்டுள்ள உச்ச கட்ட பதற்றத்திற்கு மததியில், ரஷ்ய இராணுவத்தை தயார் நிலையில் இருக்கும்படி ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் உத்தர விட்டுள்ளார்.**

இதுதொடர்பாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் செர்கெய் சொய்கு வெளியிட்டுள்ள தொலைக்காட்சி செய்தியில்,

நாட்டின் இராணுவ பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருப்பதால், மிகப்பெரிய அளவில் பயிற்சியில் ஈடுபட புடின் உத்தர விட்டுள்ளார். இதுதொடர்பாக உயர் இராணுவ அதிகாரிகளுடன்ஆலோசனை நடத்தப்பட்டது.

முதல் இரண்டு நாட்கள் இராணுவம் உஷார்படுத்தப்படுவதுடன், துப்பாக்கி சூடு பயிற்சியும் நடைபெறும். இன்று வெள்ளிக்கிழமை முதல் முழுமையான போர் ஒத்திகை நடைபெறும். பால்டிக் கடலில் கப்பற் படை ஒத்திகையும், விமானப் படை ஒத்திகையும் நடைபெறும் என்று தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கையில் உக்ரைன் விவகாரம் தொடர்பாக எந்த தகவலும் இல்லை.



இருப்பினும், உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுக்க திட்டமிட்டிருப்பதாக பரபரப்பாக பேசப்படுகிறது.

உக்ரைன் நாட்டின் ஜனாதிபதி பதவி வகித்த விக்டர் யானுகோவிச்சுக்கு எதிராக புரட்சியில் ஈடுபட்டவர்கள் திடீரென பாராளுமன்றத்தை கைப்பற்றினர். ஜனாதிபதியை பதவி நீக்கம் செய்ததுடன் மே மாதம் 25 ஆம் திகதி தேர்தல் நடத்தவும் இடைக்கால அரசு முடிவு செய்துள்ளது.

பதவி இறக்கப்பட்ட விக்டர யானுகோவிச் ரஷ்யாவின் ஆதரவாளர். ஆகவே, அவரை காப்பாற்ற ரஷ்யா இராணுவத்தை அனுப்பலாம் என்று ஒரு யூகம் பரவுகிறது.

ஆனால், இராணுவத்தை அனுப்பி உக்ரைன் விவகாரத்தில் தலையிடக் கூடாது என அமெரிக்கா, பிரித்தானியா ஆகிய நாடுகள் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளன. (2)


# கட்டடம் இடிந்து விழுந்து 11 பேர் பரிதாபமாக உயிரிழப்பு!

(பாங்கொக்)

வைத்தியசாலை கட்டடம் இடிந்து விழுந்து 11 பேர் பரிதாபமாக பலியாகினர், 16 பேர் படுகாயமடைந்தனர்.

இச் சம்பவம் நேற்று முன தினம் நடைபெற்றது.

இது தொடர்பாக தெரிய வருவதாவது,



தாய்லாந்தில் உள்ள பாங்கொக் நகரில் சுவர்ணபூமி வமான நிலையத்தில் இருந்து சுமார் 20 கி.மீ. தொலைவில் வைத்தியசாலை ஒன்று கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

வழக்கம்போல் ஏராளமான தொழிலாளர்கள் இதில பணி புரிந்து கொண்டிருந்தனர். இந்த வைத்தியசாலை சுமார் 5 மாடி அடுக்குகளை கொண்டு கட்டப்பட்டு வருகிறது. இந்நிலையில் பணியின் போது எதிர்பாராத விதமாக கட்டடம் சரிந்து விழுந்தது. உடனடியாக தகவல் அறிந்த பொலிசாரும், மீட்பு படையினரும் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர்.

அங்கு இடிபாடுகளில் சிக்கி இருந்தவர்களை பல மணி நேரம் போராடி மீட்டனர்.

இவ் விபத்தில் இடிபாடுகளில் சிக்கி 11 கட்டுமான தொழிலாளர்கள் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழநதனர் என்று தெரிவித்தார். காயமடைந்த 16 பேரை மீட்டு அருகில் உள்ள வைத்தியசாலைகளில் அனுமதித்துள்ளனர்.

இதில் பலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை ஊழியர்கள் தெரிவித்துள்ளனர். (2)

# ஆலோசிக்காமல் செயற்பட்டதால் விடுதலையில் சிக்கல் ஏற்பட்டுள்ளது

## கருணாநிதி குற்றச்சாட்டு

(சென்னை)

அ.தி.மு.க. அரசு யாரையும் ஆலோசிக்காமல் அவசரமாகச் செயற்பட்டதால்தான், ராஜீவ்காந்தி கொலையில் தொடர்புடைய 7 பேரை விடுதலை செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக தி.மு.க. தலைவர் கருணாநிதி குற்றம்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

7 பேர் விடுதலை விவகாரததில், அ.தி.மு.க. அரசு கடந்த வாரம் வரை எதிர்ப்பாக இருந்தது.

மக்களவைத் தேர்தல் [illegible] 7 பேரின விடுதலையில் அக்கறை இருக்கிறது என்று காட்டிக் கொள்வதற்காக மூத்த வழக்குரைஞர்களிடம்கூட ஆலோசனை நடத்தாமல், அமைச்சரவையைக் கூட்டி, தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி பெருமை தேடிக் கொள்ள முயன்றது.

அத்தோடு, 3 நாட்களுக்குள் மத்திய உள்துறை தீர்மானிக்க வேண்டும் என மததிய அரசுக்கே ஜெயலலிதா காலக்கெடு விதித்திருந்தார்.

தமிழக அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்றி, ஆளுநரிடம் ஒப்புதல் பெற்று, தண்டனையைக் குறைக்கலாம் என்று நான் (கருணாநிதி) கருத்து தெரிவித்ததை, அரசு காதில் போட்டுக் கொள்ளவே இல்லை. எடுத்தேன், கவிழ்த்தேன் பாணியில் அரசு செயற்பட்டதால் திரிசங்கு நிலையில் இந்தப் பிரச்சினை நிற்கிறது.



உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் 7 பேரும இந்தக் காலத்துக்குள் விடுதலை ஆகியிருக்க வேண்டும்.

அரசியல் ஆதாயத்துக்காக அரசு அவசரமாகச் செயறபட்ட காரணத்தால் 7 பேரும்இன்னும் விடுதலை ஆக முடியாத நிலை இருக்கிறது என அதில் குறிப்பிட்டுள்ளார். (2)



சோனியாகாந்தியின் உருவப்படம் மற்றும் உருவ பொம்மைகளை நாம் தமிழர் கட்சியினர் தீயிட்டு கொளுத்திய போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்த வினையும் செய்கின்ற வினையும் அதன் பின்விளைவை திருப்பிக் காட்டாமல் விடா. ~ ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# இலங்கை அரசை இறுக்கும் மூன்று சுருக்குக் கயிறுகள்

**காலம் பிழைத்தால் கறுத்தார் என்ன செய்ய முடியும்** என்பது நம் ஊர்ப் பழமொழி. இதைத்தான் கவிஞர் கண்ணதாசன் ஆகும் காலத்தே அவை அவை ஆகும். போகும் காலத்தே பொன், பொருள், புகழ் எல்லாம் போகும் என மாறுபட்ட மொழி நடையில் கூறியிருந்தார்.

எல்லாக் காலமும் நமக்கு சாதகமாக அமையும் என்று எந்தக் கொம்பனும் நினைத்துவிடலாகாது என்பதற்கு பல உதாரணங்களைக் காட்டமுடியும்.

ஆணவம் கொண்டு அகந்தை புரிந்தோர் அழிந்ததே வரலாறு. எனவே, உலகியல் வரலாற்றை ஒரு கணம் திரும்பிப் பார்க்க வேண்டும். அப்போதுதான் அறிவு ஞானம் ஏற்படும்.

எங்களை எவரும் எதுவும் செய்யமுடியாது என்றிருந்த எத்தனையோ பேர் இருந்தஇடம் தெரியாமல் அழிந்தொழிந்து போயினர். இதுவே உலக நியதி.

எனினும் காலம் பிழைக்கின்றபோது அழிவின் ஆயத்தங்களை அவரவரே தேடிக் கொள்வது வழமை. அந்த வகையில், இலங்கைக்கும் காலப் பிழை ஏற்படப் போகின்றது என்று உணர முடிகின்றது.

இந்தக் காலப்பிழை மூன்று சுருக்குக் கயிறுகளாக இலங்கை அரசை நோக்கி வருகின்றது என்ற எதிர்வு கூறலை இங்கு முன்வைக்க முடியும்.

அதில் ஒன்று, இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் கொண்டுவரப்படும் தீர்மானம்.

இரண்டாவது, தனித் தமிழீழம் அமைப்பது தொடர்பில் பொது வாக்கெடுப்பு நடத்துதல் என்ற தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் அறிவிப்பு.

மூன்றாவது விடயம், இந்தியாவில் பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சியமைத்தால் மூன்று மாதங்களில் இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்ற பாரதீய ஜனதாக் கட்சியின் அறிவிப்பு.

இவ்வாறாக மேற்குறித்த மூன்று விடயங்களும் இலங்கை ஆட்சியாளர்களுக்கு கசாயமாகவே இருக்கும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

அதிலும் குறிப்பாக ஜெனிவாத் தீர்மானம் என்பது, இலங்கை அரசுக்கு பெரும் சவாலாக இருக்கும் என்பது மறுக்க முடியாத உண்மை.

நிலைமை இதுவாக இருக்கும் போது ஜெனிவாத் தீர்மானத்தில் இருந்து தன்னைப் பாதுகாப்பதற்கு கேரளாவில் இருந்து நம்பூதிரிகளை வரவழைத்து யாகம் செய்ய அரசு நினைப்பது காலம் பிழைத்தவர்கள் மத்தியில் ஏற்படும் சிந்தனையே.

ஜெனிவாத் தீர்மானத்தில் இருந்து இலங்கை அரசு தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கான ஒரே வழி, தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண்பதும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் அவலங்களை போக்குவதுமாகும். எனினும் இவற்றைச் செய்வதற்கு அரசு தயாரில்லை.

உலகில் எந்த நாட்டின் காலிலும் வீழ்ந்து வணங்கலாம். நம்பூதிரிகளை அழைத்து யாகம் செய்து ஜெனிவாத் தீர்மானத்தை தோற்கடிக்கலாம் என்ற மூடநம்பிக்கைகளில் மூழ்கிக்கிடக்கும் இலங்கை அரசுக்கு இந்திய தேசத்தில் நடக்கும் பொதுத்தேர்தலின் முடிவுகள் கூட பயம் தரக் கூடியவையே.

ஆம், பொதுத்தேர்தலில் பாரதீய ஜனதாக் கட்சி வெற்றி பெற்று, நரேந்திர மோடி பிரதமராக பதவி ஏற்றால் அவரின் முடிவுகள் இலங்கைக்கு அச்சம் தருவதாகவே இருக்கும்.

அதிலும் மோடி தன்னை ஒரு பலமான பிரதமர் என்பதை நிரூபிப்பதற்கு இலங்கை அரசு மீது தனது பலத்தை பிரயோகிக்க தயங்க மாட்டார்.

ஆக, ஒட்டுமொத்தத்தில் காலம் பிழைக்கும் போது, கூட இருந்தவரும் குழிபறிக்கத் தயங்க மாட்டார் என்பதை அனுபவத்தில் உணரும் வாய்ப்பு இலங்கை அரசுக்கு விரைவில் கிடைக்கும் என்று கூறலாம்.

# கோபிதாஸின் மரணத்திற்கான பொறுப்பை அரசே ஏற்க வேண்டும்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வலியுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த விஸ்வலிங்கம் கோபிதாஸ் மர்மமான முறையில் மரணமடைந்துள்ளார்.

இம் மரணத்திற்கான முழுப் பொறுப்பையும் இலங்கை அரசே ஏற்றுக் கொள்ள வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செ.கஜேந்திரன் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் கண்டன அறிக்கையொன்றை வெளியிட்டார்.

அக்கண்டன அறிக்கையில் கூறியிருப்பவை வருமாறு,

கோபிதாஸ் கடந்த 24ஆம் திகதி திங்கட்கிழமை கொழும்பு மகசின் சிறைச்சாலை மலசலகூடத்தில் மர்மமான முறையில் இறந்து கிடந்துள்ளார். இவர் கைது செய்யப்பட்டு பயங்கரவாத விசாரணை பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது கடுமையான சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாகவும், அதற்குப் பின்னர் வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட போது அங்குவைத்து சிறைக்காவலர்களால் கடுமையாக தாக்கப்பட்டதாகவும் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

சிறையில்இருந்த காலப்பகுதியில்சித்திரவதைகளால் ஏற்பட்ட உட்காயங்களால் கடுமையான உபாதைகளை அனுபவித்திருக்கின்றார். அவருக்கு சுகவீனம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் அவருக்கு உரிய சிகிச்சையளிக்கப்படவில்லை.

அவர் அனுபவித்த சித்திரவதைகள் மற்றும் தாக்குதல் சம்பவங்களால் ஏற்பட்ட உட்காயங்களும், அதற்கு உரிய சிகிச்சையளிக்கப்படாமையும், இவருக்கு மரணத்தை ஏற்படுத்தியிருக்கலாம்.

அத்துடன் மரணமடைவதற்கு முதல் நாள் தமிழ் சிறைக்கைதிகள் மீது சிறைக்காவலர்களும், சிங்களக் கைதிகளும் கூட்டாக மேற்கொண்ட தாக்குதலில் ஒரு தமிழ் அரசியல்கைதி படுகாயமடைந்து மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதனாலும் இம் மரணம் தொடர்பாகவும் பலத்த சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இவர் ஒரு பிரித்தானிய பிரஜை என்ற வகையில் பிரித்தானிய அரசு அவரது நீண்டகால சிறை பற்றியும், விடுதலை பற்றியும் போதிய அக்கறை எடுத்துச் செயற்பட்டதாக தெரியவில்லை. இலங்கை அரசுபோலவே தமிழர்கள் விடயத்தில் பிரித்தானிய அரசம் நடந்து கொள்கின்றதா? என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

ஏற்கெனவே இலங்கைச் சிறைகளில் பல தமிழ் அரசியல் கைதிகளின் கொலைகளும், மர்ம மரணங்களும் நடந்தேறியுள்ளன. அவை பற்றி சர்வதேச சமூகம் காத்திரமான நடவடிக்கைகளை எடுத்திருப்பின் கோபிதாஸின் மரணம் தவிர்க்கப்பட்டிருக்கும்.

தொடர்ச்சியாக இடம்பெறும் இச் சிறை மரணங்கள் உடனடியாகத் தடுத்து நிறுத்தப்படல் வேண்டும். இத்தகைய சம்பவங்களுக்கு சர்வதேச விசாரணை நடத்துவதன் மூலமும், அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்வதன் மூலமுமே இவற்றைத் தடுக்க முடியும்.

கோபிதாஸின் மர்ம மரணம் தொடர்பாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினராகிய நாம் எமது கடுமையான கண்டனங்களை தெரிவிக்கின்றோம் என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-6)

# காணாமல் போன உறவுகளின் குடும்பத் தேவைகள் மதிப்பீடு

(கொழும்பு)

இலங்கையில் காணாமல் போனவர்களின் குடும்பங்களின் தேவைகள் குறித்த மதிப்பீடு ஒன்றை தாம் ஆரம்பித்துள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் ஒப்புதலுடனேயே இதை தாம் செய்வதாகவும் அது குறிப்பிட்டுள்ளது. இந்த மதிப்பீடானது காணாமல் போனவர்கள் குறித்த முடிவு தெரியாமல் இன்னமும் தொடரும் சம்பவங்கள் குறித்து மறு ஆய்வு செய்து உறுதி செய்யவும், அதேபோன்று இந்த விவகாரம் குறித்து தீர்வு காணப்பட்ட விடயங்களை முடிவுக்கு கொண்டுவரவும் உதவும் என்று செஞ்சிலுவைச் சங்கம் கூறுகிறது.

16,000 இற்கும் அதிகமான காணாமல் போன சம்பங்கள் குறித்த பதிவுகள் தம்வசம் இருப்பதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. இலங்கையில் 2009-ல் போர் முடிவுக்கு வந்த பின்னர் காணாமல் போனவர்கள் குறித்து ஒரு சர்வதேச அமைப்பு மேற்கொள்ளும் முதலாவது கணிப்பீடு இதுவாகும் என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். (செ-6)

# யுத்தம் முடிவடைந்த பின்னரும் பிரச்சினைகள் தொடர்கின்றன

## சிறுபான்மை மக்கள் குறித்து பஷீர் பேச்சு

(கொழும்பு)

இலங்கையில் கடந்த 03 தசாப்தங்களாக இருந்த இனப் பிரச்சினை தீர்த்து வைக்கப்பட வேண்டுமென உற் பத்தித் திறன் ஊக்குவிப்பு அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளருமான பஷீர் சேகுதாவூத் தெரிவித்தார்.

யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்படுவதால் மாத்திரம் பிரச்சினைகள் முடிந்துவிடுவதில்லையெனவும் அவர் கூறினார்.

கல்குடாத் தொகுதி ஐக்கிய முச்சக்கரவண்டிச் சாரதிகள் சங்கத்தின் 25ஆவது ஆண்டு நிறைவு விழாவும் புதிய காரியாலயத் திறப்பு விழாவும் கடந்தபுதன்கிழமை வாழைச்சேனையில் நடைபெற்றது. இதில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

சிறுபான்மையின மக்களுக்கு பிரச்சினைகள் இருப்பதை அனைவரும் ஒத்துக்கொள்கின்றனர். இப்பிரச்சினைகளை தீர்த்துவைப்பதற்கு அரசாங்கம் ஒத்துக்கொண்டுதான் நாடாளுமன்ற தெரிவுக்குழுவை உருவாக்கியிருக்கிறது. நாடாளுமன்ற தெரிவுக்குழுவை உருவாக்கியிருக்கிற போதிலும் கூட, சிறுபான்மையின மக்களுடைய பிரதான கட்சிகளான ... ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதில் அங்கம் வகிக்கவில்லை. பல இடதுசாரிக் கட்சிகளின் தலைவரகள் அதில் உள்வாங்கப்படவில்லை.

இந்த நாடாளுமன்றக்குழு முறைமை மீள்பரிசீலனை செய்யப்பட்டு புதிதாக தமிழ் மக்கள் தெரிவுசெய்திருக்கிற மாகாண தலைமைத்துவமாக இருக்கின்ற வடமாகாண சபையின் பிரதிநிதிகளும மூவின மக்களும் சமமாக வாழ்கின்ற கிழக்கு மாகாணசபை பிரதிநிதிகளும் புதிதாக உள்வாங்கப்பட்ட புதிய பேச்சுவார்த்தைக்கான களம் திறக்கப்பட வேண்டும்

ஏனைய கட்சிகளும் வடக்கு, கிழக்கு மாகாண சபைகளின் பிரதிநிதிகளும் தெரிவுசெய்யப்பட்டு உள்ளூரிலேயே பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான திட்டத்தை அரசாங்கம் உருவாக்க வேண்டும்.

எனது அரசியல் போராட்டமானது சாதாரண தொழிலாளர்களுக்கான போராட்டமாகவே ஆரம்பமானது. எப்போதும் சமூகத்தில் மிக முக்கியமாக இருப்பவர்களும் தொழிலாளர்கள்தான். மிக மோசமாக புறக்கணிக்கப்படுபவர்களும் தொழிலாளர்கள்தான். தொழிலாளர்களுக்கான அதிகாரத்தைப் பெற்றுக்கொடுக்க வேண்டுமென்பதற்காகத்தான் எனது 19ஆவது வயதில் போராடப் போனவன் நான்.

அந்தக் கருத்துக்களில் ஈர்க்கப்பட்டு எமது மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டுமென்பதற்காகத்தான போராட்டத்தில் பங்கெடுத்தேன் என்றார்.

முச்சக்கரவண்டிச் சாரதிகள் சங்கத்தின் தலைவர் எம்.எஸ்.எம்.சபீர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுகளில் கிழக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் எம்.எஸ். இஸ்மாயில் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது முச்சக்கரவண்டிச் சாரதிகள் சங்கத்தினால் அமைச்சர் பஷீர் சேகுதாவூத் கௌரவிக்கப்பட்ட அதேவேளை, இச்சங்கத்தின் மூத்த உறுப்பினர்கள் 15 பேர் கௌரவிக்கப்பட்டனர். (செ-6)




### தொழுகையின் சிறப்பு

தொழுகை மனிதர்களிடம் சுறுசுறுப்பை ஏற்படுத்தி வறுமையை விரட்டி வளவாழ்வை அடையச் செய்கிறது.

மேலும் இது இறை நெருக்கத்தை ஏற்படுத்தும் என்பதை தொழுகை இறை நம்பிக்கையாளர்களுக்கு மிஃராஜ் (இறை சந்திப்பு) என்ற நபிமொழி உறுதிப்படுத்துகிறது. (நபியே!) உம் குடும்பத்தினரை தொழுது வருமாறு நீர் ஏவுவீராக! அதன் மீது நிலைத்திருப்பீராக! உம்மிடம் உணவை நாம் கேட்கவில்லை. உமக்கு நாமே உணவளிக்கிறோம்...

(திருக்குர் ஆன்:20:132)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவர் வெற்றிக்கிண்ண இறுதிப்போட்டி: யங்ஹென்றீஸ்- கல்வளை விநாயகர் மின்னொளியில் இன்று பலப்பரீட்சை




வலிகாமம் காற்பந்தாட்ட லீக்கில் அங்கத்துவம் பெற்ற காற்பந்து அணிகளுக்கிடையிலான போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன தலைவர் வெற்றிக் கிண்ணத்திற்காகவே இப் போட்டிகள் இடம்பெறுகின்றன.

வலிகாமம் லீக்கில் பதிவு பெற்று அங்கத்துவமுடைய கழகங்கள் இப் போட்டிகளில் பங்கு கொள்கின்றன.

காலிறுதிப் போட்டிகள் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.

இதில் இடம்பெற்ற காலிறுதிப் போட்டியில் அராலி அண்ணா அணியும் விளான் அன்ரனீஸ் அணியும் மோதின. இதில் 2:0 என்ற கோல் கணக்கில் அராலி அண்ணா அணி அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

மற்றைய போட்டியில் இளவாலை யங்கென்றீஸ் அணியும். குப்பிளான் குறிஞ்சிக் குமரன் அணியும் மோதின. இதில் 3:1 கோல் அடிப்படையில் இளவாலை யங்கென்றீஸ் அணி வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

இடம்பெற்ற முதலாவது அரையிறுதியில் இளவாலை யங்கென்றீஸ் அணியும் குப்பிளான் குறிஞ்சிக் குமரன் அணியும் மோதின. இதில் 3:1 கோல் அடிப்படையில் இளவாலை யங்கென்றீஸ் அணி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

மற்றைய அரையிறுதியில் கல்வளை விநாயகர் அணியும் அராலி அண்ணா அணியும் மோதின. இதில் போட்டி நிறைவடைகையில் இரு அணிகளும் 1:1 என சமநிலையிலிருந்தன.

சமநிலை உடைப்பு உதை வழங்கப்பட்ட போது கல்வளை விநாயகர் அணி 3:2 என்னும் கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிக்கு தகுதி பெற்றது.

இறுதிப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் இடம்பெறவுள்ளது. (க-23)

# வடமராட்சியில் புதிய உதைபந்தாட்ட லீக் அங்குரார்ப்பணம்

வடமராட்சி பிரதேசத்தில் உதைபந்தாட்ட கழகங்களின் அதிகரிப்பை தொடர்ந்து பருத்தித்துறை லீக்கிற்கு மேலதிகமாக வடமராட்சி உதைபந்தாட்ட லீக் எனும் பெயரிலான புதிய உதைபந்தாட்ட லீக்கின் அங்குரார்ப்பண நிகழ்வு இன்று வெள்ளிக் கிழமை நண்பகல் 12 மணிக்கு அல்வாய் தெற்கு கிராம அலுவலர் பணிமனையில் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன தலைவர் கௌரவ றஞ்சித் றொட்றிகோவால ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பொதுச்செயலாளர் உபாலி ஹேவகேவும் நிறைவேற்று பணிப்பாளர் அனுரா டீ சில்வாவும் கலந்து சிறப்பிக் கின்றார்கள்.

வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் ஆளுகை பிரிவின் உதைபந்தாட்ட கழகங்களின் தலைவர், செயலாளர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளது. (க-23)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்



சங்கானைப் பிரதேச செயலக இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான பெரு விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன. இதில் இடம்பெற்ற கரப்பந்தாட்டப் போட்டியில் சங்கானை சிவப்பிரகாச இளைஞர் கழக அணி வெற்றி பெற்று சம்பியனாகியது. அவ்வணியினரை படத்தில் காணலாம். (க-23)

# ஸ்டான்லி கல்லூரி வெற்றி

யாழ்.மாவட்ட பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான 2 நாட்கள் கொண்ட கிரிக்கெட் போட்டிகள் இடம் பெற்று வருகின்றன.

அண்மையில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில்இடம்பெற்ற போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் ஸ்டான்லி கல்லூரியும் மோதின.

நாணயற்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பாடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி 127 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் திலக்ஷன் 33, குகப்பிரஷாந் 39 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் ஸ்டான்லி கல்லூரி சார்பில் கம்ஷி 5, விஷ்ணுகானன் 3 விக்கெட்டுக் களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது முதல் இனிங்சில் துடுப்பாடிய ஸ்டான்லி கல்லூரி 9 விக்கெட்டுக்களை இழந்து 273 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் உதயா 92, கலைச்செல்வன் 79, சுஜீகரன் 36, விதுஷன் 29 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் மானிப்பாய் இந்துக் கல்லூரி சார்பில் பிரதீபன் 3, திலக்ஷன், குகப்பிரஷாந், தர்ஷன் தலா ஒரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

146 ஓட்டங்கள் பின்னிலையில் பதிலுக்கு தனது 2ஆம் இனிங்சில் துடுப்பாடிய மானிப்பாய்இ.க.169 ஓட்டங்களைப்பெற்ற நிலையில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் பிரதீபன் 20, குகன் 23, சுஜீவன் 44, டிலக்ஷன் 25 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் ஸ்டான்லி கல்லூரி சார்பில் கம்ஷி 4, விஷ்ணு 2 விக்கெட்டுக் களைக் கைப்பற்றினர்.

24 என்னும் வெற்றி இலக்கோடு துடுப்பாடிய ஸ்டான்லி கல்லூரி ஒரு விக்கெட்டை இழந்த நிலையில் வெற்றி பெற்றது. (க-23)

# இல்ல மெய்வன்மை போட்டி



கட்டுடை சைவ வித்தியா சாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பி.ப. ஒரு மணி முதல் கோபாலன் பாலர் பாடசாலை மைதானத்தில் அதிபர் து.சிவஞானம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண சபை அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்து கொள்வார்.

கௌரவ விருந்தினராக வலி. தென் மேற்கு பிரதேச சபை எதிர்கட்சித் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் கலந்து கொள்வார். (க-23)

# கரவெட்டி இளைஞர் கழக தடகள போட்டிகள்

கரவெட்டி பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் இடம் பெற்று வருகின்றன. இதன் ஒரு அங்கமாக பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான தடகள போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இப் போட்டிகள் இமையாணன் மத்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமையும் இடம் பெறவுள்ளதாகவும் பங்குபற்றும் வீரர்கள் பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (க)





கரைச்சி பிரதேச விளையாட்டு விழா அண்மையில் கரைச்சி பிரதேச செயலர் கோபாலபிள்ளை நாகேஸ்வரன் தலைமையில் கனகபுரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் கலந்து கொண்டார்.சிறப்பு விருந்தினராக மேலதிக அரசாங்க அதிபர் செ.சிறீநிவாசன் கலந்து கொண்டார். கௌரவ விருந்தினர்களாக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல், மாவட்ட விளையாட்டு அதிகாரி செ.சதானந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-254)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வீரர்களின் போரில் வென்றது ஸ்கந்தா



14-வது வீரர்களின் போரை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி கைப்பறியது.

வீரர்களின் போர் எனப்படும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி-தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிகளிற்கிடையிலான கிரிக்கெட் போட்டிகள் கடந்த 26, 27-ம் திகதிகளில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

முதல் நாளில் நாணயற்சுழற்சியில் வென்று துடுப்பாடிய தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 78 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு தனது முதல் இன்னிங்சில் துடுப்பாடிய சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஜனக்ஷன் மற்றும் சரத்குமார் ஆகியோரின் அரைச்சதம் கைகொடுக்க 232 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்களையும் இழந்தது.

பதிலுக்கு 153 ஓட்டங்கள் பின்னிலையில் தனது 2-ம் இன்னிங்சில் துடுப்பாடிய தெல்லிப்பழை மகாஜனக கல்லூரி முதல் நாள் ஆட்டம் நிறுத்தப்படுகையில் 4 விக்கெட்டுக்களை இழந்து 66 ஓட்டங்களைப்பெற்றிருந்தது.

இரண்டாம் நாள் ஆரம்பித்தவுடனேயே விக்கெட்களைப் பறிகொடுக்க ஆரம்பித்து இறுதியில் 45.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 156 ஓட்டங்களைப் பெற்றது. டிலோஷன் 36, ரிஷோத் 34, கபிலன் 17 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் கதேயோன் 49/5, ஜனக்ஷன் 19/2 பாலப்பிரஷாந் மற்றும் பிரஷாந் தலா 1 விக்கெட்டினையும் கைப்பற்றினர்.


இதன் அடிப்படையில் சுன்னாகம ஸ்கந்த வரோதயக் கல்லூரி அணிக்கான வெற்றி இலக்காக 3 ஓட்டங்கள் வழங்கப்பட்டது.

இதன்படி 2-ம் இன்னிங்சில் துடுப்பாடிய சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் சயந்தன் பெற்றுக்கொடுத்த 4 ஓட்டங்களோடு விக்கெட் இழப்பின்றி இப் போட்டியில் 10 ஸ்கந்தா விக்கெட்டுகளால் வென்றது.

இந்த வெற்றியோடு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி 4-வது வீரர்களின் போர் வெற்றியைப் பதிவு செய்தது.

போட்டியின் சிறப்பாட்டக்காரராகவும் சிறந்த பந்து வீச்சாளராகவும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் வீரன் கதேயோன் தெரிவானார். சிறந்த களத்தடுப்பாட்டக்காரராக தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி வீரர் டிலோஷனும், சிறந்த துடுப்பாட்ட வீரராக சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி வீரர் சரத்குமாரும சகலதுறை வீரராக சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் ஜனக்ஷனும் தெரிவானார்கள். இவர்களுக்கான பரிசில்களை மகாஜனன் தி.துவாரகேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு வழங்கி வைத்தார்.

# பாகிஸ்தான் அபார வெற்றி



ஆசியக்கோப்பை கிரிக்கெட் போட்டித்தொடர் பங்காளதேசில் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில் நடப்புச்சம்பியன் பாகிஸ்தானும், புதுமுக அணியான ஆப்கானிஸ்தானும் மோதின.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆப்கானிஸ்தான் களத்தடுப்பைத் தேர்வு செய்தது.

முதலில் களமிறங்கிய பாகிஸ்தான் அணியின் தொடக்க ஆட்டக்காரர் சர்ஜீல் 25 ஓட்டங்களிலும், ஹபீஸ் 10 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

பொறுப்புடன் விளையாடிய ஷெசாத் 50 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பின்னர் வந்த வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழக்க பாகிஸ்தான் அணி சற்று தடுமாறியது.

அந்த அணி 29.3 ஓவர்களில் 117 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளை இழந்திருந்தது.

இக்கட்டான சூழ்நிலையில் பாகிஸ்தான் அணியின் உமர் அக்மல் அதிரடியாக விளையாடி 89 பந்துகளில் 102 ஓட்டங்கள் குவித்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார். இதனால் அந்த அணி 50 ஓவர்கள் முடிவில் 248 ஓட்டங்கள் குவித்தது.

பின்னர் 249 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய ஆப்கானிஸ்தான் அணியில் தொடக்க ஆட்டக்காரர் சட்ரான் 44 ஓட்டங்களிலும், அஷ்கார் 40 ஓட்டங்களிலும், மங்கள் 35 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். பின்னர் வந்த வீரர்கள் அனைவரும் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழக்க, முடிவில் அந்த அணி 47.2 ஓவர்களில் 176 ஓட்டங்களுக்கு சகல விககெட்டுகளையும் இழந்தது.

பாகிஸ்தானின் ஹபீஸ் 3 விக்கெட்டுகள் வீழ்த்தினார். ஆட்ட நாயகன் விருதினை உமர் அக்மல பெற்றார்.

இதன் மூலம் பாகிஸ்தான் போனஸ் புள்ளி பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

## உதைபந்தாட்டப் போட்டி

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் யாழ்.மாவட்ட கட்டளைத் தலைமையகத்தின் இணைப்புடன் நடத்திய சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி நாளை முதலாம் திகதி துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

மாலை 3 மணிக்கு நடைபெறும முதலாவது போட்டியில் சென். அன்ரனிஸ் மற்றும் பாடும் மீன் விளையாட்டுக் கழகங்களும்,

மாலை 4.30 மணிக்கு நடைபெறும் மற்றொரு போட்டியில் இலங்கை இராணுவ அணியும் விமானப் படை அணியும் மோதவுள்ளன.

## நளினி உட்பட...

இந்த நான்கு குற்றவாளிகளின் விடுதலைக்கும் இடைக்காலத் தடை அளிக்கப்படுவதாக இந்தியத் தலைமை நீதிபதி ப.சதாசிவம் தலைமையிலான உச்சநீதிமன்ற அமர்வு நேற்று தீர்ப்பளித்தது.

**மரண தண்டனைக் குறைப்பு**

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கின் முக்கிய குற்றவாளிகளான முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய மூவரின் கருணை மனுக்களை விசாரித்து முடிவெடுக்க இந்திய குடியரசுத்தலைவர் எடுத்துக கொண்ட பத்து ஆண்டுகளுக்கும் மேலான கால தாமதத்தை காரணம் காட்டி, அவர்களின் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைத்து இந்திய உச்சநீதி மன்றம் பெப்ரவரி 18ஆம் திகதி தீர்ப்பளித்திருந்தது.

அதனை தொடர்ந்து பெப்ரவரி 19 ஆம் திகதி இந்த மூன்று பேருடன் ஏற்கெனவே ஆயுள் சிறைத்தண்டனை அனுபவித்து வரும் நளினி, ரொபர்ட் பயஸ், ஜெயகுமார் மற்றும் ரவிச்சந்திரன் ஆகிய நால்வரையும் விடுதலை செய்துவிடுவதற்கு தமிழக அரசு முடிவெடுத்துள்ளதாக தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தமிழக சட்டமன்றத்தில் அறிவித்திருந்தார்.

தமிழக அரசின் இந்த முடிவை எதிர்த்து மத்திய அரசு தாக்கல் செய்த மறுஆய்வு மனுவை அவசர வழக்காக ஏற்றுக்கொண்ட உச்ச நீதிமன்றம் தமிழக அரசின் நடவடிக்கைகளுக்கு இடைக்காலத் தடை விதித்து உத்தரவிட்டிருந்தது.

முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய மூவரை விடுவிக்கக் கூடாது என்று மத்திய அரசு தெரிவித்திருக்கும் ஆட்சேபனைகள் தொடர்பாக இரண்டு வாரத்திற்குள் பதிலளிக்க தமிழக அரசுக்கு உத்தரவிட்டு, அந்த வழக்கை மார்ச் 6-ம திகதிக்கு உச்ச நீதிமன்றம் ஒத்தி வைத்தது.

தமிழக அரசின் முடிவை எதிர்த்து மத்திய அரசு தாக்கல் செய்திருந்த மனு, முருகன், சாந்தன் மற்றும் பேரறிவாளன் ஆகிய மூவருக்கும் மட்டும் பொருந்தும் என்பதால் மீதம் உள்ள நளினி உள்ளிட்ட 4 குற்றவாளிகளை விடுவிப்பதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு வேறு ஒரு மனு தாக்கல் செய்தது. எனினும் இந்த இரண்டு மனுக்களையும் ஒரே விசாரணையாக உச்சநீதிமன்றம் ஏற்று கொண்டுள்ளது. (செ-6)

## யாழ். பல்கலை...

நேற்று வியாழக்கிழமை அதிகாலை உயிரிழந்துள்ளதாக களுவாஞ்சிக்குடி ஆதார வைத்திய சாலையின் வைத்திய அத்தியட்சகர் குணசிங்கம் சுகுணன் தெரிவித்தார்.

களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக் கப் பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையிலேயே இவர் உயிரிழந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இவரின் சடலம் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (செ-6)

## விடுதலைப் புலி...

விடுதலைப் புலிகள் அமைப்புக்கு தடைவிதிக்க ஐரோப்பிய ஒன்றியம் இந்தியாவின் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை முன்னோடியாக கொண்டு செயற்பட்டுள்ளதுடன் இந்திய பயங்கரவாத சந்தேக நபர்கள் தொடர்பில் நியாயமான விசாரணைகளை நடத்தியதா என்பது குறித்து ஐரோப்பிய ஒன்றியம் ஆராயாது செயற்பட்டமை தொடர்பில் நீதிபதிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகளின் தடைக்கு விக்கிப்பீடியாவின் ஆதாரங்களை நம்பகமான ஆதாரங்களாக பயன்படுத்தியமை தொடர்பில் நீதிமன்றம் அதிர்ச்சியடைந்துள்ளது.

அடுத்த ஆறுமாதங்களில் சாதமான தீர்ப்பு கிடைக்கும் என்ற மன நிலையில், விடுதலைப் புலிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் நீதிமன்றத்தை விட்டு வெளியேறினார்.

ஆனால் ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் பிரித்தானியா, நெதர்லாந்து உட்பட ஐரோப்பிய ஆணைக்குழு, விடுதலைப் புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் சேர்த்தன.

நீதிமன்றத்தில் நூற்றுக்கணக்கான புலம்பெயர் தமிழர்கள் கூடியிருந்ததுடன் இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகளும் விசாரணைகள் குறித்த கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

அங்கு மனுதாரர்கள் சார்பில் ஆஜரான ஆம்ஸ்டர்டாம் தளமாக கொண்ட சட்டத்தரணி விக்டர் கோப், விடுதலைப்புலிகள் அமைப்பு, சிலரால் இன அழிப்பு என கூறப்பட்டுள்ள ஒடுக்கு முறை ஆட்சிக்கு எதிராக நியாயமான போராட்டத்தையே மேற்கொண்ட னர் என்பதில் எந்த சந்தேகமும் இருக்க முடியாது என வாதிட்டார்.

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை, சிரியாவின் ஜனாதிபதி பஸார் அல் அசாத்துடன் ஒப்பிட்ட அவர், பயங்கரவாதத்தின் மீதான பிரித்தானியாவின் சோதிப்பு நிலைப்பாடு தொடர்பில் நீதிமன்றத்தின் நினைவுக்கு கொண்டு வந்தார்.

இதே அரசாங்கம் நியாயமான போராட்டத்தை மேற்கொண்ட மண்டேலாவை பயங்கரவாதி என கூறியிருந்ததுடன் பின்னர் அவரது போராட்டம் நியாயமானது என ஏற்றுக்கொள்ளப்பட்டது என கோப் கூறினார்.

அரசியல் விடயங்களுக்காக புலம்பெயர் தமிழர்கள் விடுதலைப் புலிகளை ஆதரித்து அதற்கான முனைப்புகளை மேற்கொள்கின்றனர் என்ற விடயத்தை கோப் மறுத்தார்.

விடுதலைப்புலிகள்போன்று ஆயுத மோதல்களில் ஈடுபடும் போராளிகள் சர்வதேச மனிதாபிமான சட்டங்களுக்கு உட்பட்டவர்கள் என்ற போதும் பயங்கரவாத எதிர்ப்பு பொறிமுறைகள் இல்லை.

விடுதலைப்புலிகளின் தடையை நியாயப்படுத்த ஐரோப்பிய ஒன்றிய பேரவை விக்கிப்பீடியா ஆதாரங்களை பயன்படுத்தியமை நம்பகத்தன்மை தொடர்பான பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது.

இதன் படி ஐரோப்பிய ஒன்றியம் இந்தியா மற்றும் பிரித்தானியாவின் முடிவுகளை வைத்து விடுதலைப் புலிகளை தடை செய்தது முறைமை சர்ச்சைக்குரிய விடயமாக உருவெடுத்துள்ளது. (செ-6)

## ஜெனிவா அமர்வு குறித்து...

தரவிற்கு அக்கட்சியின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜாவும் உடன்பட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் வடக்கு மாகாண சபைக்கும் நெருக்கடிநிலையை ஏற்படுத்தியுள்ள கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இரணைமடுக்குளத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு குழாய்மூலம் குடிநீர் கொண்டு வரும் திட்டம் குறித்தும், ஐ.நா அமர்வில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக அமெரிக்கா கொண்டுவரவுள்ள தீர்மானத்தை வலுப்பெறச் செய்ய சர்வதேச நாடுகளின் ஆதரவைத் திரட்டுவது தொடர்பில் முக்கிய முடிவுகள் எடுக்கும் நோக்குடன் நேற்றைய தினம் யாழ்.பொது நூலகத்தில் விசேட கூட்டமொன்று கூட்டமைப்பினால் ஏற்பாடு செய்யப் பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி கூட்டத்தில் அக்கட்சியின் பொதுச் செயலாளரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா, வடக்கு மாகாண சபையின் முதலமைச்சரும் [illegible] உயர் நீதிமன்ற நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன், கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள், பாராளுமன்ற, மாகாண சபை உறுப்பினர்கள் எனப் பலரும் பங்கு கொண்டிருந்தனர்.

காலை 9 மணியளவில் ஆரம்பமான இந்தக் கூட்டம் பிற்பகல் 4.30 மணிவரை தொடர்ந்து இடம் பெற்றது.

இந்தக் கூட்டத்தில் இரணைமடுக் குளத்தில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு நீர் கொண்டு வரும் திட்டம் குறித்து மட்டுமே பேசப்பட்டுள்ளது.

அத்திட்டம் குறித்தும் இறுதி முடிவு நேற்றைய கூட்டத்தில் எட்டப்பட வில்லை.

இந்நிலையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத் தொடர் எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் இடம்பெறவுள்ளதாலும் இந்தக் கூட்டத்தொடரிலும் அமெரிக்காவினால் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராகபிரேரணையொன்று கொண்டு வரப்படவுள்ளதாக கூறப்பட்டு வரும் பரபரப்பான சூழலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முக்கிய முடிவுகளை நேற்றைய கூட்டத்தில் எடுக்கவுள்ளது என எதிர்பார்க்கப்பட்டிருந்த நிலையில் கூட்டமைப்பின் தலைவர், அக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஜெனிவா அமர்வு குறித்து எதுவும் பேசக் கூடாது என்று கட்டுப்பாடு விதித்துள்ளார்.

அத்தோடு இந்தக் கூட்டத்தில் எந்தவொரு நிகழ்ச்சிநிரலும் கொடுக்கப்படாத நிலையில் நிகழ்ச்சி நிரலின்படி கூட்டத்தை நடத்த ஒத்துழைப்பு வழங்குமாறும் ஜெனிவா அமர்வு குறித்து பேசவேண்டாம் என்றும் கூறியுள்ளார்.

இதேவேளை கூட்டமைப்பின் தலைவரின் இந்த உத்தரவிற்கு அக்கட்சியின் பொதுச் செயலாளரும் உடன்பாடு தெரிவித்த அதேவேளை தமது கட்சி உறுப்பினர்களுக்கு ஜெனிவா அமர்வு குறித்து பேச வேண்டாம் என்று வலியுறுத்தியதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முக்கிய கூட்டம் நடைபெறவுள்ளதாகவும் இதில் ஐ.நா அமர்வு குறித்து முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படும் என்று கூறிவிட்டு மாகாண சபையுடனும் இரணைமடுக் குளத்து நீருடனும் மட்டுப்படுத்திவிட்டதாக கூட்டமைப்பின் தலைமை மீது அக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலேசியா வேலைவாய்ப்பு

மலேசியாவில் வயரிங் வேலைக்கு ஆட்கள் தேவை. இவ்தொழில் சார் கற்கை நெறியை பூர்த்தி செய்து சான்றிதழ் பெற்றவர்கள் விரும்பத்தக்கது. ஒரு வாரத்துக்குள் கீழ்க் குறிப்பிடப்படும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:-0775172516

(5706)

## Apply Today நாளை ஆரம்பியுங்கள்

உங்களுக்காக எப்பொழுதும் நல்ல நிலையில் பல்வேறுபட்ட தொழில் வாய்ப்புகள் உள்ளன. விற்பனையின் அடிப்படை பயிற்சி, வாடிக்கையாளர்கள் சேவை, களஞ்சியப்படுத்துனர், மேற்பார்வையாளர் ஆகிய பணிகளும் உள்ளடங்கும். திறமையான வாய்ப்புகளை நழுவவிடாதீர்கள். திறமைகளை வெளிக்காட்டுங்கள்.

அனுபவம் அவசியமற்றது

Call:-0778979797, 0770771377

(சு-6609)

★ இத்தாலி பறக்க அரிய வாய்ப்பு

★ சுவிஸ், ஜேர்மனி, ஸ்பெயின் செல்ல சில காலம் போதும்.

★ கனடா படிக்க உழைக்க கையிலுள்ள காசே போதும்

திசைகாட்டி (பிறை) லிமிற்

175, பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

021 2219016, 021 5689090

www.thisaivisa.Com

(C-6608)

## மேலும் 3 குடும்பங்கள் விசா வென்றன

★ சாதனைப் பயணம் தொடர்கிறது.

ஆஸி விசா குடும்பமாக வெல்வது எளிது.

53 வயதுக்குட்பட்டவரா நீங்கள்

விரைந்து வாருங்கள் நாங்கள்

பார்த்துக் கொள்வோம்.

திசைகாட்டி (பிறை) லிமிற்

175, பருத்தித்துறை வீதி

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

021 2219016, 021 5689090

(C-6608)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களுக்கு

வெளிவந்துள்ளது புதிய பதிப்பு

## புலமைச்சங்கமம்

ஆக்கம்: M.S.M.நளீம் கெக்கிராவ

V.P.P.ஆடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும் | விலை: 550/=

வெளியீடு:

யுனிலங்காஸ் பப்ளிக்கேஷன்

இல.32, சென்.அந்தனீஸ் மாவத்தை,

கொழும்பு 13. தொ.பே : 077 6258778

எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்

(C-6605)


## புலி இயக்கங்களை....

வழக் கில் தண்டனை பெற்று சிறையில் உள்ள 7 பேரை விடுதலை செய்யும் தமிழக அரசின் முடிவுக்கு உச்ச நீதிமன்றம் தடை விதித்துள்ளது. இந்நிலையில் 4 பேருக்கு தண்டனை குறைப்பு எப்படி நியாயமாகும்?.

கட்சி அலுவலகங்கள் முன்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதை காவல்துறையினர் மற்றும் அரசு அனுமதிக்க கூடாது.

மேலும் கட்சி அலுவலகம் முன்பு தாக்குதல் சம்பவத்தில் ஈடுபடும் அமைப்பினை தடை செய்ய வேண்டும். ஒரு கருத்தில் ஒரு சிலருக்கு உடன்பாடு இல்லையென்றால் நீதிமன்றத்தை அணுகலாம் மாற்றுக் கருத்துக்காரர்கள் தாக்குதல் நடத்துவதை ஏற்க முடியாது. இது போன்றசமூக விரோத சக்திகளை அனுமதித்தால் சட்டம் ஒழுங்கு பாதிக்கப்படும் என்றார்.

(செ-4)

## ஜனாதிபதி ஆணைக்...

முறைப்பாடு செய்ய வந்தவர்களினை தடுத்து பணம் கொடுத்து மரண சான்றிதழினை வழங்கிய சம்பவத்தினை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம்.

இந்த விடயம் ஆணைக்குழுவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட போதும் கூட எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் வேண்மென்றே ஆணைக்குழுவின் முன்னால் சாட்சியங்கள் கொடுக்கப்படாமல் தடுக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த ஆணைக்குழுவின் ஆணைக்குழுவிற்கு நியமிக்கப்படுகின்ற சட்டமா அதிபர் திணைக்களத்தினைச் சேர்ந்த அரச சீட்டத்தரணி சமிந்த அத்துக் கொரன என்பவர், காணாமல் போனோர் வழக்கு விசாரணைகளில் இராணுவத்திற்கு ஆதரவாக ஆஜராகியிருந்து சரணடைவு என்று ஒன்றுமே இடம்பெறவில்லையென வாதாடுகின்றவர்.

இது சட்டத்தின் கீழ் ஒரு பாரிய நோக்கத்தின் முரண்பாடு ஆகும்.

ஆகையினாலேயே தற்போதைக்கு இந்த இரண்டு காரணங்கள் நிமிர்த்தம் காரணமாக இந்த ஆணைக்குழுவின் செயற்பாட்டில் நம்பகத்தன்மை இல்லையென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது என அவர் தெரிவித்தார். (செ-4)

## இரணைமடு-யாழ்...

குழுவின் கருத்துக்கள் உறுப்பினர்களிற்கு அறிவிக்கப்பட்டு அது பற்றி முழுமையாக ஆராயப்பட்டது.

தற்போது இருக்கின்ற முறையில் இரணைமடுத்திட்டம் அமுல் செய்யப்பட்டால் அது தற்போதுவரை இரணைமடு குளத்து நீரை பயன்படுத்தி வந்த விவசாயிகளிற்கு பாதகமான விளைவுகளினை ஏற்படுத்தக் கூடிய பாரிய சாத்தியக் கூறுகள் உள்ளதை உறுப்பினர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

ஆனாலும் இந்தத் திட்டம் மாற்றியமைக்கப்பட்டு அமுல்படுத்தப்படவேண்டும். அது கைவிடப்படக் கூடாது என்பது எங்களுடைய ஏகோபித்த முடிவாக இருக்கின்றது.

ஏற்கெனவே இத்திட்டத்தின் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தற்போது இந் நீரை உபயோகிப்பவர்களிற்கு பாதகம் ஏற்படாமலேயே இந்த திட்டம் செயற்படுத்தப்படவேண்டுமென்ற நிபந்தனை எழுதப்பட்டிருக்கின்றது.

ஆகையால் அந்த அடிப்படையில் இந்த திட்டத்தினை மாற்றியமைப்பதற்கு தேவையான மாற்றங்களினை ஏற்படுத்தும் வகையில் ஆசிய அபிவிருத்தி வங்கியோடும் ஏனையவரோடும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

காலதாமதமில்லாமல் விவசாயிகளிற்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாத வகையில் இத்திட்டம் மாற்றியமைக்கப்பட்டு அமுல்படுத்த வேண்டும்.

இதற்கு ஏதுவாக கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மற்றும் பிற மாவட்டங்களில் இருக்கின்ற நீர்வழங்கிகளினையும் சமகாலத்திலேயே விருத்திசெய்யப்படல் வேண்டும் என முடிவெடுக்கப்பட்டது என அவர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் கூட்டமைப்பின் பாராளுமன்ற, மாகாண சபை உறுப்பினர்கள் அனைவரும் முழுமையாக கலந்து கொண்டிருந்த போதிலும் வடக்கு மாகாண முதலமைச்சரும் முன்னாள் நீதியரசருமான சி.வி. விக்னேஸ்வரன் முழுமையாக கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (செ-4)


### பதவி வெற்றிடம்

**அலுவலக இணைப்பாளர் : (பெண்கள்)**

+ பட்டதாரிகள் மாத்திரம் 50 வயதுக்குட்பட்டவர்கள் மாத வேதனம் 25000/- 2 வருட சேவைக்கான ஒப்பந்தம், 6 மணிக்கே பணி நிறைவடையும்.

**அலுவலக உதவியாளர்** (பியோன்) ஆண்/பெண்

+ 8 ஆம் தரச் சித்தி, வயது 45ற்குள்
+ 2 வருட சேவைக்கான ஒப்பந்தம், 6 மணிக்கே பணி நிறைவடையும்.
+ நேர்முகத்தேர்வு : 01/03/2014 பி.ப. 5.00 மணி

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்

175, பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்

தொலைபேசி 0212219016 , 021 5689090

(C-6608)


## குற்றச்செயல்களை...

மானதுமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்பதே பிரித்தானியாவின் நிலைப்பாடாகும்.

யுத்த நிறைவின் பின்னர் நம்பகமான விசாரணை நடத்தப்பட வேண்டிய அவசியத்தை பிரித்தானியா பல தடவை வலியுறுத்தியுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதமளவில் நம்பகமான விசாரணைகள் ஆரம்பிக்கப்படாவிட்டால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஊடாக விசாரணைகளுக்கு அழுத்தம் கொடுக்க பிரித்தானியா முனைப்பு காட்டும் என குறிப்பிட்டுள்ளது.

மேலும் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டுமென்பதனை ஏனைய நாடுகளுடன் இணைந்து பிரித்தானியா வலியுறுத்தப் போவதாகத் தெரிவித்துள்ளது.

(செ


## மணல் விற்பனைக்கு

கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்த மணல் விற்பனைக்கு உண்டு. தொடர்பு :- கண்ண

4 1/2 ரக்ரர் - 19000 /-

0777 590 792

(C-6612)

## Granton Group Sri Lanka Vacancy

எமது Granton Group Company க்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் உள்ள துடிப்பும் ஆர்வமும் தன்னம்பிக்கையும் கொண்ட இளைஞர், யுவதிகள் தேவைப்படுகின்றனர்.

**எம்மிடம் 4 பணிகள் உள்ளன.**

மேற்பார்வையாளர்-Supervisor

நிர்வாக அதிகாரி-Administrative

சந்தைப்படுத்துனர்-Distributors

முகாமைத்துவ பயிற்சியாளர்-Management Trainee

வயதெல்லை 18-30 தகைமை-O/L or A/L

தங்குமிட வசதி வழங்கப்படும். அனுபவம் அவசியமற்றது.

அழைக்க:-0772712511, 021 499 316

## 31-ம் நாள் நினைவஞ்சலி



| உருவமாக | ஒளியாக |
|---|---|
| 1933 | 2014 |
| 10 | 01 |
| 10 | 29 |

அமரர்

**கந்தன் சின்னத்தம்பி** அவர்கள்

ஓடிவந்துதவிடும் உள்ளம் உனது
உறவெனக் கைதொடும் அன்பும் உனது
வாடிடும் வேளையில் கண்ணீர் துடைத்தாய்
வருந்திடும் போதெல்லாம் மருந்தாய்க் கிடைத்தாய்
ஈடிலாச் செயல்களால் உயர்ந்தாய் கண்டோம்
இணையிலாப் பண்பினால் மிளிர்ந்தாய் கண்டோம்
தேடிக் கிடைக்காத திருவே 'ஐயா'
தேம்பி நாம் அழுதிட எங்கே போனாய்?

இன்று வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அறிவொளி வீதி,
புத்தூர் கிழக்கு, புத்தூர்.

- குடும்பத்தினர் -
0774640212

(5707)

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

*Learn FRENCH The FRENCH Way*

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்



France, Canada வுக்கு திருமணம் முடித்து செல்வோர், மாணவர்கள் மற்றும் French கற்கவிரும்பும் யாவரும் (வடமராச்சி, வன்னி, மற்றும் மன்னாரைச் சேர்ந்தவர்களும்) படிக்கிறார்கள். France இல் தொடர்ந்து French கற்பதற்கும் Embassy விடயங்களுக்கும் எமது *CERTIFICATE* உதவுகின்றது. ஏனெனில் உலகில் French கற்பிப்பதற்கு French அரசாங்கம் அங்கிகரிக்கும் ஒரே நிறுவனம் "AF" மட்டுமே.

புதிய வகுப்பு விரைவில்... உடன் பதிவு செய்யவும்

61, Kachcheri-Nallur Road, Jaffna T.P. 021 222 8093

(கச்சேரியை அடுத்து வரும் சந்தியில் அமைந்துள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)

(5704)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிரவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.02.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.